883

# தமிழரசு

கார்த்திகை



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 NOV 1935

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு | ரூ 1—0—0 |
| | பினங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| | ஜீவிய சந்தா | 20—0—0 |
| | தனிப் பிரதி விலை | 0—1—0 |
| | மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது | 0—2—0 |

மாதிரி சஞ்சிகை இனாம்.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வொரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்.

---

## விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| உட்பக்கம் | ஒன்றுக்கு | 1-மாதத்திற்கு | ரூ. 15—0—0 |
| ,, | அரைப் பக்கத்திற்கு | ,, | 8—0—0 |
| ,, | கால் பக்கத்திற்கு | ,, | 5—0—0 |
| கவர் | 3-வது பக்கத்திற்கு | ,, | 20—0—0 |
| ,, | 4 ,, | ,, | 25—0—0 |

இதர விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,

'தமிழரசு' ஆபீஸ்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

---


வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !!

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் எ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இதன் முன் பாகத்தைச் சென்ற வருட 'தமிழரசு' இதழ்களில் தொடர்ச்சியாகப் படித்த நேயர்கள் நாள்தோறும் இப் புத்தகத்திற்கு ஆடர் செய்துகொண்டே இருக்கிறார்கள். இந் நூலைச் சில பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும் படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை

எட்டணா தான்

சொற்ப பிரதிகளே அச்சிட்டிருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலிவீதி சென்னை.

வெளி வந்துவிட்டது!　　　　வெளி வந்துவிட்டது!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

# ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்துவிட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட்டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மையெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள்களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாதமுதலி வீதி, சென்னை.

# சகல மேக சித்தாதி எண்ணெய்



இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு 1/8 படி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கை கால் பிடிப்பு, உடம்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு

முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினர். அவர் வார்த்தைக்கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரி அண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்ருள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30 }

இப்படிக்கு.
அண்ணாவையங்கார்.

---

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கிவிட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்பித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயைக் கையிருப்பாக வைத்திருக்கிறேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடைச்சலினல் அனேக நாளாய்க் கஷ்டப்படுகிருள். கிருபை கூர்ந்து ஒரு ரூபா வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,

கீழ்வீதி, சீனிவாச ஐயங்கார்,
சைவ முத்தையா முதலி வீதி, சென்னை.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

**ச க ல மே க சி த் தா தி எ ண் ணெ ய்**

**புட்டி 1-க்கு விலை ரூபா 5.**

# இணையற்ற

## அயத்தங்க திராவகம்



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினலாவது அல்லது வேறு எந்த சுரத்தினலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எனும் புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப் படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

## சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக !

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனாதலால் விலை குறைவு செய்து அனுப்பினுல் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமானலு மாவேணுதலால் அதை யனுசரித்த அரைடஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S. V. அக்னீஸ்வரன்.

ஐயா!

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்க திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினுல் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20—6—30, கண்ணுபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

**நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணு 12.**

வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.

# கூழ்ப்பாண்ட லேகியம்



இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எறும்புறுக்கி

நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தாக்கூடியது.

## சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, கூழ்ப் பாண்ட லேகியம், மீன் எண்ணெயைக் காட்டிலும் குணம் செய்கின்றது. கணச்சூட்டுக்கு மேன்மையாய்த் தெரிகின்றது. க்ஷயரோகம் வாராதபடி தடுக்கவும் மேலானதாய்க் காணப்படுகின்றது. மலச்சிக்கல் நீங்குகின்றது. ஆனபடியால் எங்கள் எல்லா ஷாப்புக்கும் மாதா மாதம் 10 பவுன் அனுப்பவும். இந்த லெட்டர் கொண்டுவரும் ஆள்வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேகியம் கொடுத்தனுப்பவும்.

M. C. நஞ்சுண்டராவ். B. A., M. B. & C. M. மைலாப்பூர்.

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையானை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கும் ஜில்லா முனிசீப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தை பெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,
District Munsiff, Tanuku.

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேககாந்தல் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிரகாச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A., B. L., District Munsiff, Bellary.

ஒரு பவுன் புட்டி விலை ரூபா 2.

# அயக்காந்த செந்தூரம்

இந்தச் செந்தூரத்தில் ஒரு அரிசி எடை காலை மாலைகளில் தேனில் சாப்பிட சுரம் நீங்கும். இரத்த விருத்திக்கு இது நல்ல மருந்து. பித்தப்பாண்டு, பித்தசோகை இவைகளுக்கு வெள்ளாட்டுப் பாலில் அரிசி எடை கலந்து சாப்பிட 3 நாளில் வீக்கம் நீங்கும். இரத்த விருத்திக்காகக் குளிர்ச்சியுள்ள கூழ்ப்பாண்ட லேகியத்திலாவது வேறு எந்த லேகியத்திலாவது வைத்துச் சாப்பிடலாம். மற்ற மருந்துகளைப்போல் இது மலம் கட்டாது என்பதே இதன் முக்கிய குணம். வெள்ளாட்டுப் பால் கிடைக்காவிட்டால் பசும் பாலில் சாப்பிடலாம். பாரிச வாயுவுக்கு இது நல்ல மருந்து.

இந்தச் செந்தூரம் அயம், காந்தம் இரண்டும் சேர்த்து 100 புடம் போட்டது. இதை இருமலுக்குத் தேனில் கொள்ள நீங்கி விடும். ஈளை, இருமல், காச இருமல் இவ்விரண்டையும் (பிரான்கைடிஸ் ஆஸ்தமா) மூன்று நாளில் நிறுத்தி விடும். புட்டி 1-க்கு ரூ. 3.

---

எனதன்புள்ள டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, எனது மூத்த குமாரத்திக்குத் தாங்கள் கொடுத்த அயக்காந்த செந்தூரம் கொடுத்ததில் கைகால் வீக்கம், கண்ணில் இரத்தமில்லாமல் வெளுத்திருந்தது இப்பொழுது நீங்கி இருக்கின்றது. உப்பில்லாப் பத்தியம் மூன்று நாளும் வறுத்த உப்பு சுட்டபுளி சேர்த்து பத்தியம் மூன்று நாளும் தீர்ந்து விட்டது. இனிக் கூழ்ப்பாண்ட லேகியத்துடன் சேர்த்துப் பத்தியமில்லாமல் சாப்பிடலாம் என்றால் இந்தக் கடிதம் கண்டவுடன் 1 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. மூலமாய் அனுப்பி வைக்கவும்.

கிருஷ்ணசாமி அய்யங்கார், சைதாப்பேட்டை.

# சிவப்பிரகாச ஜன்னித் தைலம்

நம் தேசத்தில் பாலியத்தினால் மோகத்தினாலும், தேகவலிமையினாலும், நாள் கிழமை பாராமல் ஸ்நானம் செய்து புணரும் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் ஒரு தலைநோய், கழுத்து நரம்பு முதலிய வியாதிகளுக்கு இந்தத் தைலம் மிகவும் உபயோகமானது.

உபயோகிக்கும் விதம்:—இந்தத் தைலத்தைத் தலையில் தடவி இரண்டுநாளைக் கொருதரம் ஸ்நானம் செய்து வரவும். ஸ்நானம் செய்தவுடன் ரசம் சாதம் சாப்பிடவேண்டும். இப்படி 2, 3 ஸ்நானம் செய்வதற்குள் தலைவலி நின்றுவிடும். வேறு பத்தியம் கிடையாது.

5 பலம் கொண்ட எண்ணெய் விலை ரூபா 5.

கிடைக்குமிடம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| மலர் | யுவஹு கார்த்திகைமீ | இதழ் |
|---|---|---|
| 6 | 1935ஹு நவம்பர்மீ 15உ | 11 |

## பொருள் அடக்கம்

ஆசிரியர் குறிப்புகள் ... 802
காங்கிரஸ் மந்திரி பதவி ஏற்கலாமா? ... 807
விசாலாட்சியின் சிரிப்பு ... 811
தனலெக்ஷிமி ... 817
காதலர் கஷ்டங்கள் ... 823
மதியைக் கெடுக்கும் மது ... 834
வீரன் ... 838
உத்தமி ஊர்மிளா ... 843
'நாசி-கை இன்ஸ்யூரன்ஸ்' ... 850
மனம்போல் மாங்கல்யம் ... 852
இந்திய கிராமத்தில் சாக்ரடீஸ் ... 858
வெளி விகடம் ... 865
மதம் மாற்றம் நன்மை தருமா? 867
அப்பாஜியின் அபார தேச சேவை ... 870
கோமளசேகரன் ... 875

குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.




## மதமாற்றம்—பரிகாரமல்ல

சென்ற மாதம் நாசிக்கில் (பஞ்சவடியில்) கூடிய பம்பாய் மாகாணத் தாழ்ந்தவகுப்பார் மகாநாட்டில் தலைமை வகித்த டாக்டர். அம்பேத்கார் சீர்திருத்தவாதிகள் மனம் புண்படும்படியானதோர் காரியத்தைச் செய்துவிட்டார். அவர் தாழ்ந்த வகுப்பாரை எல்லாம் தங்கட்குக் கொடுமை செய்யும் இந்துமதத்தைவிட்டுத் தங்கட்கு சம உரிமையும் அந்தஸ்தும் அளிக்கும் வேறு மதங்களில் சேரும்படி யோசனை கூறினார். மகாநாடும் அவரின் யோசனைப் படியே ஒரு தீர்மானம் நிறைவேற்றிவிட்டது. தாழ்ந்த வகுப்பார் இவ்விதம் செய்தது பல சீர்திருத்தவாதிகளின் மனத்தையும் மகாத்மா காந்திபோன்ற தலைவர்களின் மனத்தையும் பெரிதும் புண்படுத்தி விட்டது. டாக்டர் அம்பேத்காருக்கு மேற்கூறிய யோசனை கூறும்படி தோன்றியது மிகவும் வருந்தத் தக்கது. டாக்டர் அம்பேத்கார் தனது வகுப்பாருக்கு சம அந்தஸ்தும் சம உரிமையும் பெற போராடும் சமூகப் போட்டியில் ஒரு தளர்கர்த்தலொன்றே சொல்லவேண்டும். அவருடைய முயற்சியினால்தான் வரப்போகும் சீர்திருத்தத்தில் தாழ்ந்த வகுப்பாருக்கு அதிகப் பிரதிநிதித்துவமும் சில உரிமைகளையும் வழங்கப்போகின்றனர். சமீபத்தில் ஏற்பட்ட பூனா ஒப்பந்தமும் அவர் கோரியவைகளை அநேகமாகப் பூர்த்தி செய்கின்றன. இவ்வளவு தீரமாகப் போரிட்ட வீரர் இப்பொழுது தனது இனத்தாரை வேறு மதங்களைத் தழுவும்படி கூறியது போர் முனையில் எதிர்த்து நிற்க ஆற்றாது, சேனைத் தலைவன் தனது படையை புறங்காட்டி ஓடும்படி கூறுவதையே யொக்கும்.

டாக்டர். அம்பேத்கார் தான் செய்துவரும் போரில், உயர்ஜாதி இந்துக்கள் தாழ்ந்த வகுப்பாருக்குச் செய்யும் கொடுமைகளை நேரில் பார்க்க அநேக சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கலாம். அதனால் மனமுடைந்துபோய் அவ்விதம் கூறியிருக்கலாம். அதே சமயத்தில் தீண்டாமைப் பேயை ஒழிக்க நாட்டில் பல தலைவர்கள், மகாத்மா

காந்தி, வைதீகக் குடுக்கையான பண்டித மதன்மோகன் மாளவியா போன்ற—தலைவர்கள் செய்துள்ள முயற்சிகளும் செய்யும் முயற்சிகளும் அவருக்கு நன்கு தெரியும். இம்முயற்சிகள் வெகு சீக்கிரத்தில் பலன் கொடுக்கும்படி செய்வதற்காகச் சமீபத்தில் ஹரிஜன இயக்கத்தையும் மகாத்மா ஆரம்பித்துள்ளார். அவ் வியக்கத்தின் பலனாக வட இந்தியாவில் சில ஆலயங்களில் சென்று தொழுவதற்கும் ஹரிஜனங்களுக்கு உரிமை யளிக்கப்பட்டுள்ளன. அவர்களின் குறைகளைக் கவனிக்க ஆங்காங்குப் பற்பல சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. வைதீகம் வேரூன்றிப் பார்ப்பன ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டிருக்கும் தென்னிந்தியாவிலும் தீண்டாமையைப் போக்க உண்மையாக முயற்சிகள் செய்யப்பட்டன. ஹரிஜன இயக்கம் ஏற்படுவதற்கு முன்னமே வைக்கம் வீர ரெனப் பெயர் வாங்கிய திரு. ஈ. வே. ராமசாமி நாயக்கர் தாழ்ந்த வகுப்பாருக்கு வீதிகளில் நடமாடும் உரிமை பெற ஒரு மனத்துடன் போரிட்டார். சத்தியாக்கிரகம் செய்தார். பின்னர்க் கள்ளிக்கோட்டையில் தாழ்ந்த வகுப்பாருக்கு ஆலயத்திற்குட் சென்று தொழும் உரிமைபெறத் திரு. கேளப்பன் உண்ணாவிரத மிருந்தார். இவைகள் எல்லாம் தீண்டாமையை யொழித்துத் தாழ்ந்தவகுப்பாரை முன்னேற்றச் செய்த உண்மையான, மனத் தூய்மையான செய்கைகளல்லவோ? இவைகள் எல்லாம் டாக்டர். அம்பேத்காருக்கு நன்கு தெரிந்தவைகளே. எனவே எல்லா விஷயங்களையும் தெரிந்த டாக்டர். அம்பேத்கார் தாம் இவ்வளவு காலம் பாடுபட்டும் நிலைமை தாம் நினைத்த அளவுக்குத் திருந்தவில்லையே என்ற ஆத்திரத்தில் அவ்விதம் கூறியிருக்கலாம். டாக்டர். அம்பேத்கார் தனது சொற்பகால உழைப்புக்கு ஏற்ற கூலி கிடைக்கவில்லையே என்று இவ்வளவு சீக்கிரத்தில் பொறுமையை இழந்துவிட்டார். கடும்வேகமாகச் சமுதாய சீர்திருத்தம் செய்ய ஆரம்பித்தால் அது குழப்பத்திலும், கலகத்திலுமல்லவோ கொண்டுபோய்விடும். மற்றும் மக்களின் மனப்பான்மையில் மாற்றம் இல்லாது வலுக்கட்டாயமாய் ஒரு சீர்திருத்தம் செய்தால் அது என்றும் நிலைபெற்று நிற்குமா? நிற்காது. இவைகளை எல்லாம் சிந்திக்காது டாக்டர். அம்பேத்கார் போன்றவர்கள் அவ்விதம் கூறியது வருந்தத்தக்கதும், நாட்டின் துர்பாக்கியமுமாகும்.

மதம் மாறுவதால் இந்துக்கள் சமமாய்க் கருதுவார்களா? உதாரணமாக சமீபத்தில் சேலத்திற்கு அருகில் 60 வீடுகளுள்ள

ஒரு சேரியில் 59 வீட்டினர் கிறிஸ்துமதத்தைத் தழுவினர் என்று கூறப்படுகிறது. அம்மதத்தைத் தழுவிவிட்டவர்களை எல்லாம் இப்பொழுது இந்துக்கள் சம அந்தஸ்துடனும் தீண்டக்கூடிய ஜாதியினராகவும் நடத்துகின்றனரா?

தீண்டாதாருக்கும் ஓர் வார்த்தை சொல்ல விரும்புகிறோம். அவர்கள் வகுப்பை சாராதவர்கள் அவர்களை முன்னேற்ற எவ்வளவு பாடுபட்டாலும் அது அவ்வளவு எளிதில் பலனளிக்க முடியாது. எனவே அவர்களும் தங்களை ஒரு சிறிது சீர்திருத்திக் கொள்ள வேண்டும்; கல்வி கற்கவேண்டும்; நடையுடை பாவனையிலும் சிக்கனம், பொருளாதாரத்திலும் திருந்த வேண்டும். இவைகள் இருந்தால் அவர்கள் கோரும் பலன்கள் வெகு எளிதில் தானாகவே கைகூடும்.

உயர்ஜாதி இந்துக்களும், வைதீகர்களும் தங்கள் மனப்பான்மையை மாற்றவேண்டும். இல்லையேல் இந்து சமூகத்தின் ஜனத்தொகை குறைந்து அது அருகிவிடும். அப்பொழுது இந்துமத தர்மத்தைக் காப்பதாகச் சொல்லித் தீண்டாமையை நிலைநாட்டப் போரிட்டவர்கள் இந்து மதத்துக்கு இந்தப் பெரும் அநீதியை, மாபெரும் தீங்கைச் செய்தவர்களாவர். சமூகம் அருகிவிடின் சமூக வாழ்வும் கஷ்ட நிலையை அடைந்துவிடும். அதற்கு இப்பொழுது ஜெர்மனியில் யூதர்கள் படும்பாடே கண்முன் காணும் தகுந்த சான்றாகும். வைதீகர்கள் இனிமேலாவது தீர யோசித்து, தங்கள் மனப்பான்மையை மாற்றி மதிநுட்பத்துடன் நடப்பார்கள் என்று நம்புகிறோம்.

## பொருத்தமற்ற செய்கை

அகில இந்தியக் காங்கிரஸ்கமிட்டி சென்னையில் கூடி காங்கிரஸ் வாதிகள் உத்தியோகம் ஏற்கும் விஷயத்தைப்பற்றி யோசிக்க இது உசிதமான சமயமல்ல என்று தீர்மானித்துவிட்டது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை இப்பொழுது சென்னையில் கொண்டு வந்து கூட்டுவானேன்? இங்கு இந்த உத்தியோகமேற்கும் விஷயத்தைப்பற்றி வாதிக்கும்படி சென்னை காங்கிரஸ்வாதிகள் வற்புறுத்துவானேன்? என்ற ஒரு நியாயமான கேள்வியைப் பலர் கேட்கின்றனர். சென்னை காங்கிரஸ்வாதிகளின் மனப்பான்மை எப்படிப்பட்டது என்பது சென்னை மாகாண வாசிகளுக்கு மட்டுமல்ல, வட இந்திய

வினும் எல்லோருக்கும் நன்கு தெரிந்ததே. ஒருவர் இருவரைத்தவிர மற்றைய காங்கிரஸ் வாதிகளுக்கு எல்லாம் எப்பொழுதும் மந்திரி பதவிகள் மீதும் மற்றைய அரசாங்கப் பதவிகள் மீதுந்தான் மோகம்; அவர்கள் எப்பொழுதும் உத்தியோகம் ஏற்கக்கூடாது என்னும் காங்கிரஸ் கொள்கையை எதிர்த்தே வந்திருக்கின்றனர், வருகின்றனர். உத்தியோகம் ஏற்கும் விஷயத்தைப்பற்றி மூச்சு விடுவதற்கும் காங்கிரசில் இடமில்லாத காலத்திலும்கூட, திரு. சீனிவாச ஐயங்கார் தலைமைவகித்த கௌகத்தி (1926) காங்கிரசிலுங்கூட சென்னை காங்கிரஸ்வாதிகளை மட்டும் விதிவிலக்குச்செய்து, உத்தியோகம் ஏற்க அனுமதிக்கவேண்டும் என்று மன்றாடினர். ஆனால் கௌகத்தி காங்கிரஸ் அதைச் செவியில் போட்டுக்கொள்ளவே யில்லை. பாவம்! அவர்கள் ஆசை வீணாயிற்று. அப்பொழுதே உத்தியோக மோகம் கொண்டிருந்த சென்னை காங்கிரஸ்வாதிகள் இப்பொழுது நாடிருக்கும் நிலைமையில் சும்மா இருப்பார்களா?

நிற்க, இப்பொழுது காங்கிரஸ் கமிட்டி உத்தியோகம் ஏற்பதைப்பற்றி யோசிக்க இது தருந்த சமயமல்ல என்று தீர்மானித்தது பொருத்தமானதா என்பதே இப்பொழுது கேள்வியாகும். காங்கிரஸ் கமிட்டி இவ்விதம் தீர்மானித்தது பொருத்தமற்றதென்றே நாம் கருதுகிறோம். காங்கிரசின் கொள்கையினால், வரிகொடா இயக்கத்தினால் நாட்டிற்கு நன்மை ஏற்படவில்லை என்று கண்டு காலஞ்சென்ற தேசபந்து சித்தாஞ்சன்தாஸ் காங்கிரஸ் கொள்கையில் மாறுதலைப் புகுத்தினார். அவர் காங்கிரஸ்வாதிகள் சட்டசபைகளைக் கைப்பற்ற வேண்டுமென்றார். ஆனால் உத்தியோகம் ஏற்கக்கூடாது என்றும், சட்டசபையில் முட்டுக்கட்டைபோட்டு அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்யவேண்டும் என்றும் ஏற்படுத்தினார். அந்த முட்டுக்கட்டை கொள்கையினாலும் நாட்டிற்கு எவ்வித நன்மையும் விளைந்தபாடில்லை. எனவே, அக்கொள்கையினாலும் பயனில்லை என்று காங்கிரஸ்வாதிகள் சட்டசபைகளிலிருந்து (1930?) ராஜிநாமாச் செய்தனர். மீண்டும் சட்டமறுப்பு, சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தனர். இவைகளால் அரசாங்கத்தின் கையைக் கட்டிப்போட முடியவில்லை. எனவே இப்பொழுது காங்கிரசுக்கு சட்டசபைகளைக் கைப்பற்றி உத்தியோகம் ஏற்று, அதன்மூலம் தன் கொள்கைகளை நிறைவேற்ற முயன்று பார்க்கும் ஒரே வழிதானிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கும்போது, சட்டசபைகளைக் கைப்பற்றத் தீர்மானித்த

காங்கிரஸ், உத்தியோகம் ஏற்கும் பிரச்சினையை ஒன்றும் சொல்லாமல் வைத்திருப்பது பொருத்தமற்ற செய்கையாகும்.

## இத்தலி—எதியோபியா யுத்தம்

இத்தலி—எதியோபியா யுத்தம் ஆரம்பித்து இன்றைக்கு சுமார் 45 நாட்களுக்கு மேலாகிறது. இதுவரை பெரும் முஸ்தீபாக நிலையாக நின்று எந்த விடத்திலும் சண்டை நடந்ததாகத் தெரியவில்லை. வரும் செய்திகளும் ஒரு சார்பானதாகவே இருக்கின்றன. அவைகள் இத்தலிப் படையைப்பற்றியும் அவைகளின் செயல்களைப் பற்றியுமே கூறுகின்றன. எதியோபிய சேனையைப்பற்றி ஒன்றும் கூறுகின்றதில்லை. இத்தலிப்படை அடோவா, அடிகிரேட், அக்குசும் என்ற ஊர்களையும் மற்றும் சில ஊர்களையும் கைப்பற்றி யிருப்பதாய் கூறப்படுகிறது. இருதிறத்துச் செய்திகளும் சரிவாக் கிடைக்கின்றதில்லை. எனவே இந்நிலையில் அநேகமாய் யார் வெற்றியடைவார்கள் என்று ஜோசியம் கூறுவதும் சாத்தியமில்லாத காரியம்.

நிற்க அகிலதேச சபை சண்டையை நிறுத்தச் செய்யும் பொருட்டு இத்தலிக்கு நிர்ப்பந்தங்கள் செய்யத் தீர்மானித்து விட்டது. ஏற்கனவே சுமார் முப்பத்திரண்டு நாடுகள் அம்முறையைக் கையாண்டுவிட்டன. அதாவது இத்தலிக்கு சில சாமான்களை, முக்கியமாய் யுத்தத்திற்கு உபயோகப்படுத்தக் கூடிய சாமான்களை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று உத்தரவுகள் போட்டுள்ளன. எல்லா நாடுகளையும்விட ரஷ்யா இன்னுமொருபடி முன்னேறியுள்ளது. அது இத்தலியுடன் லேவாதேவியும் செய்யக்கூடாது என்று உத்தரவு போட்டுள்ளது. எல்லாவகை நிர்ப்பந்த முறைகளையும் அனுசரிக்க அகிலதேச சபை நவம்பர் 18-ந் தேதியைக் குறிப்பிட்டிருக்கிறது. அன்று முதல் இத்தலிக்கு எல்லாவகையிலும் நிர்ப்பந்தங்கள் உண்டாகும் என்று நம்புகிறோம். அகிலதேச சபை இவ்விதம் நடந்து எதியோபியாவுக்கு மறைமுகமாக ஆதரவளிப்பது ஒரு சிறிது ஆறுதலளிப்பதா யிருக்கிறது. அகிலதேச சபை தனது இத்தகைய செய்கையால் தான் முன்னிழந்த செல்வாக்கைச் சிறிது பெற்றுவிட்டது. அது கடைசிவரை இவ்விதமே செய்து இத்தலியைச் சண்டையை நிறுத்தி சமாதானம் செய்து கொள்ளும்படி செய்யுமானால் அதற்கு உலகில் என்றும் பொன்றுப் பேரும் புகழும் உண்டாகும் என்பதிலையமில்லை. அப்பொழுது இதுவரை அகிலதேச சபையில் சேராதிருந்த நாடு

# காங்கிரஸ் மந்திரி பதவி ஏற்கலாமா?

[ஓர் அநுதாபி]



நமது நாட்டிலே பெரும் பணக்காரராய் விளங்கிய சி. ஆர். தாஸ், பண்டித மோதிலால்நேரு முதலானவர்கள் தங்கள் பெருஞ் செல்வத்தையும் கொடுத்து காங்கிரசின்மூலம் நம் மக்கள் சுயராச்சியம் பெறல்வேண்டும் என்ற நோக்கத்தோடு வேலை செய்தார்கள். மகாத்மா காந்தியவர்களும் மற்றும் பல தேச பக்தர்களும் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்து தடியடி வாங்கல், சொத்தைப் பறிகொடுத்தல், ஜெயிலுக்குப்போதல் முதலான காரியங்களைச் செய்தனர். அத்தகைய தியாகிகள் இருந்த காங்கிரசின் பேரால் இன்று தேர்தலில் போட்டிபோட்டு எல்லாப் பொது ஸ்தாபனங்களையும், சட்டசபைகளையும் கைப்பற்றி அரசாங்கம் திகைக்கும்படியான முட்டுக்கட்டை போட்டு, லார்டு மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தத்தையும் 1936 அல்லது 37-ல் வழங்கப்போகிறதாய் சொல்லும் சீர்திருத்தத்தையும் உதறித் தள்ளவேண்டும்; ஆதலால் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு ஓட்டுப் போடுதல் நலம் என்று கூறிக்கொண்டு தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும் வேலைசெய்து வருகின்றனர்.

இன்று காங்கிரசின் பேரால் தேர்தலில் நிற்கும் அன்பர்கள் ஒத்துழையாமையை மகாத்மாகாந்தி அவர்கள் ஆரம்பித்த காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியிலும், மிதவாத கட்சியிலும், சுயேச்சைக்கட்சியிலும் போய் சேர்ந்துகொண்டனர்.

தடியடிபட்டும், ஜெயிலுக்குப் போயும், தேசத்துக்கு உழைத்த மெய்யன்பர்கள் இன்றைய தேர்தலில் எந்த ஸ்தானத்திற்

---

களும், சேர்ந்து விலகிவிட்ட நாடுகளும் சேர விரும்பும். எனவே பின்னர் அது அண்டினோரை ஆதரிக்கும் அன்பு கனிந்த சபையாய் உலகுக்கே ஒரு நடுநாயகமணியாய் விளங்க இடமுண்டு.

கும் நிற்பதாய் தெரியவில்லை. மேலும் உண்மைத் தொண்டர்கள் சட்டசபைகளுக்கு வெளியிலிருந்து அரசாங்கத்திற்கு முட்டுக்கட்டை போடவேண்டும் என நினைக்கின்றனர். காங்கிரஸ் மகாசபையின் தீர்மானத்தை எதிர்க்க இஷ்டமில்லாமல் வேடிக்கை பார்க்கும் நிலையில் தீவிர கட்சியினர் இருக்கின்றனர்.

சட்டசபையில் காங்கிரஸ்காரர்கள் நுழைந்து பதவியை ஏற்றுக் கொண்டால் முதலில் 'ராஜாவிற்கு விரோதமில்லாமல் அரசரின் பிரதிநிதியாய் இருந்து இராஜகட்டளைக்குப் பணிந்து (கட்டுப்பட்டு) அரசாங்கத்தை நடத்துகிறேன்' என்ற ராஜவிசுவாச பிரமாணத்தை செய்து விட்டு, உள் நுழைந்தபின் அதற்கு விரோதமாய் எப்படி நடக்க முடியும் என நினைக்கும் பலர், சட்டசபைப் பிரவேசம் நாட்டுக்கு நன்மை பயக்காது, சட்டசபையில் நுழைந்தாலும் பதவியை ஏற்றுக்கொள்ளக்கூடாது எனக் கருதுகின்றனர்.

'நான் பிரதம மந்திரியாய் வருவேன். சுயராச்சியம் உடனே கிடைத்துவிடும்' என்று பொதுக்கூட்டங்களில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவரும் அவர் சகாக்களும் கூறிவருகின்றனர். அதை நம்பி அநேகர் பதவி மோகத்தால் (வெற்றி பெருவோம் என்ற எண்ணத்தால்) காங்கிரசில் சேர்ந்து காங்கிரஸ் அபேட்சகர்களாய் தேர்தலுக்கு நிற்கின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் கடன் அதிகரித்து பாப்பராய் இருக்கும் ஒரு சிலர் ஜில்லாபோர்டு தலைமைப் பதவியைப் பெற சிண்டிக்கேட்டை ஏற்படுத்தி அதற்கு தலைமைபூண்டு ஊர் ஊராய் சுற்றி 'உன்னை தேர்தெடுக்கின்றேன்' எனக்கூறி ஒவ்வொரு அபேட்சகரிடமும் ரூபாய் திரட்டியும் தொண்டர்கள் செலவுக்கென கட்டணம் 25 ரூபாய் வசூலித்தும் தங்கள் வருவாயை விருத்தி செய்து கொள்கின்றனர்.

பல பொதுஸ்தாபனங்களில் தலைமை வகித்து ஆயிரக்கணக்காய் கொள்ளையடித்த நண்பர்கள் ஜில்லாபோர்டிலும் சேர்ந்து கொள்ளையடிக்க முயற்சிப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

ஜில்லா போர்ட்டில் உள்ள சுமார் 600 வாத்தியார்மார்களின் ஒருமாத சம்பளத்தை எடுத்துக்கொண்டு வாத்தியார் மார்களிடம் கையெழுத்து வாங்கிவிடலாம். கண்டிராக்டர்களிடம் 100க்கு 15 விகிதம் கமிஷன் வாங்கலாம். வாத்திமார்களின் சம்பள உயர்வுக்கு நபர் ஒன்றுக்கு 25 முதல் 200 வரை வாங்கிவிடலாம். எனவே, உத்தம தியாகிகளே ஜில்லாபோர்டில் தலைமைப் பதவிக்கு உரியவராவர்.

காங்கிரஸ் பிரசாரகர் நாட்டுக்கு சுயராச்சியம் வாங்கித் தருவதாயும் ஆங்கிலர்களை நாட்டிலிருந்து துரத்திவிடுவதாயும் கூறுவதை நம்பும் மக்களின் போலி நம்பிக்கையைக் காணும் அபேட்சகர்கள், போட்டியில்லாமல் தேர்தலில் வெற்றிபெறலாம என்ற நோக்கத்தால் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தேர்தலுக்கு நிற்கின்றனர்.

முற்கால அரிச்சந்திரன், தசரதன், பாண்டவர்கள் முதலான அரசர்களின் சரித்திரங்களைப் படித்து அது மெய் என்ற நம்பிக்கையுடன் இருக்கும் இந்தியர்கள் தற்கால அரசாங்கத்தையும் அப்படியே எண்ணியிருப்பார்களேயானால் அது பெரும் ஏமாற்றத்தைத் தரும். காங்கிரஸ்காரர்கள் சட்ட சபைகளைக் கைப்பற்றினாலும், மினிஸ்டர் பதவியை அடைவது கஷ்டம் என்பதை உணர்தல்வேண்டும். ஏனெனில் அரசாங்கத்தை நடக்கவொட்டாமல் தடைசெய்து முட்டுக்கட்டை போடுவோம் (அதாவது வரியை வேண்டாம் என்போம், உப்பு வரியை எடுத்துவிடுவோம், கள்ளு சாராயக் கடைகளை எடுத்துவிடுவோம், அன்னியநாட்டுச் சாமான்களை தடுத்துவிடுவோம்) என்று சொல்லும் கட்சியினர்கையில் அரசாங்கத்தை ஒப்புவிக்கும் நிலையில் இன்றைய அரசாங்கம் இருக்குமானால், இவர்கள் சொல்லுவதை நம்பலாம். இன்றைய அரசாங்கம் மெஜாரிட்டியை கண்டு, தங்கள் எதிரிகளிடம் மந்திரிபதவியை அளிக்கும் என்பது பகற்கனவே.

தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவர் பிரதம மந்திரி பதவியை அடைந்து பணம் திரட்டிவிடலாம் என்ற ஆசையினால் மேடைகளில் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடுவதாய் சொல்லுகிறார். இது பகற்கனவாய் முடியும் என்பதை தேர்தலுக்கு பிறகு உணர்வார். அரசாங்க நடவடிக்கைகளை செவ்வனே நடத்திவர எண்ணங்கொண்ட எந்த அரசாங்கமும் தங்களை எதிர்த்துப் போராடிக் கவிழ்க்க வந்துள்ளவர்களிடம் பொறுப்பைக் கொடுக்குமா? என்பதை காங்கிரஸ் தலைவர் உணராமல் பேசுவது பணப் பேராசையேயாகும்.

மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டால் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கவேண்டும். இல்லாவிடில் ராஜினாமாச் செய்யவேண்டும்; இதுவே முறை. இம்முறையில் காங்கிரஸ் மந்திரி பதவியை ஏற்று எப்படி எதிர்க்க முடியும்? இது சாத்தியமில்லை. ஆனால் மந்திரியான பிறகு பண ஆசையாலும் பதவி மோகத்தாலும் சாக்குப் போக்குச் சொல்லி காலங் கடத்தி சம்பளம் பெறலாம். இது தேசத்துரோகம்.

எனவே எக்காரணங்கொண்டும் காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவியை வகிக்க முடியாது.

தேசத்தொண்டே பெரிதாக எண்ணிய ஜவர்லால்நேரு அவர்கள் இங்கிலாந்தில் பேசியுள்ள பொன்மொழியை நோக்குதல் வேண்டும். 'என்னுடைய நாட்டு மக்கள் சுதந்திரம் பெற நான் எவ்வளவு கஷ்டத்தை வேண்டுமானாலும் அடையத் தயாராய் இருக்கிறேன்' என்று கூறியது உண்மை காங்கிரஸ் தொண்டாகும்.

காங்கிரஸ் சபையானது மந்திரி பதவியை ஏற்குமானால் அரசாங்கத்தோடு போராடி மக்களுக்கு சுதந்திரம் வாங்கித் தர ஒருவரும் இல்லா தொழிவர். அரசாங்கத்திற்கு வெளியிலிருந்தும் உள்ளிருந்தும்

ஒத்துழையாமை மூலமாகவும் சாத்விக எதிர்ப்பாலும் நமக்கு சுயராச்சியம் கிடைக்க வேண்டுமே யொழிய வேறு காரணத்தால் முடியாது என்பது இதன்மூலம் அறியக் கிடக்கின்றது.

### ஸ்ரீ ஜெயபிரகாசர் எச்சரிக்கை

'மந்திரி பதவிகளை ஏற்றுக்கொள்வதானது காங்கிரஸின் நிலைமையை நூறு அவசரச் சட்டங்களைவிட அதிகமாக பாதிக்கும்' என்று ஸ்ரீ ஜெயபிரகாச நாராயணன், நாகபுரிடிவிஷன் அரசியல் மகா நாட்டை நவம்பர் 2-ஆந் தேதி மாலை ஆரம்பித்து வைக்கையில் குறிப்பிட்டார்.

காங்கிரஸை பலப்படுத்தவேண்டியதே மகாநாட்டின் நோக்கமேயன்றி, அதன் சக்தியைக் குறைப்பதல்ல. புதிய சீர்திருத்தத்தை தகர்த்தெரிய வேண்டுமானால், பதவி மோகம் கூடாது.

---

*மாமியார்:*—(தன் மருமகளைப் பார்த்து) அடி முளீ! பாவி! படுத்த பாயும், நனைத்துவைத்த சீலையும் அப்படியே இருக்கிறதே. கொஞ்சமாவது நினைவு இருக்கிறதா? என்ன பிள்ளையார்மாதிரி உட்கார்ந்து இருக்கிறயே?

*மருமகள்:*—(கோபமாக) தட்டுவாணீ, தட்டுவாணீ, தட்டுவாணீ, சும்மா வாய் வீசாதே. நான் உன் பணியாளல்ல, வண்ணாத்தியும் அல்ல, நினைவிருக்கட்டும்.

(மாமியார் தன் மகனிடத்தில் நடந்தவற்றை சவிஸ்தாரமாய் சொன்னபிறகு) *மகன்:*—(தன் மனைவியைப் பார்த்து) ஏன்டி என் தாயாரை என்னவென்று திட்டினுய்?

*மனைவி:*—தட்டுவாணீ என்று மூன்றுதரம் சொன்னேன்.

*புருஷன்:*—(சற்றுயோசித்து, தன் தாயாரைப் பார்த்து) ஏன்டி அம்மா, உன்னை பூஜித்தாளென்று நினைக்கிறேன். அவள் உன்னை நிந்திக்கவில்லை.

*தாயார்:*—ஏன்டா, இருவரும் ஒரே பேச்சுபோ லிருக்கிறதே.

*மகன்:*—'அப்படியில்லை. கொஞ்சம் கவனி! தட்டுவாணீ என்று சொன்னுள் அல்லவா, அதற்குப் பொருள் என்னவென்றால் 'தட்டு' என்றால் கமலம்; வாணி என்றால் சரஸ்வதி. ஆகவே தட்டுவாணி என்றால் கமல சரஸ்வதி என்று உன்னை நினைத்து சொல்லிருப்பாள்" என்று பளிச்சென்று பதில்சொன்னுன். —எம். பொன்னுவாடன்

*ராமு:*—அவன் என்னடா என்னைக் கொஞ்சங்கூட சட்டை பண்ணலே?

கோபு:—நீ சட்டை போட்டுக்கொள்ளாமல் அங்கே போகலாமோ?

—திருவை கே. வைத்தியநாதன்

# விசாலாட்சியின் சிரிப்பு

[திருவையாறு கே. வைத்தியநாதன்]



தைமாதத்தில் ஓர் தினம். அன்று அதிகாலையில் கடுமையான மூடுபனி. கிழக்கு அடிவானத்தில் வெளிச்சம் தோன்றியும், எதிரே வருபவர்களைக்கண்டு கொள்ள முடியவில்லை. அந்த வேளையில் கதிர்வேலன் என்ற வாலிபன் ஒருவன் தன் தந்தையின் தொந்திரவுக்காற்றாது படுக்கையை விட்டெழுந்து வயலைப் பார்த்துவரச் சென்றான். அவனுக்குச் சுமார் இருபது பிராயமிருக்கலாம். அவனது சிகையின் அமைப்பைப் பார்த்த மாத்திரத்தில் அவன் நகரவாழ்க்கையில் பெரிதும் ஈடுபட்டவன் என அறிந்துகொள்ளலாம்.

மெல்ல வாப்புகளில் நடந்துசென்று வயல்களுக்கு மத்தியிலுள்ள ஒரு சிறு களமேட்டைக் குறுகினான் அம்மேட்டைச் சுற்றியுள்ள வயல்கள் யாவும் அவனது பிதாவின் சுயசம்பாத்தியத்தால் வந்தவை. வீட்டிற்கு உபயோகமாகுமென்று அக்களமேட்டில் சிறு காய்கறித் தோட்டம் ஒன்றை அவர் நிறுவியிருந்தார். கதிர்வேலு அத்தோட்டத்தைச் சுற்றி வருகையில் ஒருபுறத்தில் இலைகளும், கொடிகளும் அசையும் ஓசை கேட்டது. அங்கு சென்று உற்று நோக்கினான். ஆ! என்ன விந்தை! ஒரு யுவதி தன் உடம்பை மறைத்தவண்ணம் இலைகளுக்குள் குப்புறக்கிடந்தாள்.



'யார் அது! எழுந்திரு' என உரத்துக் கூவினான். எவ்விதப்பதிலும் இல்லை. உடனே தன் கால்களால் மெல்ல அசைத்துப் பார்த்தான். அப்போதும் அவள் எழுந்தபாடில்லை. உனே 'ஆ! பிரேதம்!' என அலறிக்கொண்டு அப்பாலோடினான். அச்சமயம் பார்த்து, அம்

மங்கை மெதுவாக எழுந்து நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்துவிட்டு ஓட யத்தனித்தாள். அதுகண்ட கதிர்வேலன் அவளருகில் பாய்ந்து ஓடி அவளைப் பிடித்துக்கொண்டான்.

தழைகளினின்று சொட்டிய பனித்துளிகளால் அவளது கிழிந்த புடவை நனைந்திருந்தது. அதைப் பிழிந்தவண்ணம் தன் முகத்தை அப்பால் திருப்பிக்கொண்டு நின்றாள்.

அப்போது பனியின் முறுக்குந் தளர்ந்தது. கீழ் அடிவானத்தில் கதிரவன் தன் கிரணங்களைப் பாப்பிக்கொண்டு எழுந்தான். அந்தப் பொன் ஒளியில் இருவரும் குளித்து நின்றார்கள். மாசுமறுவற்ற அவளது வதனத்தில் தோன்றிய இயற்கை ஜோதியில் அப்படியே சொக்கிப்போய் நின்றான் கதிர்வேலன். சிலவினாடிகளில் அவனது வதனத்தில் தோன்றிய அன்பும் பரிவும் கலந்த உணர்ச்சி, அவளுடைய கடைக்கண் பார்வைக்குத் தப்பவில்லை. உடனே மனோதிடங் கொண்டவளாய், 'நாங்கள் ஏழை. என் தகப்பனாரிடத்திலுள்ள ஆசையால் இந்தக் காரியஞ் செய்யத்துணிந்தேன். கொஞ்சம் மனம்வைத்து என்னை விட்டுவிடுங்கள்' என்று கெஞ்சினாள்.

'இப்போது நான் உன்னை ஒன்றும் செய்யப்போவதில்லை. அதற்காக நீ கவலைப்படவேண்டாம். உன்னை முனியமூப்பனது குடிசையில் எப்போதோ கண்ட நினைவிருக்கிறது. நீ அவனுக்கென்ன வேண்டும்?'

'அவர்தான் என் தகப்பனார். அவர் இப்போது காயலாவாக கிடக்கிறார். அவருக்காகவே இந்தக் காய்கறிகளைப் பறிக்க வந்தேன்.'

'உன் பெயரென்ன?'

'விசாலாட்சி'

'நல்ல அழகான பெயர். விசாலம்! என்னைக்கண்டு பயந்தா நீ அப்படித் தரையில் குப்புறக்கிடந்தாய்? பாவம்!—இனி நீ பயப்படவேண்டாம். தினமும் நீ இங்குவந்து உனக்குவேண்டிய அளவு காய்கறிகளைப் பறித்துப் போகலாம். ஆனால் ஒன்று; உனக்கு சௌகரியப்படும்போது இதே இடத்தில், இதே நேரத்தில் நீ என்னைச் சந்திப்பாயா?'

'அதைவிட எனக்கென்ன வேலை? தினமும் நீங்கள் வரும் வரை இந்த மேட்டிலேயே காத்திருக்கிறேன்.'

அப்போது அவளுடைய விழிகளினின்றும் நன்றியின் அணுக்கள் கரைந்த நீர்த்துளிகள் இரண்டு அவளது கன்னங்களில் சொட்டின.

## II

தான் வாக்களித்தபடியே தினமும் விசாலாட்சி கதிர்வேலனைச் சந்திக்கத் தவறாள். அவ்வாறு சந்திக்கும்போதெல்லாம் கதிர்வேலன் அவளிடத்தில் அதிகநேசங்காட்டி வந்தான். ஒவ்வோர் சமயம்

களில் அவளைத் தன்னருகில் அமரச் செய்துகொண்டு அதிக நேரம் வார்த்தையாடுவான். அவளது பூங்கரங்களைப் பிடித்துக்கொண்டு 'அப்பா! என்ன மிருதுவான கரங்கள்!' எனப் புகழ்ந்து பேசி அவற்றிற்கு முத்தங்க ளளிப்பான். அவனுடைய இந்தத் துணிகரமான செய்கைக்கு அவள் ஒருப்பட்டிருந்தா ளானாலும், தன் முகத்தைமட்டும் வேறுபுறமாகத் திருப்பிக் கொள்வாள்.

ஒருநாள் கதிர்வேலன் 'விசாலம்! உன் தகப்பனாருடைய உடம்பு குணமான பின்பு..............' என்று அப்படியே நிறுத்தி விட்டு அவளது முகத்தை நோக்கினான். அதுகண்ட விசாலாட்சி 'என்ன! ஏதோ சொல்ல வந்ததை முழுதுஞ் சொல்லி முடிக்காது என்னைப் பார்க்கிறீர்களே? என்னால் தங்களுக்கு ஆகவேண்டிய காரியம் யாது?' என்று வினவினாள்.

அப்போது தன் மனத்தைச் சிறிது திடஞ்செய்துகொண்டு கதிர்வேலன் 'விசாலம்! நீ கள்ளங்கபடறியாதவள்! உனக்கெப்படி என் உள்ள நோய் தெரியப் போகிறது. அன்று முதன்முதலாக நான் உன்னைச் சந்தித்தது முதல் உன்மீது என் நினைவு முழுதும் தோய்ந்துவிட்டது. உன்னைத் தவிர வேறு யாரையும், எப்பொருளை யும் நினைக்க என் உள்ளத்தில் இடமேயில்லை.........'

விசாலம் பக்கென்று சிரித்தாள். அந்தச் சிரிப்பில் அனுதாபத் தோடு கொஞ்சம் ஏளனமுங் கலந்திருந்தது. உடனே அவள் கதிர்வேலனை நோக்கி,

'நீங்கள் படித்தவர்களாயிருந்தும், மேல் குலத்தவர்களா யிருந்தும் உங்களுக்கேன் இந்த எண்ணம் வந்ததோ தெரியவில்லை. உங்கள் குலத்துக்கேற்ற ஒரு பெண்ணை நீங்கள் கலியாணஞ்செய்து கொள்ளுவதை விட்டு என் மீது ஆசைப்படுவது தகுமா? இந்தச் செய்தி உங்கள் பெற்றோர்களுக்குத் தெரிந்தால் உங்கள் கதி என்ன வாகும்? இந்த ஆசை வீணாசையல்லவா?'......எனத் தன் சிரிப்புக்கு வியாக்கியானம் கூறுவதுபோல் பேசலானாள்.

'இப்போது உனது சிரிப்பும், பேச்சும் ஜெயமடைந்ததாகக் காணப்படலாம். ஆனால் பின்னொரு சமயத்தில் எனது எண்ணத்தை ஆண்டவன் நிறைவேற்றுவிப்பார் என்ற நம்பிக்கை எனக்கிருக் கிறது.'

'வேண்டுமானால் நீங்கள் கனவு காணலாம்' எனச் சொல்லிக் கொண்டே ஓடி மறைந்தாள் விசாலாட்சி.

அதன் பிறகு அவள் அம்மேட்டிற்கு வரவில்லை. அவனும் அவளைச் சந்திக்க முடியவில்லை.

* * *

'பயலே! உன்னுடைய கள்ளச் செய்கையை நான் கண்டு கொண்டேன். நீ திருச்சிக்குப் போகத் தலைப்பட்டது முதல்

அதிகாலையில் எழுந்திருப்பது என்ருல் உனக்கு எவ்வளவு சிரமமா யிருந்தது? இப்போது சில நாளாகவே பனி கலைவதற்குள்ளாகவே வயலைப் போய்ப் பார்க்கிறேன் என்று சாக்கு வைத்துக்கொண்டு களமேட்டுக்கு ஓடுகிருயே! இதன் ரகசியம் எனக்குத் தெரியா தென்று எண்ணி யிருக்கிருய்?' எனப் படுக்கையை விட்டெழுந்த போதே உறுமினர் சீதாராமையர்.

'என்ன ரகசியத்தைக் கண்டுபிடித்து விட்டீர்கள்? வயலுக்குப் போகாட்டா எனக்கென்ன ? பயிரெல்லாம் போறது!' என்ருன் கதிர்வேலன்.

'அடே! எனக்குத் தெரியுமடா! அந்த முனிய மூப்பன் மகள்....'

கதிர்வேலன் முகம் கறுத்தது. எப்படியோ தான் அவளுடன் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டு கொண்டார். இப்போது அவள் அம்மேட்டிற்கு வாரதபடி தடுக்கப்பட்டிருப்பதும் அவரால்தான் என்று ஊகித்தான். அப்போது மீண்டும் அவன் தகப்பனர் 'அடேய் நம்முடைய ஜாதி யென்ன? குலாசாரமென்ன? அதை யெல்லாம் விட்டுவிட்டு அவளோடு உனக்கென்ன பேச்சு?' என்ருர்.

'குலத்தையும் ஜாதியையும் விட குணம் உங்களுக்கு உயர்ந்த தாகத் தோன்றவில்லையா?'

'அடே திருச்சிக்குப்போய் படிச்சதன் பலனு இது! இனி அவளைத்தான் மணஞ்செய்து கொள்ள வேண்டுமென்பாய். அப்படியே உன்னை விட்டு விடுவதா?'

'பின் என்னை என்ன செய்வதாக உத்தேசித்திருக்கிறீர்கள்? என் மண விஷயத்தில் கூட எனக்குச் சுதந்திரம் இல்லையா?'

'என்ன சொன்னுய்! மண விஷயத்தில் உனக்குச் சுதந்திரமா? அந்த முனிய மூப்பன் மகளையா உனக்கு மனைவியாக்கிக் கொள்ள விரும்புகிருய்? ஓடிப்போய்விடு! எங்கேனும் தொலைந்துபோ! இனி என் முகத்தில் விழிக்காதே!' என மிக்க ஆத்திரத்தோடு அவன் பக்கமாக எழுந்து வந்தார்.

அதற்கு மேலும் அங்கிருக்கலாகாதென எண்ணிய கதிர்வேலு அவ்விடத்தை விட்டகன்ருன். அதுமுதல் அவன் தன் வீட்டில் அடி வைக்கவில்லை.

* * *

அகன்ற சாலையின் ஒரு புறத்திலிருந்த சின்னஞ்சிறு குடிசை யின் கதவு திறந்திருந்தது. அதற்குள் எரிந்துகொண்டிருந்த மண் ணெண்ணெய் விளக்கொன்று எண்ணெய் வற்றியதால் சுடர்குன்றி கருக ஆரம்பித்தது. அச்சமயத்தில் கதிர்வேலன் குடிசையினுள் நுழைந்தான்.

தனது பழம் பாயைத் தரையில் விரித்துப் படுக்கப்போன விசாலாட்சி அவனைக் கண்டதே திடுக்கிட்டு 'என்ன இந்நேரத்தில் எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று கேட்டாள். அவனுடைய வருகை அவளுக்கு ஒரு புறத்தில் களிப்பையும் மற்றொரு புறத்தில் திகிலையும் உண்டு பண்ணியது.

'விசாலம்! பயப்படாதே! உனக்கு நான் எவ்வித தீங்குமிழைக்க மாட்டேன். நான் ஊரைவிட்டுப் போய் ஆறு மாதங்களுக்கு மேலாகின்றன. இதுவரை மதுரையிலிருந்தேன். அங்கு ஒரு பஞ்சு ஆலையில் மாதம் நாற்பது ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தாவாக அமர்ந்திருக்கிறேன். இப்போது நேராக அங்கிருந்துதான் வருகிறேன். வரும் வழியில் உனது தகப்பனர் காலமானதைக் கேட்டதே அப்படியே கலங்கிப் போனேன். எனது எதிர்கால வாழ்க்கையைக் குறித்து உன்னோடு சில ஏற்பாடுகள் செய்து போகலாமென்று வந்த எனக்கு இச்சோகச் செய்தி காதில் விழவே பெரிதும் விசனித்தேன்..........'

விசாலாட்சி கண்ணீர் சிந்தினாள். அப்போது கதிர்வேலன் 'விசாலம்! அழாதே! என்ன செய்யலாம்? எல்லாம் விதியின் விளைவு' என்று சொல்லி அவளைத் தேற்றினான். சில நிமிஷங்கள் சென்ற பின் மீண்டும் பேசத் தொடங்கினான்.

'விசாலு! இப்போதோ நீ தாய் தந்தையற்றவளாகி விட்டாய். தன்னந்தனியே உன்னைப் போலுள்ளவர்கள் எவ்வளவு காலம் இப்படி வசிக்க முடியும்? அன்றொரு நாள் நான் உன்னிடம் கூறியபடி எனது உள்ளம் முழுதும் உன்பால் பொருந்தியிருக்கிறது. ஜாதி சமயக் கொள்கைகளெல்லாம் எனது வாழ்க்கைக்குப் புறம்பானவை. ஆதலால் உனது குலத்தையோ, ஏழ்மை நிலைமையையோ நான் ஒருபோதும் கவனிக்கவில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் அன்பு ஒன்றே.........' எனக் கூறியவண்ணம் அவளது முகத்தை நோக்கினான்.

அதுவரையில் அவனையே பார்த்துக்கொண்டிருந்த விசாலாட்சி சட்டென்று எழுந்து, அவியப்போன விளக்கைத் தூண்டிவிட்டு சீசாவிலிருந்த மண்ணெண்ணெயில் சிறிது ஊற்றினாள். உடனே விளக்கும் சுடர்விட்டு பிரகாசமாயிருந்தது. அதன்பின் 'எதற்கும்தங்களது பெற்றோர்கள் சம்மதம் வேண்டாமா?' என்றாள் அவ்வனிதை.

'எனது பெற்றோர்கள் இதற்கு ஒருப்படார்கள் என்பது தெரியும். அவர்களது கூட்டுறவை யெல்லாம் நீக்கிவிட்டுத்தான் நான் உன்னை அடைய விரும்புவது. ஆகவே அவர்களது சம்மதத்தை நான் இப்போது எதிர்பார்க்கவில்லை. உனது அன்பான பதிலைத்தான் எதிர்பார்க்கிறேன். உனது சம்மதம் கிடைத்தபின் மதுரையிலேயே எனது நண்பர்கள் முன்னிலையில் நமது விவாகத்தை நடத்திக்கொள்வது எனத் தீர்மானித்திருக்கிறேன்.'

'எனக்காக உங்களது பெற்றோர்களைப் பகைத்துக் கொள்வதா?'

'அதைப்பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் ஒரு துணைவி. அத்துணைவி நீதான் என்பது எனது முடிவான அபிப்பாயம்.'

'என்னால் உங்களது உற்றார் உறவினர் உங்களை நிந்திப் பார்களே!'

'இது அன்பு-காதல் அறியாத உலகம். அதனால் அவர்களது நிந்தனைக்கு நான் ஒரு சிறிதும் அஞ்சேன்.'

தன்னுடைய பரீட்சைக் கேள்விகளில் தனது காதலன் வெற்றி யடைந்தான் என்றதைக் கண்டதே விசாலாட்சி அவனை ஆசை யோடு நோக்கினாள். அவ்வாசையின் பொருளை விளக்கிக்காட்ட அவளுடைய முகத்தில் புன்னகை அரும்பியது.

* * *

அடுத்த வாரம் மதுரையில் கதிர்வேலனும், விசாலாட்சியும் தம்பதிகளாய் விளங்கினர். ஒரு சின்னஞ்சிறு வீட்டில் விசாலம் தன் புதுக்குடித்தனத்தைத் துவக்கினாள். அன்று மாலை வேலன் தன் மனைவியை நோக்கி 'விசாலு! அந்தக் களமேட்டில் என் எண்ணம் நிறைவேறப் போகிறதா என்று பரிகாசமாகச் சிரித்தாயே! நினைவிருக்கா?' என்றான்.

'என்னவானாலும் நீங்கள் ஆண்பிள்ளை யல்லவா?'

'அந்தக் கேலிச் சிரிப்புக்கு இப்போது உன்னை என்ன செய்ய லாம்?'

'நானே உங்களுக்குச் சொந்தமான பிறகு நீங்கள் என்னை என்ன செய்தால்தானென்ன?'

உடனே கதிர்வேலன் அவளருகில் ஓடி அப்படியே அவளைத் தன் மார்புற அணைத்துக் கொண்டான். அப்போதும் ஒருவித நாணச்சிரிப்பு அவளுடைய வதனத்தில் தாண்டவமாடியது.

தமிழரசு ஆசிரியரும், டாக்டரும் ஆகிய மே. மாசிலாமணி முதலியார் சில நண்பர்களுடன் சீக்கிரத்தில் இலங்கைக்கு வருவார்கள். அவர் வருகையை எதிர்பார்க்கும் அன்பர்கள் புரப்படும் தேதியை பத்திரிகைகளில் காணவும்.

# தனலெக்ஷிமி

[திருமலை — அண்ணாமலை]



எடுங்கள் அத்தான் கையை. உங்களை அறியேனா' என்று சொல்லிக்கொண்டே தனலக்ஷிமி தன் கண்களை மூடியிருந்த அருணாசலத்தின் கைகளை எடுத்தாள்.

அருணாசலம்:—என்ன தனம்! நான்வரவில்லையென்று ரொம்பவும் வருத்தப்பட்டாயோ? கண்ணே! நான் ஒரு விஷயம் கேட்கிறேன் கோபமில்லாமல் பதிலுரைப்பாயா?

தனலெக்ஷிமி:—ஆகட்டும் அத்தான்!

அருணா:—தனம்! இப்பொழுது நீ பெரிய பெண்ணாய்விட்டாயே. உன் விவாக சம்பந்தமாக உன் அப்பா என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்?



தனம்:—அத்தான்! அவருடைய அபிப்பிராயமென்ன? கடவுளே காதலால் நம்மிருவரையும் சேர்த்து வைத்திருக்கிறார். அதைப்பிரிக்க சாமானிய மனிதர்களால் முடியுமா? இது விஷயத்தில்தாங்கள் சந்தேகப்படவேண்டாம்.

அருணா:—கண்மணி! லக்ஷப்பிரபுவான உன் தந்தை ஏழையாகிய எனக்கு உன்னைக் கலியாணம் செய்து கொடுக்கச் சம்மதிப்பாரா? பணக்காரர்களுக்குத்தானே பணக்காரர்கள் பெண்ணைக் கொடுப்பார்கள்.

தனம்:—அத்தான் திரும்ப திரும்ப அதைப்பற்றிப் பேசவேண்டாம். எப்படியிருந்தாலும் நான் தங்களையே நாயகராக அடைவேன், இது சத்தியம். அதற்கு அத்தாட்சியாக இதோ இந்த முத்தத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

அருணாசலமும் அவளுக்கு முத்தங்களை கொடுத்தான். இவர்கள் இப்படி இருப்பதை தனலெக்ஷிமியின் தகப்பனான விஜயரங்க முதலியார் மறைவிலிருந்து கவனித்துக்கொண்டிருந்தார். காதலரிருவரும் அவரவர்கள் கட்டுக்களிலிருந்தும் விடுபட்டு அருகிலிருக்கும் ஆசனத்தில் அமர்ந்தார்கள். விஜயரங்க முதலியாரைப் பார்த்த இருவரும் பயத்தினால் நடுநடுங்கி விட்டார்கள்.

விஜயரங்க முதலியார்:—என்ன அருணாசலம்! உன்னை என்னமோ வென்று நினைத்திருந்தேன். நீ இப்படிப்பட்ட தகாதவழியில் பிரவேசிப்பாய் என்று நினைக்கவில்லை. சரி, இனிமேலாவது யோசனையுடன் நடந்துகொள். உன் அந்தஸ்துக்கும் எங்கள் அந்தஸ்துக்கும் சமமில்லை. நீ என்னதான் என் தங்கை பிள்ளையாயிருந்தாலும் தற்காலம் இவ்விடத்திற்கு வந்துபோக லாயக்கற்றவன். இனிமேல் இவ்விடம் வராதே. போய்விடு.

இவர் சொன்ன வார்த்தைகளையும், தனக்கும் தனலெக்ஷிமிக்கும் திடீரென்று ஏற்பட பிரிவையும் நினைத்துக்கொண்டு ஒன்றும் தோன்றாதவனாய் வாடிய முகத்துடன் சரேலென்று வெளியில்போய் விட்டான் அருணாசலம். அவன் சென்ற பிறகு விஜயரங்க முதலியார் தனலெக்ஷிமியை அருகில் அழைத்து, 'தனம்! நீ என்ன, படித்தும் ஒன்றும் அறியாதவளாயிருக்கிறாய். அந்த பஞ்ச அருணாசலத்துடன் பேசவேண்டாமென்று எத்தனையோமுறை நயத்திலும் பயத்திலும் சொல்லியும் அதை சட்டை செய்யாமல் அவனை மறுபடியும் வரவழைத்துப் பேசிக்கொண்டிருக்கிறாய். சற்றுமுன் நீங்களிருந்த நிலைமையைவேறு யாராவது பார்த்திருந்தால் என்னை என்னமதிப்பார்கள்? உனக்கோ பக்குவமடையும் வயதாகிவிட்டது. உனக்கு அதிகமாக ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. அதையறிந்து நடந்துகொள்.'

தனம்:—அண்ணா! தாங்கள் என்ன நிர்தாக்ஷண்யமாக அப்படி பேசி விட்டீர்கள். நாங்களிருவரும் சிறு பிராயமுதல் ஒருவரை ஒருவர் நேசித்து வந்திருக்கிறோம். அப்படி இருக்க, எப்படி அவருடன் பேசாமலிருக்க முடியும். தவிரவும் அவரையே என் மணவாளராக ஏற்றுக்கொள்ளவும் தீர்மானித்திருக்கிறேன்.

விஜய:—ஆ! என்ன? அவனையே விவாகம் செய்துகொள்ளப் போகிறாயா? பேஷ், நல்ல பெண்தான் நீ. நான் எனக்குச் சம

மான அந்தஸ்துடைய ஒருவனுக்கு உன்னை விவாகம் செய்து வைக்க வேண்டுமென்று நினைத்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்துகொண்டு வருகிறேன். கடைசியில் நீ இப்படியா நினைத்துக்கொண்டிருக்கிறாய். அந்த எண்ணத்தை அடியோடு மறந்து விடு. இருட்டாய்விட்டது வீட்டில்போய் ஏதாவது வேலை இருந்தால் பார். இல்லாவிடில் ஆர்மோனியத்தைவைத்து சாதகம் பண்ணு, போ.

தனலெட்சுமி ஒன்றும் பேசமனமில்லாதவளாய் வீட்டிற்குள் போய்விட்டாள்.

ஒரு வாரம் சென்றதும் நம் தனலெட்சுமி புஷ்பவதியாகி விட்டாள். முதலியார் மும்முரமாக சடங்குகளை எல்லாம் செய்தார்.

பெண் புஷ்பவதியானதிலிருந்து மாப்பிள்ளை தேடவேண்டுமென்ற கவலை முதலியாரைப் பெரிதும் வாட்டலாயிற்று.

வாசகர்களே! தற்காலத்தில் அநேகம் பணக்காரர்களுடைய நோக்கங்களும், செய்கைகளும்இப்படியே இருந்துவருகின்றன. 'செல்வர்க்கழகு செழுங்கிளை தங்குதல்' என்ற முதுமொழியையும் மறந்து, தன் சுற்றத்தார் ஏழ்மையாயிருந்தால் அவர்களை சட்டை செய்யாமலும், அவர்கள் வீடுகளில் நடக்கும் நன்மை தீமைகளுக்குச் செல்லாமலும், அவர்களையும் தங்கள் வீட்டிற்குவரவிடாமலும், 'பணம் வந்தவழியே செல்லும்' என்பதையும் மறந்து வாழ்கிறார்கள். நிற்க,

சதாகாலமும் மாப்பிள்ளை தேடவேண்டுமென்று கவலைகொண்டிருந்த விஜயாங்க முதலியார் ஓர் நாள் சாயந்திரம் திருவல்லிக்கேணி கடற்கரைக்குச் சென்றிருந்த சமயம் அங்கு அவருடைய ஆப்த நண்பர் ஒருவரை சந்தித்து விஷயத்தை சொன்னார். அவரும், முதலியார் வகுப்பை சேர்ந்த தங்கவேல் என்னும் பெயருடைய பையன் ஒருவன் கிருஷ்டியன் காலேஜில் பி. ஏ. வாசித்துக்கொண்டிருப்பதாகவும், திருப்பாதிரிப்புலியூரில் அவனுடைய தகப்பனார் பெரிய மிராசுதாரர் என்றும், பையனும் கெட்டிக்காரனென்றும் சொன்னார். முதலியார் ரொம்பவும் சந்தோஷமடைந்து எப்படியும் பெண்ணைக் கொடுத்துவிடலா மென்று சொல்லிவிட்டு வீட்டிற்கு போய்விட்டார்.

மறுநாள் காலை 9 மணிக்கு விஜயாங்க முதலியாரும் அவர் நண்பரும் மாப்பிள்ளையைப் பார்த்து கலியாணம் இந்த மாதத்திலேயே முடித்துவிட வேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டு சென்று விட்டார்கள்.

கலியாண விஷயம் தனலெட்சுமிக்கு தெரிந்ததும் ஆருத்துயரத்தில் ஆழ்ந்தாள். தன் அத்தானுக்கு இது விஷயமாக ஓர் கடிதம் எழுதலாமென்று நினைத்து கைப்பெட்டியை திறக்க அதில் அருணாசலத்தின் போட்டோ ஒன்று இருப்பதைப் பார்த்து ஆவலுடன் அதை எடுத்து தன் படுக்கைக்கு அடியில் வைத்துவிட்டு அருணாசலத்திற்கு ஓர் கடிதம் எழுதி முடித்தாள்.

அருணாசலம் எவ்வளவு ஏழ்மையாயிருந்தாலும் 'தமிழரசு' பத்திரிகையை படிப்பதை வழக்கமாய் கொண்டவனாதலால் அன்றும் 'தமிழரசு' பத்திரிகையிலுள்ள 'புஷ்பவல்லி' என்னும் கட்டுரையை ஆர்வத்துடன் படித்துக்கொண் டிருக்கும்போது தன் விலாசத்திற்கு ஒரு லெட்டர் வந்ததை ஆவலுடன் வாங்கி உடைத்துப் பார்க்க அதில் பின்வருமாறு எழுதி யிருந்தது.

என் ஆசைமிகுந்த அத்தான் அவர்களே!

'நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்' என்பது போல் தங்களுக்கென்றே வைத்திருந்த இந்த என் உடம்பை வேறொருவனுக்கு அர்ப்பணம் செய்ய என் பெற்றோர் நிச்சயித்து விட்டனர். முகூர்த்தம் அடுத்த 23உ வியாழக்கிழமை வைத்திருக்கிறார்கள். அதற்குள் நாம் எப்படியாவது தப்பிவிடவேண்டும். ஆகையால் 22உ இரவு 1½ மணிக்கு தாங்கள் எங்கள் வீட்டிற்குப் பின்புறம் வந்தால் எப்படியாவது தப்பிவிடலாம். இது விஷயத்தில் மிதமாயிருக்கவேண்டாம். அதற்கிடையில் யாதொரு கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளவேண்டாம். மேல் நடக்கவேண்டியவைகளுக்கு பின்பு யோசித்துக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

தங்களை என்றும் மறவாத காதலி,

தனலெக்ஷிமி.

லெட்டரில் கண்டபடி செய்துவிடுவது என்று தீர்மானம் செய்துவிட்டு மேலும் 'தமிழரசு' பத்திரிகையை படித்துக்கொண் டிருந்தான் அருணாசலம்.

கலியாணத்திற்கு முதல் நாளே மாப்பிள்ளை வீட்டாரெல்லோரும் வந்துவிட்டார்கள். கலியாணத்திற்கு முதல் நாள் இரவு சுமார் 1½ மணி யிருக்கலாம். ராயபுரத்திலுள்ள ஓர் பங்களாவின் பின்புறத்திலிருந்து வடக்கு நோக்கி ஓர் மோட்டார் போகிறது. அப்படிப்போனது யாருக்கும் தெரியாது.

23வ காலையில் விஜயரங்க முதலியார் வீட்டில் 'பெண்ணைக் காணோம், பெண்ணைக் காணோம்' என்று ஒரே கூச்சலாயிருந்தது. முதலியார் ஒன்றும் தோன்றாதவராய் தன் அறையில்போய் படுத்து விட்டார். கலியாணத்திற்கு வந்தவர்கள் எல்லோரும் சொல்லிக் கொள்ளலாமலே அவரவர்கள் இருப்பிடங்களுக்குச் சென்று விட்டார்கள்.

சுமார் பதினைந்து நாட்கள் கழித்து முதலியாருக்கு ஒரு கடிதம் வந்தது. அதை ஆவலுடன் பிரித்துப் பார்த்தார்.

நுங்கம்பாக்கம் 13–5–34.

விஜயரங்க முதலியாரே!

தங்கள் மகளை கொண்டுசென்றவன் நானே. தங்கள் மகள் தங்களுக்கு கிடைக்கவேண்டுமானால் ரூபாய் ஐயாயிரத்துடன் 15–5–34 காலை சரியாய் 10 மணிக்கு நுங்கம்பாக்கம் 75 நெம்பர் 'கிங்ஸ்டன்' என்னும் பங்களாவுக்கு வந்தால் யாதொரு தடையுமன்னியில் தங்கள் மகளை தங்களிடமே ஒப்பிவித்து விடுகிறேன். இந்த விஷயம் ரகசியமாக இருக்கட்டும். இல்லாவிடில் உங்களுக்கு அவமானம் நேரும். ஜாக்கிரதை.

இப்படிக்கு,

பஞ்சாப்வீரன்.

இதைப்பார்த்தவுடன் முதலியார் ஒரு புறத்தில் சந்தோஷமடைந்தாராயினும் ரூபாய் 5000 போவதை நினைத்து வருத்தப்பட்டார். இதை தன் மனைவியிடம் சொல்ல ரூபாய் பத்தாயிரம் கொடுத்தாவது தன் மகளை கொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்று கோபித்தாள்.

முதலியாரும் 15வ காலை 9½ மணிக்கெல்லாம் நுங்கம்பாக்கத்தில் கடிதத்தில் கண்ட விலாசத்திற்கு போய் சேர்ந்தார். வாயில் காப்போனிடம் தான் இன்னாரென்று சொல்ல அவனும் முதலியாரை உள்ளே கூட்டிப்போனான். முதலியாரும் மனதில் திகிலுடன் பின் சென்றார்.

அந்த பங்களாவின் ஹாலில் அநேகவிதமான நாற்காலிகளும், மேஜைகளும், சோபாக்களும் போடப்பட்டிருந்தன. அவைகளில் ஓர் மேஜையின்மேல் பெரிய வெள்ளித்தட்டு ஒன்றில் பழவர்க்கங்களும், புஷ்பமாலையும், ஒரு பெண்ணின் போட்டோவும், அந்த போட்டோவுக்கு அடியில் 'தாங்கள் கொண்டுவந்த ரூபாய் ஐயாயிரத்தையும் இங்கே வையுங்கள்' என்று எழுதியும், வைக்கப்பட்டிருந்தன.

வேலைக்காரன் முதலியாரை அந்த வெள்ளித்தட்டு இருக்கும்

மேஜைக்கு சமீபத்திலுள்ள ஓர் நாற்காலியில் உட்காரவைத்தான். உட்கார்ந்த உடனே முதலியார் அந்த போட்டோவைப் பார்த்து பிரமித்தாராயினும், ஒரு விதமாக சமாளித்துக் கொண்டு ரூபாயை அப் படத்தின் முன் வைத்தார். மணியும் 10 அடித்தது. உடல் முழுதும் (கண்களுக்கு மாத்திரம் இரண்டு துவாரங்கள் உள்ள) வெள்ளை அங்கி அணிந்த இரண்டு உருவங்கள் முதலியார் உட்



கார்ந்திருந்த இடத்திற்கு எதிர் அறையிலிருந்து வந்து முதலியாருக்குப் பக்கத்தில் அமர்ந்தன. ரூபாய் வெள்ளித்தட்டி லிருப்பதைப் பார்த்து இரண்டு உருவங்களும் பலத்த சப்தத்துடன் சிரித்துக் கொண்டே தங்கள் அங்கியை களைந்தன.

என்ன ஆச்சரியம்! தன் எதிரில் தனலெட்சுமியும், தன் தங்கை மகன் அருணாசலமும் மதனும் ரதியும்போல் நிற்பதைப்பார்த்து பிரமித்து விட்டாராயினும், சந்தோஷத்தினால் அவர்களிருவரையும் கட்டியணைத்துக்கொண்டார். அவர்களிருவரும் முதலியாருக்கு மாலையை அணிந்து வலம்வந்து நமஸ்காரம் செய்தார்கள்.

முதலியார் தன் மருமகனையும், மகளையும் தன் மோட்டாரிலேயே ஏற்றிக்கொண்டு போய் தன் வீட்டில் விட்டார். அங்குள்ளோர் அனைவரும் அளவு கடந்த சந்தோஷமடைந்தனர். ஓர் சுப தினத்தில் நம் தனலெட்சுமிக்கும் அருணாசலத்துக்கும் விவாகம் நடந்தது.

இப்பொழுது ராயபுரத்திலுள்ள தங்கள் பங்களாவில் நம் காதலரிருவரும் கருத்தொருமிக்க வாழ்ந்து வருகிறார்கள்.



# காதலர் கஷ்டங்கள்

[தூயோன்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

## எதிர்பாரா சம்பவம்

ஒரு வாரம் கடந்தது. முருகனுடைய நண்பன் சாம்பன் ஒரு வாரமாக வரவேயில்லை. ஏதாவது வேலையிருக்கும் என முருகனும் சென்று பார்க்கவில்லை.

முருகன் தன் வீட்டின் கொல்லையில் ஓர் சிறிய பூந்தோட்டத்தை தயார்படுத்தி யிருந்தான். சிறிய தோட்டமானாலும் மிகவும் அழகாகவும், சுத்தமாகவும் இருக்கும். முருகனுக்குக் குப்பை என்றாலே பிடிப்பதில்லை. எங்காவது பார்த்துவிட்டால் அதை அகற்றிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பான்.

சில வாழை மரங்கள்; 2 மல்லிகைச் செடிகள்; 3 ரோஜாச் செடிகள்; ஒரு கொய்யா மரம்; இன்னும் சில சிறிய செடிகள். இவைதான் அந்த நந்த வனத்திலுள்ளவை. நிழலான ஓரிடத்தில் ஓர் மஞ்சம் போட்டிருக்கும். அங்கு தான் மாலை வேலையில் முருகன் உட்கார்ந்துகொண்டு கொஞ்சநேரம் இளைப்பாறுவது.

அன்று மாலை சுமார் 5½-மணி.

மஞ்சத்தில் முருகனும், சின்னம்மாவும் பக்கம் பக்கமாக அமர்ந்துள்ளனர். இருவர் முகங்களும் பிரகாசத்துடன் விளங்கின. சந்தோஷம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. இருவர் முகங்களும் ஒரு முகம் என ஐயுறுமாறு ஒன்று சேர்ந்து ஆகாய வெளியை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தது.

சூரியன் இனனும் அரைமணி நேரத்தில் மறைந்து விடுவான். ஓரங்களில் சிறுசிறு வளைவுகள் பொருந்திய ஓர் சிறிய மேகம் சூரியனை மறைத்துக்கொண்டிருந்தது. சூரியன் அச்சிறிய மேகத்தின் வழியாய் ஊடுருவி வந்து தன் பொன் மயமான, மங்கலான, குளிர்ச்சி பொருந்திய கிரணங்களை வீசிக்கொண்டிருந்தான். அப்பொழுது அம்மேகம் எவ்வளவு அழகாக விளங்கியது! அச்சிறிய மேகத்தின் ஓரங்களில் சூரியன் பொன்னை உருக்கி வார்த்தான் போலும். அவன் திறமையே திறமை! எவ்வளவு ஒழுங்காக, கணக்காக ஊற்றியிருக்கிறான். அச்சிறிய மேகத்தின் அதிர்ஷ்டம் தான் என்ன !

இந்தப் பணச் செலவில்லாமல் பார்க்கக் கூடிய இயற்கைக் காட்சியைப் பார்த்துக்கொண்டுதான் அசைவற்று அமர்ந்திருந்தனர்.

கிராமவாசிகளானதினாலேயே முருகனும், சின்னம்மாவும் வெறும் மரக்கட்டைகள் என்று சொல்ல முடியாது. அவர்கள் இயற்கைக் காட்சிகளை கண் குளிரக் கண்டு களிக்கக்கூடிய காதலராவர்.

திடீரென கதவு தட்டும் சப்தம் கேட்டது. இப்பொழுதுதான் இருவரும் ஆகாய வெளியிலிருந்து பூமிக்கு இறங்கினார்கள். பிரிந்தார்கள். முருகன் ஓடி கதவைத் திறந்தான்.

'என்னடா சாம்பா! எங்களை மறந்தே போய்ட்டே போலிருக்கே'

சின்னம்மாவின் முகம் புன்சிரிப்பால் நிரம்பியது. அவளைத் தப்புவிக்கச் செய்த தந்திரத்தில் அவனும் ஒரு பாகஸ்தனல்லவா? மறந்தா விடுவாள்?

'இல்லேடா. உங்களையா மறந்து விடுவேன்? அப்படி ஒன்றுமில்லேடா. வேலை சரியாயிருந்தது. அது சரி. ஒரு முக்கியமான சமாச்சாரம். நம்ம நண்பன் கறுப்பன் இப்பவோ, அப்பவோன்னு இருக்கானும். நம்ம ரெண்டு பேரையும் உடனே அழைச்சிண்டு வரச்சொல்லி ஒருத்தனண்டே சொல்லி அனுப்பிச்சான். அவனை அனுப்பிவிட்டு இப்படியே வர்றேன். வா போகலாம்'

உடனே முருகன் முகம் வாடிவிட்டது. கறுப்பன் முருகனின் ஆப்த நண்பன்.

'சரி, போகலாம். வண்டியை கட்டு'

சாம்பன் வண்டியை தயார் செய்ய ஆரம்பித்தான்.

'ஏன்டா சாம்பா! சின்னம்மாளையும் கூட்டிக்கொண்டு போயிடலாமா?'

'ஆமா. நாம் வந்தா நாளைக்குத்தான் வருவோம். ராத்திரி பூரா சின்னம்மா எப்படி ஒண்டியாயிருப்பா? சின்னம்மாளுக்கு மாத்திரம் போக அவா இருக்காதா?'

'என்ன சின்னம்மா?' என முருகன் சின்னம்மா பக்கம் திரும்பிக் கேட்டான்.

'நானும் வர்றேன்'

வண்டி தயாராய் விட்டது. முருகன் வீட்டைப் பூட்டுப்போட்டான். மூவரும் வண்டியிலேறினார்கள். புறப்பட்டார்கள்.

கறுப்பன் இருக்கும் கிராமம் 5 மைல் இருக்கும்.

3 மைல் தூரத்தைக் கடந்தார்கள். பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே சென்றார்கள். 7 மணி ஆய்விட்டது. இருட்டிவிட்டது. சாம்பன் வண்டியை நிறுத்தி, வண்டியின் அடியிலுள்ள விளக்கை ஏற்றினான்.

சாம்பன் 'பக்' என ஓர் சீட்டி அடித்தான்.

'ரொம்ப ஜோரா அடிக்கிறியே' என மதிப்புரை கொடுத்தான் முருகன்.

'இறங்கு கீழே' என ஓர் குரல்.

முருகனும், சின்னம்மாளும் திடுக்கிட்டார்கள். முன் பக்கம் இருவர், பின் பக்கம் இருவர்.

முருகன் சாம்பன் பக்கம் போய் 'நீ அவர்களிருவரையும் கவனித்துக் கொள்' என சொல்லிவிட்டுத் திரும்பினான்.

ஆனால் சாம்பன் 'பக்' என சிரித்தான்.

'கவனித்துக் கொள்ளட்டுமா. இறங்கு கீழே. கவனித்துக் கொள்ளுகிறேன். சின்னம்மா இறங்குகிறதுதானே' என்றான் சாம்பன்.

சின்னம்மாளும், முருகனும் ஆச்சரியமே உருவாக எடுத்தார்கள்.

'ஐயோ நீ கூடவா!' என அலறியவண்ணம் சின்னம்மா வண்டியில் சாய்ந்தாள். மூர்ச்சையானாள். பாவம் பெண்!

முருகன் வண்டியினின்று இறங்கி ஒருவனுக்கு ஓர் அடி கொடுத்தான். ஆனால் என் செய்வது? அடுத்த நிமிடம் மற்ற நால்வர் கையில் நன்றாக அகப்பட்டுக் கொண்டான்.

'சாம்பன் கூட திருடனா?' என தன்னைத் தானே கேட்டுக்கொண்டான். ஆச்சரியமும், கோபமும் கலந்த முகத்துடன் சாம்பனைக் கூர்ந்து நோக்கினான்.

சாம்பன் சொத்தைப் பற்கள் வெளியில் தெரியும்படி சிரித்தான்.

முருகன் உடம்பு பதறியது.

'என்டா பாதகா? நண்பனா நீ?' அதற்குமேல் நாவெழவில்லை, அவ்வளவு கோபம் !

முருகனை நன்றாகக் கட்டினார்கள். வண்டியில் தூக்கிப் போட்டார்கள். வீட்டை யடைந்தார்கள்.

சின்னம்மாவின் மூர்ச்சை தானாகவே தெளிந்தது. இருவரையும் வீட்டினுள் கட்டினார்கள்.

அந்த தாசிப் பெண் வந்து விட்டாள்.

'அம்மா! வரணும், வரணும். இப்பத்தான் வர்ராப்போலிருக்கு!' என சிரித்துக்கொண்டே சொன்னாள்.

உடனே மற்ற ஐவரும் சிரித்தார்கள். அத்திருடர் நால்வரில் ஒருவனுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை; ஓடினான். தாசிப்பெண்ணை ஆலிங்கனம் செய்து கொண்டான்.

'லக்ஷ்மி! என்னதான் உன் பேச்சு' என ஓர் முத்தம்

'எங்கே அவனை ஒரு அடி, அடி பார்க்கலாம்'

'என்னை அன்றைக்கு எப்படி அடிச்சே'. என ஓர் அடி முருகன் கன்னத்திலடித்தாள்.

உடனே யாவரும் கொல்லெனச் சிரித்தார்கள். லக்ஷ்மியின் பாடு கொண்டாட்டம்.

'என்னடி அவன் பிழைக்கணுமா? வேண்டாமா?'

சின்னம்மாவின் முகம் கண்ணீரால் நனைந்தது.

'எங்கண்ணன் பெரியசாமி ஓர் பேடிப் பயல். அவனை கொன்னுட்டே. நம்மிடம் அந்த ஜபம் சாயாதுடா தம்பி. பழிக்குப்பழி வாங்காமே விட மாட்டேன். இதை கொஞ்சம் மனசிலே வச்சிகோ'

முருகனுக்கு சமாச்சாரம் விளங்கிவிட்டது. முன்பு சின்னம்மாவை எடுத்துக்கொண்டு போய் வைத்துக்கொண்டு, தன் சகாக்களையும் கொன்ற பெரியசாமியின் ஞாபகம் இப்பொழுது அவனுக்கு வந்தது. அவன் தம்பி இச்சோதாப்பயல் என்பதையும் அறிந்தான்.

'நீ அவர்களுக்கு சம்மதித்தாயானால் உம் புருஷன் பிழைப்பான். சம்மதிக்கில்லையோ இருவரும் தொலைந்தீர்கள்' என லக்ஷ்மி ஒருபக்கம் பிடுங்கத் தொடங்கினான்.

'இரண்டாவதற்கு சம்மதம்' என முருகனும் சின்னம்மாவும் ஒரே குரலில் கூறினார்கள்.

'ஊஹும். ஊஹும்'

## சாம்பன் சிரித்தான்

இரவு 8-மணி சுமாருக்கு ஒருவன் சின்னம்மாளிடம் நான்கு வாழைப் பழங்களைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சென்றான். இராத்திரி உணவு முருகனுக்கு ஒன்றும் கிடையாது. அவளுக்கு அளித்ததுகூட தங்கள் ஆசை நாயகி என்ற ஹோதாவில்தான். அவர்களுக்கு பிரிய நாயகியல்லவா!

சின்னம்மா கட்டப்பட்டுத்தானுள்ளாள். அவளுடைய கையில் வாழைப் பழங்களுள்ளன. முழங்கைக்கு மேலாக கட்டுகள் உள்ளன. அந்நிலையிலேயே வாழைப் பழங்களை உரித்துச் சாப்பிடவேண்டும். ஆனால் உடனே சாப்பிட வில்லை.

9 மணி கள்ளின் மயக்கத்தில் கட்டுண்டு மூலைக்கு ஒருவர் உருண்டு தூங்கிக்கொண்டிருந்தனர். அறையின் ஓர் மூலையில் ஓர் சிறிய விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது.

சின்னம்மாவும், முருகனும் தூங்கிவிடவில்லை. முருகன் சின்னம்மா வைப் பார்த்தவண்ணமிருந்தான். சின்னம்மாவைப் பார்க்கப் பரிதாபமா யிருந்தது. கையிலுள்ள பழங்களைச் சாப்பிடச் சொன்னான்.

யாவரும் தூங்கிவிட்டதை யறிந்த சின்னம்மா ஒவ்வொன்றாக இரண்டு பழங்களை முருகனிடம் வீசினாள். முருகன் திடுக்கிட்டான். என்ன பதிபக்தி! முருகனும் விடாமல் பிடித்துக்கொண்டான். சாப்பிட்டார்கள்.

* * *

'என்டா! முருகன் வீட்டிலிருந்து எவ்வளவு கொண்டு வந்தீர்கள்' எனக் கேட்டான் நெ. 1.

'அவன் எப்படித்தான் சேத்தானோ தெரியில்லே. நம்மண்டே ஒரு காசுகூட கையில் நிற்கமாட்டேனென்கின்றது. எப்படித்தான் இவ்வளவையும் சேத்தானோ தெரியல்ல' என்றான் நெ. 2.

'அது தான்டாப்பா ஆச்சரியமா யிருக்கு' என்றான் நெ. 3.

'அது சரி. எவ்வளவு இருக்கு' என மறந்து போகாமல் ஆவலுடன் கேட்டான் சாம்பன்.

'146 ரூபா 7 அணு இருக்குடா.

'பத்து பத்தா பதினுலு பத்துக்கு மேலியா. அடே யப்பா' என வாயைப் பிளந்தான் நெ. 4.

'சரி. பிரித்து விடலாம்'

'ஒவ்வொருத்தருக்கும் சரியான பாகம் தானே'

'ஆமா. ஆமா.

'எத்தனே பங்கு'

'நாலு'

'ஐந்தல்லவா' என்றுன் சாம்பன்.

'உனக்கேது. இதிலெல்லாம் உனக்கேதடா' அவங்களே பிடித்துக் கொடுத்த கோடாலி'

'உங்கள் எல்லா நடவடிக்கைகளிலும் கலந்திண்டிருக்கேன், பங்கு மாத்திரம் என் இல்லே? எனக்கும்தான்'

'அந்த ஜபம் இங்கு சாயாது. வெறும் பேச்சு என்னத்துக்கு. 146 ரூபா 7 அணுவிலே 4 பங்கு போட்டா ஆளுக்கு எவ்வளவுடா வரும்'

'அந்த சீமைக் கணக்கெல்லாம் என்னுத்துக்கடா. எல்லாம் ரூபாய் தானே?'

'ஆமா. எல்லாம் வெள்ளி ரூபாதான்'

'பின் என்ன? 4 இடத்திலே ஒவ்வொரு ரூபாயா போட்டிண்டுவா கணக்கு தெரிஞ்சு போகுது.'



'அப்போ எனக்கு இல்லே?' எனக் கேட்டான் சாம்பன்.

'என்னடா சுத்த பைத்தியமாயிருக்கே'

'ஊம். நான் பைத்தியம்' என பெருமூச்சு விட்டான் சாம்பன்.

நால்வரும் ரூபாய் பங்கிடுவதில் மூழ்கிஇருந்தார்கள். சாம்பன் கோபத்துடன் நால்வரையும் நோக்கினுன். ஏதோ யோசித்தான் வெளியே வந்தான். நால்வரும் கவனிக்கவில்லே. ரூபாயல்லவா!

சாம்பன், முருகனும் சின்னம்மாளும் கட்டப்பட்டுள்ள இடத்திற்கு வந்தான். தாசிப் பெண் அங்கு இல்லை. சமையல் வேலையில் இருப்பதை அறிந்து கொண்டான். முதலில் முருகன் பக்கம் சென்றான். உடனே வெகு அவசரத்துடன் கட்டுக்களை அவிழ்த்தான். முருகன் விழித்தான். பின் சின்னம்மாளின் கட்டுக்களையும் அவிழ்த்தான்.

'ஓடுங்கள் சீக்கிரம்' என மெதுவாகச் சொன்னான்.

உடனே இருவரும் வெகு வேகத்துடன் சென்று விட்டார்கள்'

5 நிமிடங்கள் கழிந்தன. சாம்பன் நால்வரிருக்கும் இடத்திற்கு வந்தான். அப்பொழுதுதான் கணக்குத் தீரும் சமயமாக இருந்தது.

'டேய்! காணமடா' என பரபரப்புடனும் ஆத்திரத்துடனும் கூறினான் சாம்பன்.

'என்னடா?' என நால்வரும் கேட்டனர்.

'இருவரையும் காணோம்'

'யார்?

'முருகனும் சின்னம்மாவும்தான்'

'இந்நேரம் என்னடா செஞ்சே?'

'உடனே பரக்கப் பரக்க எங்கெங்கேயோ ஓடி தேடினேன் காணம்'

நால்வரும் தங்கள் பாகத்தை அப்படியே வேஷ்டியில் முடித்தவண்ணம் வெளியில் ஓடினார்கள்.

சாம்பன் நால்வர் ஓடுவதையும் பார்த்துச் சிரித்தான்.

## தந்திரத்தில் ஓர் தந்திரம்

2 நாட்கள் கழிந்தன. பிற்பகல் 3 மணி. முருகனும் சின்னம்மாவும் உட்கார்ந்துகொண்டு ஏதேதோ பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இச் சமயத்தில் தயக்கத்துடன் மெதுவாக, தலையைக் கவிழ்ந்துகொண்டு சாம்பன் வந்தான்.

முருகன் சாம்பனைக் கண்டான். உடனே ஓடி அவனைக் கட்டிக் கொண்டான்.

'சாம்பா! ஏன் நீ இரண்டுநாளாக வரவேயில்லை.'

'வருவதா? நான்செய்த கொடுமைக்கு என்னை இரண்டுதுண்டாக வெட்டிப்போட்டால்கூட தண்டனை அதிகமாகாதே.'

'எல்லாம் காலப்பயன். வருந்தாதே.'

'சின்னம்மா! நான் பாவி? என்னை மன்னித்துவிடு' என அவளை வணங்கப்போனான். சின்னம்மா பதறினாள். ஆனால் அதற்குள் முருகன், சாம்பன் வணங்குவதை தடுத்துவிட்டான்.

'சாம்பா! உனக்கென்ன பைத்தியமா பிடித்துவிட்டது? எங்களை அங்கு சிக்கவைத்தது தப்புதான். ஆனால் மறுபடியும் நீதானே தப்புவித்தாய். இனி யும் உன்பேரில் என்னதப்பு இருக்கிறது?'

'பணம் பத்தும் செய்யுமென்பார்கள். பாழும் பணம், என்னை அப்படி யாக்கிவிட்டது. ஆனால் அந்தப் பணந்தான் என்னை நல்வழிப்படுத்தியது மல்லாமல் உங்களையும் தப்புவிக்கச் செய்தது.'

'சாம்பா! உட்கார். சமாச்சாரம் பூராவையும் எங்களுக்குச் சொல்லு."

சாம்பன் தன் தலையை நிமிர்த்தி முருகனைப் பார்க்க மிகவும் வெட்கப் பட்டான். முகத்தில் ஒரே துக்கம். தலை குனிந்தவண்ணம் உட்கார்ந்தான்.

'முருகா! நீங்கள் சிறைப்பட்டதற்கு 3 நாட்களுக்குமுன், இரவில் அந் நான்குபேரும் வந்தார்கள். உங்கள் இருவரையும் பிடித்துத்தருமாறு கேட் டார்கள். நான் கட்டுக்கடங்காத கோபத்துடன் ஓர் தடியைக்கூடத் தூக்கிக் கொண்டேன். ஆனால் அந்நால்வரும் பிடித்துக்கொண்டு எனக்கு ஓர் ரூபாய் மூட்டையை சப்தமுண்டாக்கிக் காண்பித்தார்கள். ஓர் அதிசயத்தைப் பார். அப்பொழுது அந்த மூட்டைமுன் என்கோபமெல்லாம் எங்கேயோ பறந்து போய்விட்டது. ஐயோ! முருகா! அந்த மூட்டையிலிருந்த 80 ரூபாய் என் ஆருயிர் நண்பர்களாகிய உங்களைப் பிடித்துத்தரச்செய்தது' என கண்ணீர் சொரிந்தான்.

'சாம்பா! அழாதே. அது உலக சுபாவம். நீ மாத்திரம் புதிது அல்ல. பணத்தைக் கண்டு மயங்காதவர் யார்? அழவேண்டாம்.'

'அன்று வந்து ஓர் பொய்யைத் திரித்துக்கூறி உங்களை அழைத்துச் சென்றேன். முன் ஏற்பாட்டின்படி வழியில் நான்கு திருடரும் ஒளிந்திருந் தனர். நான் அப்பொழுது சீட்டா அடித்தேன். எல்லோரும் உங்களைப் பிடித்துக்கொண்டோம். மறுநாள் உன் பணத்தை பாகம்போடத் தொடங்கி னார்கள்'

'அந்தப் பணத்தைக் குடித்துத் தீர்த்துவிட்டார்களா?' என வெகு ஆவ லுடன் கேட்டான். முருகன் வியர்க்க, வியர்க்க கஷ்டப்பட்டு சம்பாதித்த பணமல்லா? அவனுக்கல்லவா அதன் அருமை தெரியும்!

'எனக்குப் பாகம் கிடையாது என்றார்கள். அதனால் எனக்குக் கோபம் வந்துவிட்டது. அந்த கோபத்திலேயே வந்து உங்களை அவிழ்த்துவிட் டேன். பின் அவர்களிடம் நீங்கள் தப்பி ஓடிவிட்டதாக சொல்லிவிட்டேன். அந்தப் பணத்தை செலவு செய்யவில்லை. 4 பேரும் தங்கள் பணத்தை ஒவ் வொரு மூட்டையில் கட்டி நான்கையும் வீட்டில் ஓரிடத்தில் புதைத்துவைத் திருக்கிறார்கள். மேலும் இன்னும் எங்கெங்கேயோ கொள்ளையடித்து 75 ரூபாய் வைத்திருக்கிறார்கள். மறுபடி உங்களைப் பிடிக்க சூழ்ச்சிசெய் திருக்கிறார்கள். அதற்கு நாளை தினத்தை நல்ல நாளாக ஏற்படுத்தியிருக் கிறார்கள்.'

பின் சாம்பன் அவர்கள் ஏற்பாட்டையும் முருகனிடம் சொன்னான்.

ஆனால் அத் தந்திரத்தின் மூலமாகவே அந்நால்வரையும் கொலை செய்வ தென முருகனும் சாம்பனும் ஓர் தந்திரத்தை ஏற்பாடு செய்துகொண்டார்கள்.

## கொலையும் தற்கொலையும்

இரவு 9 மணி. ஒரே அந்தகாரம்.

முருகன் வீட்டைச் சுற்றி மரங்கள் உண்டு. இந்த மரங்களின் நடுவில் தான் 4 திருடர்களும், சாம்பனும் ஒளிந்துகொண்டிருக்கின்றனர். இன்று எப்படியாவது முருகனையும், சின்னம்மாளையும் பிடித்துவிடவேண்டு மென்பது அவர்களுடைய கண்டிப்பான தீர்மானம்.

சாம்பன் வீட்டைச் சுற்றி ஆங்காங்கு ஒவ்வொருவரை நிறுத்தினன். நால்வரும் வீட்டின் வாசலைப் பார்த்த வண்ணமிருந்தனர். எப்பொழுது முருகன் வெளியே போவான் என அதிகஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.



அப்பாடீ! முருகன் வெளியே வந்தான்.

நால்வருக்கும் சந்தோஷம். சின்னம்மாவுடன் கூடிக் குலாவுவதை அப்பொழுதே கனவுகாணத் தொடங்கினர்கள்.

'டேய்! இங்கேயே இருங்கள். வீட்டின்பக்கம்போய் சின்னம்மா எந்நிலையில் இருக்கிறள், எப்படி பிடிக்கலாம் என்பதைப் பார்த்துவருகிறேன்' என சாம்பன் நால்வரிடமும் கூறிவிட்டு சென்றான்.

4 நிமிடங்கள் கழிந்தன. 4 பேரும் அப்படியே நின்றனர்.

திடீரென பின்னுலிருந்து நெ 1 ஐ இருவர் பிடித்து அமுக்கினர். ஒருவன் வாயை கெட்டியாக மூடி, பின் ஓர் துணியால் வாயைக்கட்டினன். இன்னொருவன் கால்களைக் குரங்குப்பிடியாய் பிடித்துக்கொண்டான். திருட்டுப்பயல் எப்படியாவது சத்தத்தை உண்டாக்கவேண்டுமென முயன்றான். ஆனல் முடியவில்லை. மறுநிமிடம் மரத்துடன் கட்டப்பட்டான்.

'இதே வந்துவிட்டேன். கொஞ்சம் பொறுங்கள்' என காதருகில் சாம்பன் சொன்னன்.

நெ. 1 திடுக்கிட்டான். தன் தோழன் சாம்பனு!' என்னும் கேள்வி அவன் மனதில் எழும்பியது.

'ஆம்' என அவன் கேள்விக்கு பதில்சொல்ல யாரிருக்கிறார்கள்?

இன்னொருவன் முருகன் என்பதை அறிந்தானோ, இல்லையோ நமக்குத் தெரியாது.

அடுத்த 5 நிமிடங்களில் நெ. 2ம், நெ. 1 ஐப்போல் மரத்தோடு கட்டப் பட்டான். மறுபடி நெ 3-ம், நெ 4-ம் அப்படியே.

முருகனும் சாம்பனும் சேர்ந்து ஒவ்வொருவராக வீட்டினுள் கொண்டு போய் ஒவ்வொரு தூணில் கட்டினார்கள்.

இதற்குள் சாம்பன், முருகனுக்கு ஏதோ சாடைகாட்டிவிட்டு வெளியே வந்தான். நேராக திருடர் வசிக்கும் வீட்டிற்குச் சென்றான்.

லக்ஷ்மி ஜோராக ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். சாம்பன் உள் நுழைந்தான்.

சாம்பனைக் கண்டதும் லக்ஷ்மி சிரித்துக்கொண்டே அவன் பக்கம் சென்றாள்.

சாம்பன் ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு லக்ஷ்மியை ஓர் தள்ளுத் தள்ளினான். லக்ஷ்மி விழித்தாள்.

'பணத்தை எங்கே வைத்திருக்கிறார்கள். காட்டு' என்றான். லக்ஷ்மி தயங்கினாள்.

'கத்தி பார்த்தாயா? ஒரே குத்து போதும், உன் உயிர்போக. ஊம் காட்டு.'

லக்ஷ்மி ஏன் பேசுகிறாள் ? இடத்தைக் காட்டினாள்.

சாம்பன் தோண்டினான். பணத்தை எடுத்துக்கொண்டான். பின் லக்ஷ்மின் கையைப் பிடித்தான். அவள் திமிறினாள். ஆனால் சாம்பனிடமா செல்லும்? கட்டிப் பிடித்து அவளுடைய வாயை ஓர் துணியால் கட்டினான்.

'சரி நட. வழியில் ஏதாவது குறும்பு செய்தாயோ, தீர்ந்தாய். கத்தி யின் முனை உன் முதுகுப் பக்கம் தயாராயிருக்கிறது. ஜாக்கிரதை.'

இருவரும் முருகனிருக்கும் இடத்தை அடைந்தார்கள்.

தன் காதலர்கள் இருக்கும் நிலைமையைக் கண்ட லக்ஷ்மி பரக்கப்பரக்க விழித்தாள். ஆனால் அவளும் ஓர் தூணில் கட்டப்பட்டாள்.

'வாணும், வாணும். உங்களுக்கு எல்லாம் தித்திப்பு பண்டங்களாக நெய்யிலேயே தயார்செய்து வைத்திருக்கிறேன்.' என சின்னம்மா சொல்லிக் கொண்டே தான்பட்ட கஷ்டங்களை நினைத்தவண்ணம் அவள் கன்னத்தில் ஒன்றுவிட்டாள்.

'ஏன்டா! உங்கண்ணன் பெரியசாமி சோதாப்பயல் என்று சொன் னாயே. உனக்கு எத்தனை கொம்பு முளைத்திருக்கிறது. ஒரு அடியிலே காத் திலே பறப்பே. ஆஹா! என்ன! வீரனின் முகத்தைப்பார்ரா!' என ஓர் அடி முருகன் கொடுத்தான்.

சாம்பன் மற்ற இவருரையும் கவனித்துக்கொண்டிருந்தான்.

'உங்களைப்போல் இன்னம் 2 பேரு ஓர் ஊரிலே இருந்தா என் ஒரு பெண்ணாவது உருப்படுகிறாள் ? உங்களைப்போல சோதாப்பயல்கள் சிக்கின 2 துண்டு செய்துவிட்டல்லவா மறுவேலை பார்க்கவேண்டும்.

முருகன் கெ. 1-ன் கட்டுகளை அவிழ்த்தான். அவிழ்த்துவிட்டதும் கையைத் தூக்கினான் அடிக்க. ஆனால் அதற்குள் காலின்பேரில் முருகன் ஓர் உதை கொடுத்தான். கெ 1 கீழே வீழ்ந்தான். முருகன் அவன் மார்பில் ஏறிக்கொண்டான். தலையை நன்றாக பூமியில் மோதி அடித்தான். பயல் 'லபோ, லபோ' எனக் கத்தினான்.

'என்டா ஆண் மகனல்ல. மேலும் வஸ்தாது என்று பெருமை அடித்துக்கொண்டாயே. என் கத்துகிறாய்? ஓர் பெண்ணைத் துன்புறுத்தினீர்களே. அப்பொழுது ஆனந்தமாயிருந்ததா ?

அப்பப்பா ! யாரும் நினைக்கவும் இல்லை.

சின்னம்மா கத்தியுடன் ஓடிவந்தாள். கெ. 1 மார்பில் கத்தியைச் செலுத்தினாள். முருகன்கூட திடுக்கிட்டுவிட்டான்.

ஆனால் சின்னம்மாவின் முகத்தில் சிரிப்புத் தவழ்ந்தது. அவளைப்போலொத்த கற்பரசிகளை காப்பாற்றிய பாக்கியம் அவளையல்லவோ சேரும். உயிரோடுவிட்டால் இன்னும் எத்தனைபேர் கற்பை அவன் அழித்திருப்பான் !

தூணில் கட்டப்பட்டுள்ள 3 பேரும், லக்ஷ்மியுங் கண்களை மூடிக்கொண்டார்கள்.

'என்ன சமாச்சாரம்? பயமாயிருக்கா?' எனக்கேட்டான் முருகன்.

'எங்களை ஒன்றும் செய்யவேண்டாம். நாங்கள் நிரபராதிகள். இந்த சண்டாளி தாசியினால் கெட்டோம். முன்பு நாங்கள் இவளை வைப்பாட்டியாக வைத்துக்கொண்டிருந்தோம். அப்பொழுது இந்த சோதாப்பயல் (இறந்தவன்) இவளிடம்வந்து சேர்ந்தான். தன் திருட்டுவேலையை இவளுக்கு அறிவித்தான். கொள்ளையடித்து, கொஞ்சநாளில் பணக்காரியாகிவிடலாம் என்னும் ஆசை இவளைச் சூழ்ந்தது. பின் எங்களையும் இவளுடைய வலையில் சிக்கவைத்து, இவ்வேலைகளில் ஈடுபடும்படிச் செய்தாள்' என கண்ணீர்விட்ட வண்ணம் சொன்னார்கள்.

முருகனுக்கு நிஜமாகவே இரக்கம்மேலிட்டது. சின்னம்மாவின் கண்களில் கண்ணீர் உதிர ஆரம்பித்தது. பெண்ணல்லவா? தனக்குச் செய்த கொடுமைகளைக்கூட மறந்துவிட்டாள். அவர்கள் செய்கைக்கு மூலகாரணம் லக்ஷ்மி ஆதலால் அவளுக்கு அவர்கள்பேரில் இரக்கம் சுரந்தது.

முருகன் மூவரின் கட்டுக்களையும் அவிழ்த்தான்.

'எங்காவது சென்று நல்லவழியில் சம்பாதித்துப் பிழையுங்கள். கெட்ட வழியில் நுழைந்தால் கொஞ்சநாட்கள் சந்தோஷமாகத்தானிருக்கும். ஆனால் சிலநாட்களில் உயிருக்கே ஆபத்து நேரிடும் என்பதை நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இதோ பாருங்கள் இவனே உதாரணம் போங்கள்' என புத்திமதிகூறினான் முருகன்.

மூவரும் முருகனைக் கடவுளாகவேதான் நினைத்தார்கள். வணங்கினார்கள், கும்பிட்டார்கள். கடைசி முறையாக, தங்களை கெட்டவழியில் உழலச் செய்த லக்ஷ்மியைப் பார்த்தார்கள். மூவர் முகத்திலும் சரியான கோபம். பின்சென்றுவிட்டார்கள்.

'நீயும் செல்' என லக்ஷ்மியிடம் சின்னம்மா கூறினாள். கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டன.

லக்ஷ்மி அப்படியேதான் நின்றாள். துக்கத்துடன் தலையைத் தாழ்த்திய வண்ணமிருந்தாள். பேசவுமில்லை.

'ஏன்? என்ன சதிசெய்யலாம் என யோசிக்கின்றாயோ?' என சாம்பன் வெகு கோபத்துடன் கேட்டான்.

'ஐயோ! பாழும் ஜென்மம்' என அலறியவண்ணம் அப்படியே வீழ்ந்தாள் லக்ஷ்மி.

முருகனுக்கும், சின்னம்மாவுக்கும் சொல்லமுடியாத பரிதாபம்!

திடீரென லக்ஷ்மி எழுந்தாள். அவள் முகம் பிரகாசத்துடன் விளங்கியது.

'எங்குபோக உத்தேசம்?' எனக் கேட்டான் சாம்பன்.

முருகனும், சின்னம்மாவும் பேசாமல் அவளைப் பார்த்தவண்ணமிருந்தனர்.

லக்ஷ்மி நடந்தாள், நடைப்பிணம்போல.

மூவரும் அவர்களையுமறியாமல் பின் தொடர்ந்தனர்.

லக்ஷ்மி திரும்பி மூவரையும் பார்த்தாள். பின்வேகமாக நடந்தாள். திடீரென் ஓடினாள்.

மூவரும் விடவில்லை. ஐயோ! என்ன காரியம் லக்ஷ்மி செய்துவிட்டாள்!

லக்ஷ்மி அநாதையானாள். காப்பாற்றுவார் யாருமில்லை. அதனால் அந்த யோசனையைக் கைக்கொண்டாள்.

சந்தோஷத்துடன் தாவிக்குதித்தாள். முருகனுடைய வீட்டுக்குப் பக்கத்திலுள்ள கிணற்றில் ஒரே யடியாக ஸ்நானம் செய்து விட்டாள்.

மூவரும் திகைத்து நின்றனர்.

* * *

## துக்கத்திற்குப்பின் சுகம் உண்டு

திருடர்கள் சாம்பனுக்குக் கொடுத்த 80 ரூபாய், திருடர்கள் கொள்ளை யடித்து வைத்திருந்த 73 ரூபாய், ஆக 153 ரூபாய், இன்னும் கொஞ்ச சொந்த ரூபாயும் போட்டு முருகனும், சாம்பனும் சந்தைவியாபாரததை செய்யத் தொடங்கினார்கள்.

சின்னம்மா சௌக்கியமாயிருக்கிறாள்.

---

# மதியைக் கெடுக்கும் மது

[காரமடை - S. குழந்தைசாமி]

'நாதா! இனிமேலாவது தாங்கள் பாழும் இக் குடியையும் சூதாட்டத்தையும் விட்டு விடுங்கள். குடியாலல்லவா நமக்கிருந்த ஐந்து ஏக்கர் நிலமும் 30 பவுன் நகையும் 500 ரூபாய் ரொக்கமும் போய், நமது இரண்டு குழந்தைகளுக்கும் நமக்கும் குடிக்கக் கஞ்சியுமின்றிக் கஷ்டப்படுகிறோம். நான் விறகு வெட்டி விற்றுக் கொண்டுவரும் மூன்றணா ஒருவேளைக் கூழுக்குக் கூடப் போதாமலிருக்கத் தாங்கள் எத்தொழிலுக்கும் போகாது எப்பொழுதும் கள்ளுக்கடையே கதி எனக் காத்துக்கொண்டிருப்பது தர்மமா! இனிமேலாவது அக் குடிகார ரங்கநாதனுடைய நட்பை விட்டுவிட்டு, கள்ளுக்கடைக்குப் போவதை நிறுத்தி, ஓரிடத்தில் போய் வேலைக்கமர்ந்தால் நமக்குற்ற கஷ்டம் ஒருவாறு நீங்குமெனத் தோன்றுகிறது. ஆதலால் அவவிதமே செய்வீர்களா?' என்று கள்ளுக்கடைக்குப் போகவிருக்கும் தன் கணவன் ராமநாதனைப் பார்த்து மிகவும் கெஞ்சி அழுதவண்ணம் கேட்டாள் ஜானகி.

'ஏதடி! அருப்பு மூத்திக் குறும்பு அதிகரித்து விட்டதுபோலிருக்கிறது. நீ ஒரு பொட்டச் சிறுக்கி. நீயா எனக்குப் புத்தி புகட்டுபவள்?' என்று அதட்டி ஒரு உதை கொடுத்துவிட்டுச் சென்றான் ராமநாதன்.

ஆம்; ஒருவாறு யோக்கியதையோடு வாழ்ந்து வந்த ராமநாதன் ஒருநாள் தன் வீட்டின் வெளிப்புறம் உட்கார்ந்திருக்கும்போது அவனது நண்பனும் குடிகாரனுமான ரங்கநாதன் மிக்க சந்தோஷத்துடன் வருவதைப் பார்த்து அவனைக் கூப்பிட்டு, 'ஏது ரங்கா! இன்றைக்கு என்றுமில்லாக் குதூகலம். என்ன விசேடம்?' என்றான். 'தெரியாதா! இன்றைக்கு 100 ரூபாய் ஜெயம். அதுதான் வேறென்ன?' என்றான் ரங்கநாதன். இதைக் கேட்ட ராமநாதனுக்குத் தானும் ஆடிப்பார்க்க வேண்டுமெனும் ஆசை உண்டாகவே அதைத் தன் மனைவி ஜானகியிடம் தெரிவித்தான். அதுகேட்ட அவள், 'நாதா சூதாட்டம் பஞ்சமா பாதகங்களுள் ஒன்று. அது

மற்ற நான்கையும் செய்யத் தூண்டும். ஆதலால் இவ்வெண்ணத்தை விட்டு விடுங்கள்' என்று கெஞ்சினுள். 'இல்லேயடி 'களவும் கற்றுமற' என்பதற்கேற்ப இன்றைக்கு ஒருநாள் மட்டுந்தான்' என்று சொல்லி கட்டாயப்படுத்தி ஜானகியிடமிருந்து பத்து ரூபாய் பிடுங்கிச் சென்ருன். அன்றைய தினம் ராமநாதனுக்கு மூன்று ரூபாய் லாபம் கிடைக்கவே, ஆசை மேலீட்டால் அனுதினமும் அங்கு செல்ல எத்தனித்தான். 'கழுதையுடன் சேர்ந்த குதிரையும் கழுதையாகும்' என்பதற்கொப்ப ரங்கநாதனுடன் சேர்ந்த ராமனுதனும் குடிகாரனுைன். எனவே ஒரு வருடத்தில் தனக்கிருந்த சிறிது செல்வத்தையும் துலேத்து இப்போது கூழுக்குத் திண்டாட்டத்தி லிருக்கிருன்.

நிற்க, ராமநாதன் கள்ளுக்கடைக்குச் சென்றுவிடவே, தான் மிக்க ஜுரத்தால் பீடிக்கப்பட்டிருந்தாலும் தன் இரு குழந்தைகளின் பரிதாப நிலேயைக் காணச் சகிக்காத ஜானகி விறகு கொண்டுவரக் காட்டுக்குச் செல்ல நாட்டம் கொண்டு நடக்கலானுள்.

அன்று மாலே வேளே. கள்ளுக்கடைக்கும் கிராமத்திற்கும் மத்தியிலுள்ள ஒரு பள்ளத்தில் ஓர் ஆடவன் மது மயக்கத்தால் தலேகால் தெரியாது நடந்துகொண்டு ஒரு 'சாப்பீஸ்' துண்டையும் கடித்துக்கொண்டு வரும்போது, அது கீழே விழுந்துவிட்டது. அதைச் சுமார் 5 நிமிஷம் வரைத் தேடிப்பார்த்துக் கடைசியாகத் தான் தேடின பொருள் அடையப் பெற்றவனுய் மேலே எழுந்து நின்ருன். அப்போது அவனுடைய 'சாப்பீஸ்' 'கர், கர்' என்று கத்தவே மிக்க கோபங் கொண்டவனுய் 'ஓஞ போட்டு வாங்கல்லே. விட்டுடுவேண்ணு நினச்சுண்டையா?' என்று சொல்லி ஒரு கடி கடித்துவிட்டு மீதியை தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு கடைப்புறம் மீண்டும் திரும்பினுன்.

ஓர் ஏழைப் பெண் தலேமேல் விறகுச் சுமையுடன் காட்டிலிருந்து வீட்டுக்கு வெகு வேகமாய் நடந்து வருவதைக் கண்டான். உடனே அவளே வழிமறித்து 'ஊங்கிட்ட உள்ளதெல்லாங் கொடுக்கிருயா, இல்லாட்டா உதை வேணுமா, சொல்?' என்று அதட்டினுன். என் செய்வாள் பாவம்! நேரமோ மாலே நேரம். சமயமோ கதிரவன் மேற்றிசையில், மறைந்து எங்கும் காரிருள் சூழும் சமயம். நிலேமையோ தனிமையான நிலேமை. மிகவும் பயந்துகொண்டு 'ஐயா, என்னேத் தொந்தரவு செய்யாதீர்கள். என்னிடத்தில் இந்த வெள்ளி மோதிரத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லே. இதை எடுத்துக்கொண்டு என்னே விட்டு விடுங்கள்' என்று கெஞ்சினுள். இதற்குள் கள்ளுக்கடையிலிருந்து வந்துகொண்டிருந்த வேறொருவன் இவர்களே நெருங்கி 'என்ன அண்ணே, கழுத்திலே என்னமோ மின்னுதே. அதை ஏன் விட்டு விட்டாய்!' என்ருன். விறகுக்காரி மிக்க பரபரப்

புடன் 'ஐயா, அது என் புருஷனால் அணியப்பட்ட மாங்கல்யம். அதைத் தொடாதீர்கள். உங்களுக்குக் கோடிப் புண்ணியமுண்டு" என்றாள். 'அதெல்லாம் முடியாது. இல்லாவிட்டால் பல்லை உடச்சுடுவே' என்று சொல்லி அதையும் பிடுங்கிக் கொண்டான்.



இப்பாவிகளிடமிருந்து தப்பித்ததே தம்பிரான் புண்ணியம்' என நினைத்து நான்கடி வேகமா யெடுத்து வைத்தாள் விறகுக்காரி. அதற்குள் 'என்ன அண்ணே! பொம்பளெ ரொம்ப ஜோரா இருக்காளே. அவளை நாம் இருவரும்........' என்று பின்னால் வந்தவன் சொல்வதற்குள், முன்னவன் ஓடிச் சென்று அவளைத் தூக்க முயன்றான்.

தன் கற்பிற்குப் பங்கம் வருவதை யறிந்த விறகுக்காரி 'ஐயையோ' வென்று கூப்பாடு போட்டாள். அதே சமயத்தில் கிராமத்திலிருந்து கள்ளுக்கடையை நோக்கி வந்துகொண்டிருந்த ஒரு 'செந்தலைப் புலி' அச்சத்தத்தைக் கேட்டு வந்தான். இதை யறிந்த மற்றொரு குடிகாரன் ஓடிவிட்டான். வந்த போலீஸ்காரன் மற்ற இருவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று இன்ஸ்பெக்டரிடம் விஷயத்தை விவரமாய் சொன்னான். இன்ஸ்பெக்டர் அப்பெண்ணை வீட்டுக்குப்போய் மறுநாள் காலை வரும்படி சொல்லி விட்டு கைதியை 'லாக்கப்பில்' போடும்படி உத்தரவு பிறப்பித்தார்.

மறுநாட் காலை இன்ஸ்பெக்டர் கைதியைக் கூப்பிட்டு சோதனை செய்தார். அவனுடைய சட்டைப் பையில் அரையணாவும், ஒரு வெள்ளி மோதிரமும், ஒரு மாங்கல்யமும், தவளையின் ஒரு பாதி உடலும் இருந்தன 'பாதித் தவளை எப்படி வந்தது?' என்று கேட்க, 'பள்ளத்தில் 'சாப்பீஸ்' துண்டு கீழே விழ, அதைத் தேடி எடுத்துப் பாதியைக் கடித்துத் தின்றுவிட்டு மற்றொரு பாதியை சட்டைப் பையில் போட்டுக் கொண்டேன். அந்தப் பாதி இப்போது தவளையாயிருப்பதால் நான் தேடி எடுத்தது 'சாப்பீஸ்' துண்டு அல்ல என்றும் தவளையையே 'சாப்பீஸ்' துண்டு என்று நினைத்து எடுத்துப் பாதியைத்

தின்றிருக்க வேண்டும்' எனத் தெரிகிறது' என்று மிகவும் வெட்கத்துடன் சொல்லிக்கொண் டிருக்கும்போது, விறகுக்காரி அங்கு வந்து 'நாதா' என்று சொல்லி அக்கைதியைக் கட்டித் தழுவினாள் கைதி 'கண்ணே, ஜானகி!' என்று சொல்லி முத்தமிட்டான். (அச்சமயம் அவர்கள் இருவரும் போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறோம்' என்பதைக்கூட மறந்து விட்டார்கள் போலும்.)

இன்ஸ்பெக்டர் விவரங்களை இருவரிடமிருந்து நன்கு உணர்ந்து, "ராமநாதா, இனிமேலாவது இக்குடியை விட்டுவிடு. கண்ணியமான வேளாளனாகிய உன்னை, தவளையை சாப்பீஸ்' என்று நினைத்துத் தின்னும்படிச் செய்ததும், களவு காமம், சூது முதலிய பஞ்சமா பாதகங்களைச் செய்யும்படி தூண்டியதும், பெண்மணிகளின் தெய்வத்தன்மை பொருந்திய மாங்கல்யத்தையும் அஞ்சா நெஞ்சத்துடன் அபகரிக்கத் தூண்டியதும், இப்பாழும் கட்குடியல்லவா? ஆதலால் இனிமேலாவது இக் குடியை விடுத்து, 'நற்குடிப் பிறந்தோன்' எனப் பெயரெடு' என்று சொல்லியனுப்பினார்.

அன்று முதல் ராமநாதன் குடி முதலிய துர்பழக்கங்களை அறவே ஒழித்துச் சென்ற 5 வருடங்களாக 'தன் கருமமே கண்ணா' யிருப்பதால் இப்பொழுது பத்து ஏக்கர் தோட்டத்திற்கு எஜமானனாய் வாழ்கிறான்.

' உண்ணற்க கள்ளை யுணி லுண்க சான்றோரா
னெண்ணப் படவேண்டாதார் '

என்னும் தேவர் வாக்கே திருவாக்கு.



# வீரன்

[வி. ராமசாமி]

இயற்கையின் ஒப்பற்ற தோற்றம்! ஹா என்ன காட்சி! காண்போர் மனதையும், என் ஐப் புலன்களையும் ஒருங்கே மகிழ்விக்கும் காட்சி! ஆயினும் அந்தோ வெயிலின் கொடுமைதான் என்னே! அதிகாலையில் விம்மிதமுற்று உற்சாகத்துடன் தலைநிமிர்ந்து நின்ற மரங்கள் எல்லாம் தலைசோர்ந்து, 'இத்துன்பத்தைச் சகியோம்' என பூமியைப் பார்த்து வாடி நின்றன. வெயிலின் கொடுமையால் அனல் காற்று வீசத் தொடங்கிற்று. எந்த உயிர்ப்பிராணியும் இக்கொடும் வெயிலில் வெளிவர அஞ்சின. நேரமோ நடுப்பகல், மணியோ சுமார் 12½ இருக்கலாம்.

இது காலை வீரனின் செய்கையாது? அவன் ஓர் கோவணத்தையே தரித்திருந்தான். அவன் தலையில் ஓர் சிறிய கந்தைத் துணியே சுற்றப்பட்டிருந்தது. வீரன் சிறிதும் சலிப்பில்லாமல் தன் வேலையை மிக்க ஆர்வத்துடன் செய்தான். அவன் ஏன் இவ்விதம் இக்கொடும் வெயிலில் உழைக்க வேண்டும்? அத்தோட்டம் அவனுடையதா? இல்லை, இல்லை. ஓர் சாண் வயிற்றைப்பேண தன் உயிரையும் தியாகம் செய்து வருந்தி உழைக்கின்றான். அன்று அதிகாலை முதல் இதுவரை அவன் ஓர்பிடி உணவுகூட உட்கொள்ளவில்லை. சிறிது ஜலமே அவன் ஆத்மாவைக் குளிரச் செய்தது.

ஒளிவிடும் பருத்த தொந்தியும் சிறுத்த தலையும் அத்தலையில் எங்கோ சஹாராப் பாலைவனத்தில் தப்பிமுளைத்த சிறு செடிகளைப் போலும் உள்ள சிறிய உச்சிக்குடுமியும் கையில் ஓர் குடையும் பிடித்துக்கொண்டு சுப்பா சாஸ்திரிகள் தோட்டத்தினுள் பிரவேசித்தார்.

தன் எஜமானனைக் கண்ட வீரன் சட்டெனத் தன் வேலையை விட்டுவிட்டுத் தன்னிருகரங்களையும் தலைமேற் கூப்பி முதுகு வில்லென வளைய மிகத் தாழ்மையோடு தன் வணக்கத்தைச் செலுத்தினான். பின் கைகட்டி வாய் புதைத்து நின்றான்.

சுப்பா சாஸ்திரி:—'டே வீரா, ஏன் இன்னும் அதிக வேலை பாக்கி யிருக்கின்றது? வேலை செய்வதென்றால் உனக்கு முதுகு வளைவதில்லை. தடிப்பயல் உனக்கு எத்தனை தடவை சொல்லி யழுதாலும் வேலையைக் கவனிப்பதில்லை' என்று கர்சித்தார்.

வீரன்:—'எஜமான், இன்று காலை முதல் இதுவரையிலும் அன்ன ஆகாரம்கூட இல்லாமல் இருமடங்கு வேலை செய்து விட்டேன். இப்போ தங்கள் உத்தரவைப் பெற்றுக்கொண்டு பூரண கர்ப்பவதியாய் பிரசவ வேதனையால் அலறும் என் மனையாளைப்பேண என் குடிசைக்குச் செல்ல எண்ணினேன். என் ஐயனே, எனக்கு மகிழ்வுடன் விடைதாரும்,' எனப் பணிவுடன் வேண்டினன்.

சுப்பா:—'என்னடா இன்னும் ஒரு வேலையும் முடியவில்லை, போதாத குறைக்கு இன்று விடுமுறை வேறு கேட்கிறாய். மரியாதை யாக எல்லா வேலையையும் முடித்துவிட்டு வேண்டுமானால் ஓர் மணி நேரத்திற்கு முன் செல்' என அதிகாரத் தோரணையில் உத்தரவிட்டார்.

வீரன்:—'ஐயோ கடவுளே! இந்நேரம் என் மனைவி யாதரவினளோ? இனி நான் அவளை உயிருடன் காண்பதும் கூடுமோ? அவளை யாதரிக்க பக்கத்தில் உற்றார் யாருமிலர்.

'ஐயனே தாங்கள் தான் கதி. விடை கொடுங்கள்.'

சுப்பா:—'டே முட்டாப் பயலே, யாரிடம் உன் கைவரிசை யைக் காட்டுகிறாய்? என்னிடம் உன் நடிப்புச் செல்லாது. மரியாதை யாக வேலையைப்போய் செய்.'

வீரன்:—'இன்று இனி என் உயிர் போவதாயினும் வேலை செய்யேன். என் நிலைமையைத் தங்களுடையதாகப் பாவித்துப் பாருங்கள். ஆண்டவனே தங்கள் மனம் கல்லா. என் துயரைக் கேட்டால் கருங்கல்லும் கரைந்துருகுமே'

சுப்பா:—'சீச்சீ நாயே, பரமசண்டாளப் பறையா, உனக்கு இவ்வளவு திமிரா? என்னை எதிர்த்துப் பேசும் வீரமும் உனக் குண்டா? முதுகுத்தோலை உரித்து விடுவேன். பத்திரம்' என்று கோபாவேசத்துடன் கர்ஜித்தார்.

வீரனின் கண்கள் தாரை தாரையாக நீரைச் சொரிந்தன. ஆறாத்துயர் அடைந்தான். பசியோர்புறம் அவனை வதைக்கிறது. அவன் நெஞ்சை அவன் காதலியின் துயரம் துளைக்கிறது. பாவம் அவன் ஓர் பஞ்சமன். அவனைக் கவனிப்பார் யார்! கடைசியாக வீரன் ஓர் முடிவிற்கு வந்தவன் போலக் காணப்பட்டான். 'வருவது வரட்டும். இனி நான் மனம் தளரேன்' என்று எண்ணிக் கொண்டு அவ்விடத்தைவிட்டு ஓடினான். ஐயருக்குக் கோபம் பொங் கிற்று. அருகில் வேலைசெய்து கொண்டிருந்த இருமூட்டுக் குடியான வர்களைக் கூவி அவர்களால் வீரனைப் பிடித்து ஓர் புளியமரத்தில் கட்டச் செய்தார்.

அந்தோ! கொடுமையும் மடமையும் கொண்ட காட்சி! ஐயோ! அம்மூடர்கள் பெரிய தடிகளால் வீரனை நையப்புடைக்கின்றனர். வீரன் சகிக்கவியலாத துயருடன் கூக்குரலிடுகிறான். அவ்வழியே

செல்லும் மடமையே அணியாகக் கொண்ட மாந்தர் இதைக் கண்டு சந்தோஷிக்கின்றனர். என்ன மனிதரின் மடமை! வீரனுக்கு யார் உதவி செய்யப் போகின்றனர்? ஏன்? அவன் ஓர் நீசன். அடிமை என பிறர் எண்ணும் ஜாதியன். இது நம் புண்ணிய நன்னாட்டில் தொன்று தொட்டு வளர்ந்து நிலைத்தோங்கிய பேதமையன்றோ!

வீரன் சிறிது நேரத்தில் கட்டவிழ்க்கப்பட்டான். இப்போது வீரன் உண்மையில் வீரனாகவே தோன்றினான். அவன் உடம்பில் வீர ரத்தம் துள்ளிக் குதித்தோடிற்று. மனோவேகவும் பின்னிடும் வேகத்துடன் ஓடலுற்றான் வீரன். ஐயரின் அகந்தைக்கும் அறியாமைக்கும் கோபத்திற்கும் ஓர் எல்லையில்லை. தான் செய்வ தின்னதென்றும் உணராராய் வீரனைப் பின் தொடர்ந்து ஓடலுற்றார்.

ஐயர் பின்னும் வீரன் முன்னுமாக சுப்பா சாஸ்திரியாரின் அடுத்த தோட்டத்தின் வழியாக ஓடினர்.

ஹா! மாந்தரின் ஐம்புலன்களுக்கும் எட்டாத ஓர் ஒப்பற்ற உன்னத சக்தி; அணுவளவும் பாரபட்சமில்லாத ஒப்பற்ற நடுநிலைமை கொண்ட சக்தி, அதனை யார் வருணிக்க முடியும்? சுப்பா சாஸ்திரியும் வீரனும் அந்த சக்தியின் திருவிளையாடலைக் காணுமாறு நேர்ந்தது.

ஐயரும் வீரனும் ஓடும்வழி ஓர் ஒற்றடிப் பாதை. ஓரிடத்தில் அதன் பக்கமாக ஓர் ஆழமான கிணறு ஒன்றுண்டு. அதன் வழியாக வீரன் ஓடினான். ஓடிய வீரன் திடுக்கிட்டு நின்றான். அவன் கண்முன் கண்ட கோலம் அவனை நிலை கலங்கச் செய்தது. அவன் கண்ட கோலம் என்ன?



ஐயரின் அருந்தவப் புதல்வனான 5-ந்து வயதுடைய மணி அச்சமயம் அவ் வழியாக ஓடி வந்தான். கேணியின் அருகில் வரும்போது அவனெதிரில் ஓர் கருநாகம் படமெடுத்தாடிற்று. இதைக்

கண்ட பாலன் பதறி நடுநடுங்கி ஓலமிட்டபடியே கால் தவறி அக் கேணியில் விழ்ந்து விட்டான் இதைக்கண்ட வீரனின் அன்பு வயப்பட்ட மனம் நிலை கலங்கிற்று. அவ்வினாடியே சற்றும் சிந்தியாமல் அக்கிணற்றில் குதித்தான். இதற்குள் அச்சேய் தண்ணீரை நிறையக் குடித்து தண்ணீரின் அடியில்படியும் வேளை. அத்தருணம் வீரன் தண்ணீரினுள் மூழ்கி சிறுவனைத் தூக்கித் தன் தோள்மேற் சாத்தியபடியே நீந்தலானான். அக்கிணற்றின்படிக்கு வெகு கீழே தண்ணீர் இருந்ததால் வெளியேவர மார்க்கம் இல்லை.

இதைக் கண்ட சுப்பா சாஸ்திரிகள் கோ எனக் கதறியழுதார். ஐயோ பாவம்! 'தன் கண்ணைக் குத்தினாற்றான் அதன்வருத்தம் தெரியும்' என்பது இப்போது புலனாயிற்று. தன் குலத்தை விளக்க வந்த அருந்தவப் புதல்வனின் நிலையைக் காண அவர் மனம் என்ன பாடுபட்டிருக்கும்! உடனே சாஸ்திரியார் பக்கத்தில் வேலைசெய்து கொண்டிருந்த வேலையாட்களை அழைத்து வந்து ஓர் பெரிய கயிற்றால் இருவரையும் வெளியேற்றினார்.

மணியின் உடம்பில் உயிர்க்களையேயில்லை. வீரன் சிறுவனைத் தலைகீழாகப் பிடித்து அவன் உண்ட நீரை எல்லாம் கக்கச்செய்தான். பின் வேண்டிய சிகிச்சைகளை எல்லாம் அவனே பிரதானமாகக் கவனித்தான். நெடுநேரத்திற்குப் பின் மணி சிறிது சிறிதாக சுவாசம் விட்டான். இப்போதுதான் சாஸ்திரியாருக்கு உயிர் வந்தது. வீரனை அங்குமிங்கும் பார்த்தார். அவன் அங்கு காணப்படவில்லை.

ஓர் வினாடி வீரன் வாராமலிருந்திருந்தால் சாஸ்திரிகள் தன் அருமை மகனின் உயிரற்ற சடலத்தையன்றோ கண்டிருப்பார்! தன் உயிரையும் போற்றாமல் தன்னுடைய மகனைக்காத்த வீரனின் தயாளகுணத்தை எண்ணிஎண்ணி வியந்தார். தன் செய்கையை நினைத்து தன்னைத் தானே வெறுத்துக்கொண்டார். இப்போதுதான் சுப்பா சாஸ்திரிகளுக்கு பகுத்தறிவும் கருணையும் தோன்றலாயிற்று. இவ்விதம் அன்றைய பகல் முடிவெய்திற்று.

மறுநாள் கங்குல் நீங்கிக் காகம் கரையக் காலையுமாயிற்று. சுப்பா சாஸ்திரியார் அந்த அதிகாலையில் வீரனைக் காணவேண்டுமென்ற ஆவல் பிடரியைப் பிடித்துத்தள்ள தன் தோட்டத்தை அடைந்தார்.

வீரன் வழக்கம்போல் ஐயருக்கு வணக்கம் செலுத்தினன். 'ஹா வீரா' என்று ஐயர் வீரனை மார்புடன் கட்டித் தழுவினார். "அன்பனே, தாழ்ந்த குலத்துதித்த உன் ஒப்பில்லா தயாள குணத்தை

நேற்றல்லவோ கண்டேன். ஜாதி மதத்தை அறவே விட்டேன். இது சத்தியம் சத்தியம்' என்று உரைத்தார்.

வீரன் சென்ற நாளில் தன் மனைவி கள்ளி சொர்ணமயமான ஓர் பெண் மகவையீன்றதைக் கூறினான். ஐயர் ஆனந்த சாகரத்தின் எல்லையைக் கண்டார். தன் மகன் மணிக்கு வீரனின் மகளை மணப்பிப்பதாக உறுதியுடன் புகன்றார். வீரன் ஒன்றும் விளங்காமல் திகைத்து நின்றான்.

வருடங்கள் 20 சென்றோடி மறைந்தன. சுப்பா சாஸ்திரியார் முன்னைவிட இப்போது பன்மடங்கு செல்வந்தராய் வாழ்கின்றார். நீலபுரியில் அவர்தான் 'தீண்டாமை விலக்கு சபையின் தலைவர்.

சாஸ்திரிகளின் திவ்யமான மாளிகை. மாளிகையின் பின்புறம் இயற்கையின் வன்மையை விளக்கும் சிங்கார நந்தவனம் காணப்பட்டது. அங்கு காணும காட்சியாது? ஓர் சொர்ணமயமான மங்கையும் ஓர் இளங்கட்டிளங் காளையும் ஒருவரை ஒருவர் முத்தமிடும் காட்சி. அவர்கள் யார்? சுப்பா சாஸ்திரியாரின் அருமை மகன் பாலசுப்பிரமணியமும் வீரனின் வீரமகள் வீரலக்குமியுமே யாவர்

'பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.'



# உத்தமி ஊர்மிளா

[கொழும்பு. எஸ். முத்துராமன்]

வடிவழகி ஊர்மிளா மாலை நேரத்தில் தன் வீட்டின் பின்புறத்துள்ள தோட்டத்துக்கு சென்றாள். அங்கு வனப்பு மிக்க இயற்கைக் காட்சிகள் அவளுக்கு இன்ப விருந்தளித்தன. நறுமணமிகுந்த—அப்பொழுதே பூத்த—மலர்கள் அவளை ஆவலுடன் அழைத்தன. அவைகள் எவர் மனதையும் கவரத்தக்கனவாக அமைந்திருந்தன

ஊர்மிளா ஒரு ரோஜா செடியினருகிற் சென்று அதிலிருந்த அழகிய புட்பத்தை நுகர்ந்தாள். சட்டென அவளது மனதில் ஏதோ தோன்றியது. அம்மலரை அச்செடியிலிருந்த படியே கசக்கி விட்டாள்.



'ஏ! இயற்கை அழகுகளே! நான் தனியே வந்ததுபற்றி எள்ளனம் செய்கிறீர்களோ? ஆ! நீங்கள் என் செய்வீர்கள்? நீங்கள் என்ன முயன்றாலும் எனக்கு இன்ப மூட்ட முடியாது. இல்லற இன்பமற்ற எனக்கு உங்களின்ப மட்டு மிருந்து யாதுபயன்? அதோ! அத்தம்பதிகள் தோட்டத்திற்குச் சென்று அங்கு அளவளாவிக்கொண்டு குதூகலமாகத் தங்கள் பொழுதினை காதல் விளையாட்டு விளையாடி இன்புறக் கழித்து தம்மில்ல மேகுகின்றனர். அக்காதலர்களிருவரிலும் ஒவ்வொருவரும் மற்றவருக்காகவே தான் பிறந்ததாக வெண்ணித் தங்கள் இல்லறத்தை நன்முறையில்—நேரிய வழியில்—இன்பமே நடாத்துகின்றனர்! அவர்கள் போன்றாருக்கே உங்கள் அழகு தெள்ளிதில் புலப்படும். உங்களைக் கண்டதும் அவர்களுக்கே உற்சாகம் ஏற்படும். என்வரையில் உங்களால் ஒன்றும் செய்யவியலாது. உங்களைப் பார்க்குமளவில் எனக்கு வெறுப்புண்

டாகிறது. அது உங்கள் குற்றமல்ல! என்று நான் அவ்வின்பத்தை அனுபவிப்பேனே, அன்றேதான் என்மனம் உங்கள்பால் செல்லும்' என்று அவைகளை நோக்கிக் கூறினள்.

உடனே அவளது கால்கள் அவள் அறையினுள் அவளைக் கொண்டுவிட்டது. அங்கு ஓர் நாற்காலியிலமர்ந்து ஆழ்ந்த யோசனையில் மூழ்கினள். அவளது கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகி செக்கச்செவேரென விருந்த கன்னங் களில் வழிந்தோடியது. அடிக்கடி பெருமூச்சு விட்டாள். அவள் மனம் கடல் அலைபோன்று கிக்குமுக்காடியது. அவள் தன்னை அறியாமலே, 'ஏ! சர்வேச்வரா! லோகநாதா! இப்பாவியை ஏன் இவ் வுலகில் ஜனிக்கச் செய்தாய்! கணவனிருந்தும் இல்லற இன்பத்தை நுகராத துர்ப்பாக்கியவதி யானேனே! இதை எதுகாறும் தான் பொறுமையுடன் கழிப்பேன்? ஏ ஆபத்பாந்தவா! இனிப் பொறுக்கமாட்டேன். நான் எல்லாவழிகளிலும் முயன்றேனே! அவைகள் யாவும் வீணாயினவே! என் நாதர் எவ்விதமும் சேர்படுவ தாகத் தெரியவில்லையே! அவர் தொடர்ந்து இரண்டு மூன்றுதினங் கள்கூட பிறமாதர் வீட்டில் தங்கிவிடுகின்றனரே! கொண்டவள் நானிருக்க அ........வ.......ர் அறிகிலேனே! யான் இப்பூவுலகில் பிறந் தென், பிறவாமலென்? இனி உயிர்வாழ்வதினின்றும் உயிர்விடுவது நலமன்றோ!' எனப்பலவாறு புலம்பினள்.

திடீரென அவள் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. ஏதோ ஓர் முடிவுக்கு வந்தவள்போல் எழுந்து தன் தோழி பங்கஜம் வீட்டிற் குச் சென்றாள். அங்கு அவளைக்கண்டு சிலமணிநேரம் சம்பாஷித் திருந்துவிட்டுச் சந்தோஷமாய் விடைகினள்.

* * *

சந்திரசேகரன் ஏதோ ஓர் ஆழ்ந்தயோசனையில் தன் மேஜைக் கருகில் அமர்ந்திருந்தான். அப்பொழுது தபால்காரன் ஒரு தபாலைக் கொடுத்துப் போனான். அதைப் பிரித்துப் பார்த்தபோது அதில் பின்வருமாறிருக்கக் கண்டான்:—

பிரிய நேசரே,

நீரோ மிகுந்த நல்லொழுக்க முடையவர். கபடமறியாத சாது. இந் நற்குண முடைய உம்மை வஞ்சித்து உம்மனைவி பிற ஆடவனொரு வனுடன் நட்புக்கொண்டுள்ளாள். அவன் தினம் நீர் வீட்டி லில்லாத சமயம் உம்மனைவியிடம் வருகிறான். அவ்வமயம் அவர்கள்பேசும் காதல்மொழிகள் கணக்கிடற்கரியன. இனியாவது உம் வீட்டில் என்ன நடக்கிறதென ஒளிந்திருந்து பாரும். அப் பொழுது நான் யெழுதியது உண்மையென நம்புவீர். அவசரப்பட்டு

எது விஷயத்தையும் ஆராயாமல் எதுவும் செய்யாதீர். பொறுமையுடனிருந்து கவனியும். இது விஷயம் இரகசியமாக விருக்கட்டும்.

இங்ஙனம்,

உமது க்ஷேமத்தை நாடும்,

நன்மை நவிலுபவன்.

இதைப்படித்த அவன் மனம் எவ்வாறிருக்கும்? பேரிடிவிழுந்ததுபோலிருந்தது. மிக்க ஆவேசம் கொண்டான். முதலில் ஊர்மிளாவை வெட்டி வீழ்த்திவிடுவோமா வென எண்ணினான். பின்னர் கடிதத்தில் பொறுமையோடிருக்கும்படி வரைந்திருந்தது ஞாபகத்திற்குவரச் சிறிது சாந்தமடைந்தான். 'ஒருக்கால் இக்கடிதத்தில் குறிப்பிட்டது பொய்யாக விருக்கலாமோ! எதற்கும் இரண்டு மூன்றுதினம் இதைக் கவனித்து வருவோம்' என முடிவு செய்துகொண்டான்.

* * *

இரண்டு தினங்களாய் தன் கணவன் தன்னில்லத்திலேயே இருப்பது கண்டு ஊர்மிளா சந்தோஷமிக்கவளாய் அவனருகிற் சென்று அன்புடன், 'நாதா! ஏது இரண்டுநாளாய் இங்கே தங்கி விட்டீர்கள். முகவாட்டத்துடன் காணப்படுகிறீர்களே! தங்கள் வெளிவேலைகளில் யாதும் துக்ககரமான சம்பவம் நடைபெற்றதா?' என வினவினன்.

சந்திரசேகரன் மௌனவிரதம் பூண்டான். அவள் முகத்தைச் சிறிதேனும் நோக்கினனில்லை அவன். இதை அறிந்த ஊர்மிளா மிக வருத்தம் கொண்டவளாய் அவன் முன்பு உட்கார்ந்துகொண்டு அவனது கையைத் தனது மெல்லிய கரத்தால் பிடித்து, 'ஏன் மௌனம் சாதிக்கின்றீர்கள்? அடியாள் மீது ஏதேனும் கோபமுண்டா? அப்படித்தாங்கள் கோபமுறும் வண்ணம் யாதுகுற்றம் புரிந்தேன்?' என அன்பு வெள்ளம் கரைபுரண்டோட கெஞ்சி வேண்டினள்.

அவ்வார்த்தைகளைச் செவியில் போட்டுக்கொள்ளாது அவளது கைகளை உதறிவிட்டு எழுந்து அப்புறம் போய்விட்டான் சந்திரசேகரன். ஊர்மிளாவும் மனம் நொந்தவள்போல் அவ்விடம் விட்டகன்றாள்.

* * *

சந்திரசேகரன் மனதில் ஒரு பக்கம் தன் ஆசைக்காதலியைக் காணவேண்டுமென்ற அளவிடற்கரிய அவாவும், மறுபக்கம் லிகிதத்தில் கண்டபடி தன் வீட்டில் நடைபெறுகிறதா என்பதனைக் கண்ணுற வேண்டுமென்ற கட்டாயமும் எழுந்துபோராடின. கடைசி

யில் பின்னதுதான் வெற்றியடைந்தது. ஆகலின் இன்னமும் தன் வீட்டிலிருந்து பார்த்துவிடுவதெனத் தீர்மானித்தான். அவ்விரண்டு தினங்களிலும் ஆசைக்காதலியை இன்புறத் தழுவ அவனது கரங்கள் படாத பாடுபட்டன! அச்சில தினங்களில் காய்ந்த புட்பம் போல் பொலிவிழந்து விளங்கினான். என்னமோ ஒருவிதமாக மனத்தினைத் திடப்படுத்திக்கொண்டு வீட்டிலிருந்து விட்டான்.

இரண்டு தினங்களுக்கு மேலாய் தான் வீட்டிலிருந்தும் அவ்விதமொரு ஆடவரும் வாராதது கண்டு, தான் அங்கிருப்பதாலேயே வாராமலிருக்கலாமென வெண்ணி இனி அங்கிருப்பதால் ஒன்றும் காணுதல் வியலாதென அக்கம் பக்கத்திலிருந்த வீடுகளிலிருந்து கொண்டு, தன் வீட்டில் நடப்பவைகளைக் கவனிக்கலானான்.

கடதம் வந்த மூன்றாவது தினம் இரவு ஒன்பதுமணியிருக்கும். ஒரு சுந்தரமான ஆடவன் நவநாகரிகமாக ஆடை புனைந்துகொண்டு தலையில் ஒரு தலைப்பாகையுடனும், மூக்கில் மூக்குக் கண்ணாடியுடனும், கையில் ஒரு தடித்த பிரம்புடனும், கெம்பீர நடையுடனும் ஊர்மிளாவினில்லத்தினுள் புகுந்தான். அவனைக்கண்ட ஊர்மிளா மிகுந்த அன்புவணக்கத்துடன் வரவேற்று உபசரித்து ஒரு சோபாவில் அமரச் செய்து தானும் அவனருகிலமர்ந்து கொண்டாள். இருவர் கண் பார்வைகளும் ஒன்றோடொன்று கலந்தன. ஒரே சமயத்தில் இருவர் முகத்திலும் புன்னகை தாண்டவமாடியது. ஊர்மிளா நாணப்பட்டவள்போல் அபிநயித்தாள். சிறிதுநேரம் மௌனம் ஆட்சி புரிந்தது.

பின்னர் வந்த ஆடவன் பேச ஆரம்பித்து, 'என் கண்ணே! அருங்கனியே! உன்னை என் அருமைக் காதலியாகப் பெற்ற பாக்கியமே பாக்கியம். உனது ஒவ்வொரு அங்க அமைப்பின் அழகினைக் கண்ட எவ்வாடவன்தான் உன்பால் மையல் கொள்ளாதிருப்பான்? உனது நற்குண நற்செய்கைகளைக் கண்ணுற்ற எவர்தான் உன்னுடன் உரையாட இச்சிக்காமலிருப்பர்? துர்ப்பாக்கிய வசத்தாலேயே அப்பாதகனைக் கணவனாக அடைந்தாய்! உன்மேல் அவன் மனம் ஈடுபடாதது பெரும் வியப்பே! ரதியையும் பழிக்கும் வனப்பையும், கலைமகளை யொத்த கல்வியையும் பெற்ற உன்னை விட்டு அம்மாபாதகன் பிறமாதர் வலையில் சிக்கியது பெரும் ஆச்சரியமே! அக்கொடியன் இரண்டு நாளாய் இவண் காத்துகிடந்ததாலேயே இங்குவாராதிருந்துவிட்டேன். அவ்விரண்டு நாட்களிலும் யான்பட்டபாட்டை என் கேட்கிறாய்? கொஞ்ச நஞ்சமல்ல, வேறொன்றிலும் புத்தி செல்வதாயில்லை. நல்லவேளையாய் இன்றாவது அவன் தொலைந்து போனானே! இரண்டு நாளாய் இவ்வுடல் உன்னைக் கட்டித்தழுவாது சோம்பிப்போயிற்று.'

அதிருக்கட்டும்; உன் யௌவன பருவத்தை வீணே கழிக்காதவாறு என்னைக் காதலனாய் அடைந்துவிட்டாய். இனி அந்நியோந்நியக் காதலர்களாய்த் திகழலாம். இச்சண்டாளனுக்காக நம் காதலை மறைத்து வைக்கப்படாது. இவ்விதம் எவ்வளவு நாள் தானிருப்பது? ஆகவே நம் காதலைப் பகிரங்கப்படுத்திவிடுவோம். நாம் இனி இவ்வீட்டில் தங்காது வேறிடம் சென்றுவிடுவோம்! அம்மூடன் யாரோடையும் கட்டிச் சேரட்டும். அவன் இவ்விதம் உன்னைப் படுத்தின விதத்திற்கு தெய்வம் ஒன்று இருக்கும் பக்ஷத்தில் அவனை இலகுவில் விட்டுவிடாது! அதற்குத் தக்க நாகவேதனை அனுபவிப்பான். அவன் இவ்விதம் திரிந்து கடைசியில் பிறபெண்களால் அவனது சொத்து முழுதும் அபகரிக்கப்பெற்று பிச்சையெடுத்து ஜீவிக்கவேண்டியவனே! இல்லற இன்பத்தினருமை தெரியாத அம்மடையன் எக்கதியானால் நமக்கென்ன? காதல் மகிமை அறியாத அம்மூர்க்கன் எக்கேடு கெட்டும் அழிந்துபோகட்டும்! இனி நாம் கண்ணியமிக்க காதலர்களாக உலவுவோம். கிடைத்தற்கரிய காதல் இன்பத்தை நுகருவோம். காதலே இன்பம், காதலே சுவர்க்கம், என யாவருக்கும் எடுத்தோதுவோம். நம் யௌவன காலத்தை இன்ப வழியில் செலவிடுவோம்' எனத் தன் அரிய பிரசங்கத்தை முடித்து ஊர்மிளாவென்ற அப்பொற்கொடியாளை இறுகக் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்து அவளது செவ்விதழ்களில் முத்தமழை பெய்வித்தான்.



இவையனைத்தையும் ஜன்னலின் வழியாக நோக்கிக்கொண்டிருந்த ஒரு உருவம் படீரெனக் கதவைத்திறந்துகொண்டு உள் நுழைந்தது. எவர் உருவமது? அதுதான் சந்திரசேகரனின் உருவம்! அவன் அவர்களை அணுகியதும், 'ஏ! அற்பப்பயலே! என்னகாரியம் செய்தனை? நீ யாவன்? அப்புறம் சென்று தூர நில்!' என அப்புதிய காதலனை நோக்கிக் கர்ஜித்தான்.

ஊர்மிளா எழுந்து விலகி நின்றாள், அக்காதலன் எழுந்து தைரியமுடன், 'ஐயா! ஏன் கோபமடைய வேண்டும்? யான் என்ன காரியத்தைச் செய்துவிட்டேன்?' எனக் கடாவினான்.

'இவள் விவாகமாகப்பெற்றவள். இவள் எனது மனைவி என்று அறியாது எவ்வாறு இவளுடன் தனித்து உறவாடவும் முத்தமிடவும் துணிந்தாய்? அசடனே உன்னை இலகுவில் விடேன். இவளுடன் கள்ள நட்புக்கொண்ட துஷ்டத்தனத்திற்கு இப்பொழுது உன்னை என்ன செய்கிறேன் பார்!' எனக் கோபத்துடன் அவன்மீது சீறி விழுந்தான்.

'நண்பரே! முதலாவது கோபத்தை ஒரு புறமாகக் கட்டி வைத்து விட்டுச் சிறிது சாந்தமடைந்து யான் உரைப்பதைக் கவனியும்! யான் ஒரு குற்றமும் செய்யவில்லை. நேரிய முறையில்தான் நடந்து கொண்டேன். நீர் இதுவரை சிறியமுறையில் நடந்திருப்பதாயின் நானும் அவ்விதமே நடந்திருக்கிறேன். ஆகையின் என்மீது யாதொரு பிழையுமில்லை' எனப்பதிலிறுத்தான் புதியவன்.

'என்ன நீ சொல்வதொன்றும் விளங்கவில்லையே. நீ செய்த காரியம் தப்பில்லையா? என் வீணே அளக்கின்றாய்? அதோடு நிறுத்திக்கொள். இதோ போலீசாரை வரவழைக்கிறேன். பின்னர் தப்போ தப்பில்லையோ வென்பதைக் கவனிப்போம்' என்று டெலிபோன் அண்டை போனான் சந்திரன்.

'அன்பரே! போலீசார்வரின் அவமானம் ஏற்படுவது உமக்குத்தான் என்பதை முதலாவது அறிந்துகொள்ளும். சிறிது அமைதியோடு கேளும். உம் செய்கை முற்றும் யானறிவேன். நீர் பிறர் மாதருடன் கள்ள நட்புக்கொண்டுள்ளீர். அதுபோலவேதான் நான் உம் மனையாள்மீது காதல்கொள்வதும் இயல்பே. இதிலென்ன குற்ற மிருக்கிறது? புருஷன்மட்டும் தான் கொண்ட மனைவியை விட்டு பிறர்மனைவியுடன் காதலுறவாடலாம். மனைவிமட்டும் அவ்விதம் பிற ஆடவனொருவனுடன் காதல் உறவாடலாகாது. அது என்ன அநியாயம்? ஆணுக்கொருநீதி, பெண்ணுக்கொரு நீதியோ? முதலாவது புருடன் ஏக பத்தினிவிரதனாயிருந்தாலல்லவோ மனைவி பத்தினியாயிருப்பாள்! உம் மனைவி பிற ஆடவனைக் கட்டி யணைக்க உம் மனம் ஒப்பவில்லையே' அதுபோலவே, நீர் வேறுமாதைக் கட்டி யணைக்க உம் மனைவி மனம் எப்படி ஒப்பும்? உம் மனைவியிடம் கள்ள உறவுகொண்ட என்னைக்கண்டபோது சீறி விழுகின்றீரே! இப்பொழுது உம் மனம் என்ன பாடுபடுகிறது? உம் மனைவி வியபிசாரி என்றறிந்ததும் உம் மனது துடிக்கின்றதே! போலீசாரை அழைக்கவும் ஆயத்தம் செய்கிறீரே! அதேபோல்தானே நீர் இன்னொருவர் மனைவியை ஆசை நாயகியாகக்கொண்டதை அவளின் கணவன் காணின் கோபாவேசம்கொண்டு உம்மை அவ்விடத்திலேயே கொலை செய்துவிடவும் துணிந்துவிடுவானன்றோ! இக்கள்ள நடத்தையை எதுகாறும்தான் உம்மால் மறைத்து வைக்கமுடியும்? நீர் பிறபெண்களை இச்சிக்கும்போது உம் மனைவி ஏன் பிற.......,........

இச்சிக்கலாகாது? ஆதலால் இனியாவது நன்னடத்தையைக் கைக் கொள்ளுவீரா!' எனப் புகன்றான் அப்புதிய மனிதன்.

சந்திரசேகரனுக்கு என்னசெய்வதென்பதுகூடப் புலப்பட வில்லை. பேச நா வெழவில்லை. தனது செய்கை வெளிப்பட்டு விட்டதென வருந்தினான். தான் செய்த ஒழுங்கற்ற செயலையுணர்ந்து துக்கித்தான். எதிரிலிருக்கும் புதியவனது முகத்தைப் பார்க்கவும் மனம் கூசினான். தனக்கேற்பட்ட இவ்வவமானத்திற்கு உயிர் விடுவதே தகுமென நினைத்தான்.

பின்னர் சிறிது தைரியங்கொண்டு, 'ஐயா! நீங்கள் உண்மையி லேயே எனது மனையாட்டியின் சோர நாயகனாகத் தென்பட வில்லையே! எனக்குப் புத்திபுகட்ட வந்தவராகவல்லவோ தெரிகிறது! தயைகூர்ந்து உங்கள் பெயரை முதலாவது வெளியிடுங்கள்' என்றான்.

'யான் யாரென அறிய ஆசைப்படுகிறீர்களா? இதோ பாருங் கள்!' எனத் தன் ஆண் வேஷத்தைக் களைந்தெறிந்தாள் பங்கஜம்.

அப்புதிய பெண்ணுருவைக்கண்ட சந்திரன் வெட்கித் தலைகுனிந் தான். அவன் ஒன்றுமே பேசவில்லை. இதைப் பார்த்துக்கொண்டிருந்த உத்தமி ஊர்மிளா உள்ளூர ஆனந்தம் கொண்டு புன்னகை புரிந்தாள்.

'ஐயா! உங்கள் கெட்ட நடத்தையால் தாங்கொணாத் துயர் கொண்டு ஊர்மிளா என்னிடமதை முறையிட்டாள். அவ்வித அரு வெறுக்கத்தக்க செய்கையினின்று உங்களை விடுவிக்கவே இவ்விதம் நாங்கள் யோசித்துச் செய்தோம். உங்களுக்குக் கடிதம் எழுதிய வளும் நானே! இது அவமானமெனறெண்ணித் துயரடையாதீர் கள். இவ்வற்ப உதவியாவது எனது தோழி ஊர்மிளாவுக்குச் செய்ய யான் கடமைப்பட்டுள்ளேன். ஆகவே இனிமேலாவது இல்லறத்தை நல்லறமாகக் கொள்ளுங்கள்' என்று முடித்தாள் பங்கஜம்.

சந்திரசேகரன், இனித் துக்கப்படுவதில் யாதொரு பிரயோஜனமு மில்லையெனக்கருதி, தன் செய்கைக்குத் தன்னையே நொந்துகொண்டு வாளாவிருந்தான்.

* * *

அன்று முதல் இன்றுவரை நானும் முயற்சித்துப் பார்த்து விட் டேன். அவனிடம் ஒரு கெட்டொழுக்கமாவது காணப்படவில்லை. அவனும் ஊர்மிளாவும் மிக அந்நியோந்நியமாக விருக்கின்றனர். முன் னிருந்ததிற்கும் இடபொழுதிருப்பதற்கும் நேர்விரோதமாக விருப் பதுகண்டு பேராச்சரியம் கொண்டேன். ஊர்மிளாமட்டும் பங்கஜம் செய்த பேருதவியை என்றும் மறக்கவில்லை! என் வளர்க்கவேண்டும். சந்திரசேகரன் இப்பொழுது பிற பெண்களை எறிட்டும் பார்ப்பது கிடையாது. அவன் பெரும் உத்தமனாகிவிட்டான்! தம்பதிகளிரு வரும் ஒருமனப்பட்டு உயிரும் உடலும்போலும் ஒருமித்து இன்ப மாக இல்வாழ்க்கையை நடத்துகின்றனர்.

---

# 'நாசி - கை இன்ஸ்யூரன்ஸ்'

—:o:—

[கா. தி. ஸ்ரீ.]



தலைப்பை பார்த்ததும் விளம்பரம் என்று விட்டு விடாதீர்கள்! விஷயத்தை அறியுங்கள்!! இன்றே சேருங்கள்! இலாபம் அடையுங்கள்!!

ஸ்தாபனம்:—தி பப்ளிக் எவர்ரெமிடி நோசிக் அஷ்யூரன்ஸ், இலாகிரித் தோட்டம் சென்னை.

தந்தி விலாசம்:—'நோசிக்'

மானேஜர்:—கனம் திருநாடு பிரமபத்ரம் என்ற அச்சுதன் பிள்ளை அவர்கள்.

பொக்கிஷதார்கள்:—கனம் ந. வேல்சங்கர்—அம்பிகைபாலன்—ஞானதேசிகம்.

ஏஜண்டுகள்—சப் ஏஜண்டுகள் எங்கும் ஏராளம் (பொதுநல ஊழியர்களே அதிகம்)

1. யாரையும் எக்காலத்திலும் பாலிசி ஹோல்டராகச் சேர்த்துக் கொள்ளப்படும். விண்ணப்ப மனு ஒன்றும் தேவையில்லை.

2. பிரீமியம் ஒன்றும் செலுத்தத் தேவையில்லை. நம்பிக்கையும் அபிமானமும் தேவை. மற்ற அஷ்யூரன்ஸ்களைப் போல நீங்கள் ஆயுள் காலத்தையாவது யாதொரு பொருளையாவது இன்ஸ்யூர் செய்ய வேண்டாம். ஆனால் 'நாசிகை' காக்கையும், தலைமயிரையும், அல்ல, 'நாசி-கை' மூக்கையும் கையையும் மட்டுமே இன்ஸ்யூர் செய்ய வேண்டும். அதற்காக உங்கள் முகத்தை போட்டோ பிடித்து அனுப்பச் சொல்லவில்லை. நமது ஏஜண்டு அல்லது சப்ஏஜண்டுகள் யாரிடமாவது அவ்வப்போது குறை ஏற்பட்டகாலத்தில் காண்பித்தல் வேண்டும்.

3. இதனால் பாலிசி ஹோல்டர்களுக்கு அவர்கள் விருப்பத்தின்படி வட்டியன்னியில் முதலில் கொஞ்சம் தள்ளிக்கொடுத்து கொடை வாங்கல் செய்யப்படும். கொடை வாங்கல் விஷயத்துக்கு நோட்டோ, யாதாஸ்தோ—ஈடோ—ரிஜிஸ்டிரேஷன் முதலிய எழுத்துப் பிடியோ யாதொன்றும் கிடையாது.

4. மெம்பர்கள் தேவையானமட்டும் எடுத்துக்கொள்ள பையுடன் கொடுக்கும்படி திட்டம் செய்யப்பட்டிருக்கிறது. எடுத்துக்

கொண்டு மீதியை மரியாதையுடன் ஏஜண்டிடம் வாபஸ் செய்துவிட வேண்டும்.

அடியிற்கண்ட சில அனுபோகஸ்தர்களின் நற்சாக்ஷிப் பத்திரங்களை கவனியுங்கள்:—

1. இராஜாக்கள்மங்கலம் இராமசாமி தீக்ஷிதர்:—நான் பெரிய வைதிக குடும்பத்தைச் சேர்ந்த குருக்கள். தங்கள் ஏஜண்டிடம் அதிக விசுவாசம் உண்டு. 'சாதிக்க' 'கடாக்ஷிக்க' என்ற வார்த்தையால் வாங்கி அனுபோகம். நல்ல லாபமடைந்திருக்கிறேன்.

2. சிவஞானம் பிள்ளை மெய்ஞானபுரம்:—நான் மௌன விரதம் கொண்டு சுமார் 7 வருஷமாகிறது. ஆகையால் வாய் பேசாமல் ஜாடை செய்து வாங்கியும் கொடுத்தும் இருக்கிறேன்.

3. தங்கள் சப்ஏஜண்டுகளில் சிலர் சிறுபையன்கள், என்னிடம் அகப்படுவார்கள். அவர்களைக் கண்டவுடன், 'உன் வியாபாரம் தெரியும். அதை இங்கே கொண்டாடா' என்று அதட்டி பிடுங்கி விடுவேன். சில சமயம் திருப்பிக் கொடுக்கும் வழக்கம் என்னிடம் இல்லாததால் முதல் இழந்துபோய் விடுவார்கள். அவர்கள் என்னைக் கண்டு பயப்படுவதால் அஞ்சாமலிருக்கும்படி அவர்களுக்கு எச்சரிக்கை செய்து வையுங்கள். இங்ஙனம்—அபிமானம்—வீரசாமி நாயுடு, வேலப்புறம்.

4. குருமலை குருநாத ஐயர்:—நான் சர்வ வியாபி; எங்கும் கலந்து அடிப்பேன். ஜாதிவித்யாசம் பாரேன். எல்லோரும் எனக்கு சுதந்திரம். போனதும் மடியில் கைபோட்டு பையைத் தூக்கிவிடுவேன். அவ்வளவு மதிப்பு எனக்கு உண்டு.

5. சுப்பிரமணிய ஆச்சாரி:—'வேலையில்லாத் திண்டாட்டத்தில் பணம் எங்கிருந்து கிடைக்கும்? பொடி வாங்கக்கூட ஒரு தம்பிடி கிடையாது ஐயா. என்ன செய்வது. ஒரு ஜோலியும் நடக்கவில்லை. 'தயவுசெய்து கொஞ்சம் கொடுங்கோ' என்று பஞ்சப்பாட்டு பாட வேண்டியிருக்கிறது. தங்கள் சப் ஏஜண்டுகள் என்னிடம் அதிக அனுதாபம் காட்டியே வருகிறார்கள். பாலிசி ஹோல்டர்கள் அனைவரும் சப் ஏஜண்டுகளாக சேர்ந்து கொண்டால் என்போன்றவர்களுக்கு மிகுந்த நன்மை பயக்குமென்று நினைக்கிறேன்.

குறிப்பு:—ஏஜண்டுகளாய் சேரப் பிரியப்படுகிறவர்களிடம் குறைந்தது ஒரு டின் நாசிகா சூர்ணமும், சப்ஏஜண்டுகளுக்கு காலணா பொடிப்பட்டையும் அவசியம் இருந்தால்தான் பாலிசி ஹோல்டர்களுக்கு கொடை வாங்கல் செய்ய சாத்தியப்படும். மற்றும் விஷயங்களுக்கு ஆபீசுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

இப்படிக்கு,

தங்கள் பொதுநல ஊழியன்,

குண்டாத்தடியன், காரியதரிசி.

# மனம்போல் மாங்கல்யம்

[V. நடராஜன்]



அழகே உருவெடுத்து வந்த ரத்னாம்பாள், சிறுத்த இடையும் ஒய்யார நடையும் பொன்னிற மேனியும் உடையவளாய், காண்போர் மனதைக் கவரத் தக்கவளாய், பதினாறு வயது நிரம்பப்பெற்ற மங்கையர் திலகமாய் விளங்கினாள். அவள் மூன்றாவது பாரம்வரை வாசித்தவள். கல்யாணசுந்தரஞ் செட்டியார் தன்னுடைய அருமை மகளையும் ஐந்துவயது புத்திரன் பத்மநாபனையும் கண்களை இமை காப்பதுபோல் காத்து வந்தார். சந்திர விலாஸ் என்ற அழகிய சிறிய ஒரு மாளிகை அவருக்குச் சொந்தமானது. தன் குடும்பச் செலவுகளுக்கு யாதொரு கவலையுமில்லாத நிலைமையில் கொஞ்சம் செல்வந்தராயினும், மிக்க கௌரவம் உடையவர்.

ராமச்சந்திரஞ் செட்டியார் கல்யாணசுந்தரஞ் செட்டியாரின் பந்து. ஆனால் ஏழை. குடும்பத்தைக் காப்பதே மிகவும் கஷ்டம். துரைராஜ், ஓர் அழகிய வாலிபன். தன் வளர்ப்பு தந்தையாகிய ராமச்சந்திரஞ் செட்டியார் மனமும் மாமனான கல்யாணசுந்தரஞ் செட்டியார் மனமும் கோணாமல் நடந்து வந்தான். துரைராஜ் இன்டர்மீடியேட்வரை வாசித்தவன். அவன் தன் மாமன் மகள் ரத்னாவை காதலித்ததுடன் ரத்னாவும் அவனை மிக்க நேசத்துடன் காதலித்து வந்தாள். இருவர் வீடுகளும் அதிக தூரத்திலிருந்தபடியால் ஒருவரை யொருவர் சந்திக்க முடிவதில்லை. ஆனால் இருவரும் தாங்கள் ஒருவரைவிட்டு மற்றவர் எக்காரணத்தாலும் வேறொருவரை கல்யாணம் செய்துகொள்வதில்லை என்று சத்தியம் செய்துகொண்டனர். ஆனால் எவ்விதக் காரணத்தாலோ கல்யாணசுந்தரஞ் செட்டியார் மட்டும் தன் மகள் ரத்னாவை துரைராஜாவுக்குக் கொடுப்பதில்லை என்று முடிவு செய்திருந்தார்.

* * *

ஒருநாள் மாலை 5 மணி. சந்திர விலாஸ் மாளிகை மிகவும் ஆடம்பரத்துடன் விளங்கியது. ரத்னாவின் தம்பியாகிய பத்மநாபனுக்கு அன்று அக்ஷராப்பியாசம் செய்விப்பதற்காக கல்யாண

சுந்தரஞ் செட்டியார் மிகவும் தடபுடலுடன் வேலைகள் செய்து வந்தார். வேண்டா வெறுப்புடன் துரைராஜாவும் சோமசுந்தரஞ் செட்டியாரும் வரவழைக்கப்பட்டார்கள். ரத்னம்பாளை எப்படியாவது கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்னும் எண்ணம் கொண்ட ராஜசேகரனும் வந்திருந்தான். தன்னுடைய எண்ணத்தை சமயம் பார்த்து கல்யாணசுந்தரஞ் செட்டியாரிடம் சொல்லி அதற்கான ஏற்பாட்டை செய்து முடிக்க வேண்டும் என்பது அவன் எண்ணம். சமயம் பார்த்துக்கொண்டே யிருந்தான்.

அக்ஷராப்பியாசம் மிகவும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. ரத்னம்பாள் தன் ஆசை அத்தானைக் காணவேண்டுமென்னும் ஆவலால் தூண்டப்பட்டு மனம் தத்தளித்தாளென்றாலும், அவ்வளவு ஜனங்கள் மத்தியில் ஒரு வயது வந்த பெண் எவ்வாறு தன்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்ய முடியும்? துரைராஜ் ஏதோ மனவருத்தம் கொண்டவனாய் துக்கத்தோடு ஒரு தனிமையான இடத்தில் உட்கார்ந்துகொண்டு தன் வாழ்வினையைப்பற்றி எண்ணமிட்டுக் கொண்டிருக்க, அவன் முன்னால் ஒரு வஸ்து வந்து விழுந்தது. அதை ஆவலோடு எடுத்துப்பார்த்தான். அதில் 'அத்தான்! இரவு 10-மணிக்கு நம் தோட்டத்தில் என்னை சந்திக்கவும், ரத்னம்பாள்' என்று வரையப்பட்டிருந்த கடிதத்தைக் கண்டவுடன், அவன் மனம் தன் காதலியின் திறமையைப்பற்றி மகிழ்ந்ததென்றாலும் அடுத்தக்ஷணம் துக்கமாக மாறிவிட்டது.

* * *

இரவு மணி பத்து. விருந்துக்கு வந்த ஜனங்களெல்லாம் சந்திரவிலாஸிலேயே தங்கிவிட்டனர். அவர்களெல்லோரும் படுக்கைகளுக்குச் சென்று விட்டனர். சந்திரவிலாஸின் பின்புறத் தோட்டத்தில் இருளைத் துணையாகக்கொண்டு இரு உருவங்கள் நின்றன. அவர்களே காதல் துரை—ரத்னம்.

துரை மிக்க விசனமான குரலில் 'ரத்னா! நீ ஏன் என்னை இவ்விருட்டில் வரவழைத்தாய்? நான் வரக்கூடாதென்று எவ்வளவோ பிரயாசைப்பட்டேன். ஆனால் கடைசித் தடவையாக சந்தித்து விடை பெற்றுக்கொண்டு போகலாம் என்று எண்ணி வந்தேன். ரத்னா! இனி என்னை நினைக்காதே! இதுவே கடைசி தடவையாக இருக்கட்டும்' என்றான்.

ரத்:—(படபடப்புடன்) என்ன அத்தான்! இவ்வாறு சொல்கிறீர்கள்? என் மனம் வருந்துகிறது. தாங்கள் கவலைகொண்டு இந்த நாராசம் போன்ற வார்த்தைகளைச் சொல்லவேண்டிய காரணம் என்ன?

துரை:—(மிகவும் துக்ககரமான குரலில்) ரத்னா! நாம் இதுவரை காதல்கொண்டு சந்தோஷமாக இருந்தோம். ஆனால் என்னுடைய

குடும்ப நிலைமை மிகவும் கேவலமாயிருக்கிறது. சாப்பாட்டிற்கு வழியில்லாமல் திண்டாடுகிறோம். இந்த நிலைமையைச் சமாளிக்க நான் ரங்கூன் செல்கிறேன். மேலும் சில நாட்களுக்கு முன் உன் தகப்பனார் பிச்சைக்காரனாகிய எனக்கு, உன்னைக் கொடுப்பதில்லை என்று என் தந்தையிடம் கூறிவிட்டாராம். நீயும் என்னைக் கைவிட்ட பிறகு எனக்கிங்கென்ன வேலை—என்றான்.

ரத்:—(உறுதி கலந்த துக்கமான குரலில்) அத்தான்! அவ்வாறு நினைக்கவேண்டாம். நான் தங்களையன்றி வேறு ஒருவரையும் மணம் புரியமாட்டேன். இது நிச்சயம். என் தகப்பனார் எப்படி வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளட்டும்' என்றாள்.

துரை:—ரத்னம்! நாம் இதுவரையில் காதலர்களாக இருந்தோம். இனிமேல் உன் சகோதரனாக என்னைப் பாவித்துக்கொள். நாளை நான் ரங்கூன் போகிறேன். பிறகு உன்னைப் பார்க்கவும் முடியாது. எனக்குக் கடிதம் எழுத இஷ்டம் உண்டானால் எழுதலாம். இல்லாவிட்டால் வேண்டாம். எங்கே, கடைசியாக உன்னன்பார்ந்த கைக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டுப் போகிறேன்' என்று சொல்லி அவள் கையைப் பிடித்துக் கொண்டிருக்கும் சமயம், அவன் தலையில் சடார் என்று ஓர் அடி விழவும், அடுத்த க்ஷணம் டார்ச்லைட்டுடனும் ராஜசேகரனுடனும் கல்யாணசுந்தரஞ் செட்டியார் பிரசன்னமாகி, 'அடே! பிச்சைக்கார நாயே! உனக்கு இவ்வளவு கொழுப்பா? இவ்வளவு பேர்கள் கூடியிருக்கும்போது உனக்கு எவ்வளவு துணிவடா என் மகளைக் கூட்டிக்கொண்டுவர' என்று வாயில் வந்தவாறு திட்டி, 'இனி எங்கள்முன் நின்றால் உனக்குத்தக்க மரியாதை புரிவேன். ஓடிப்போ நாயே' என்று கூறி ரத்னாவை நோக்க, அவள் தடாலென்று பூமியில் விழுந்து மூர்ச்சையானாள். அவளை தூக்கிக்கொண்டு சென்றனர். துரைராஜ் தட்டுத்தடுமாறி இரத்தம் வழிய நடந்துசென்று ஆஸ்பத்



திரியில் தக்க மருந்து கட்டிக்கொண்டு மறுநாளே ரங்கூன் புறப்பட்டு விட்டான்.

* * *

ரத்னம்பாள், தனக்கும் தன் காதலன் துரைராஜாவுக்கும் நேர்ந்த கதியை நினைத்து நினைத்து அழுதுகொண்டிருக்க நாட்கள் கடந்து சென்றன. துரைராஜாவும் நடந்த சம்பவங்களை நினைத்து வருந்தினான்.

நிற்க, ஒருநாள் திடீரென்று பத்மநாபன் காணாமல்போய் விட்டான். எங்கெங்கு தேடியும் கிடைக்கவில்லை. போலீசில் எழுதி வைத்தார்கள். ராஜசேகரன் கல்யாணசுந்தரஞ் செட்டியாருக்கு மிகவும் வேண்டியவன் ஆய்விட்டபடியால் அவன் மிகவும் பிரயாசைப்பட்டு பத்மநாபனைத் தேடிக் கிடைக்காமல் அவரிடம்வந்து 'பத்மநாபனைத் தேடிப்பிடிக்காமல் இங்கே வருவதில்லை' என்று கூறிச் சென்றவன் நாட்கள் பல சென்றும் திரும்பவேயில்லை. கல்யாணசுந்தரஞ் செட்டியார், மகன் காணாமல்போன துக்கத்தினால் வியாதியாய் விழுந்தார். அவருக்கு மாந்திரீகத்தில் நம்பிக்கை உண்டாததால் இரண்டு மந்திரவாதிகள் அழைக்கப்பட்டு அவர் பக்கத்திலேயே இருந்தனர். அவர்கள் சுவாமியை வணங்கிக் கேட்க 'துரைராஜ் என்னும் உங்கள் சொந்தக்காரன் ரத்னப்பாளை அவனுக்குக் கொடுக்க மறுத்ததை முன்னிட்டு உங்களுக்குக் கெடுதல் செய்யும் பொருட்டு பத்மநாபனை ஆள் வைத்துத் தூக்கிச் சென்றிருக்கிறான்' என்றனர்.

ரத்னப்பாள் இவற்றையெல்லாம் நம்பாமல் தன் அத்தானுக்கு அடிக்கடி கடிதங்கள் எழுதி மந்திரவாதிகளின் தந்திரங்களையும் தன் தகப்பனார் கோபத்தையும் எழுதித் தன்னுடைய அனுமதியில்லாமல் இந்தியாவிற்கு வரக்கூடாதென்றும், அவசியமானால் தான் தந்தி கொடுப்பதாகவும் எழுதினாள்.

மந்திரவாதிகளின் வார்த்தைகளைக் கேட்ட கல்யாணசுந்தரஞ் செட்டியார் கோபம் அடைந்து துரைராஜ் இருந்த கம்பெனிக்கு ஒரு தந்தி அடித்து உடனே வரும்படி உத்தரவிட்டார். மறுதந்தி துரைராஜ் அங்கே இல்லையென்றும், வேலையைவிட்டு ஓடிவிட்டான் என்றும் பதில் வந்தது. இதைக் கேட்டவுடன் கல்யாணசுந்தரஞ் செட்டியாரின் நோய் வரவர அதிகரித்தது. மந்திரவாதிகள் 'ரத்னம்பாளை சீக்கிரம் யாருக்காவது கல்யாணம் செய்து கொடுத்துவிட்டால் அவர் நோய் நீங்கும்' என்றனர். கல்யாணசுந்தரஞ் செட்டியாரும் இசைந்தார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் ரத்னா அடைந்த துக்கத்திற்கோரளவில்லை. தன்னுடைய எண்ணமெல்லாம் பாழாகி விட்டதை நினைத்து அழுதாள். உடனே தன் அத்தானுக்கு ஒரு

தந்தி அடித்து உடனே வரும்படியும், வந்து தன்னைக் கைப்பற்று விட்டால் தன்னை அன்னியன் ஒருவனுக்கு அடியாளாகப் போவதையும் தெரிவித்தாள். மறுதந்தியில் 'ரத்னு! என்னை நினைக்காதே; உன் தகப்பனார் இஷ்டம்போல் நடந்துகொள்—துரைராஜ்' என்று பதில் வந்தது.

தன் மகளின் கல்யாணத்தை சீக்கிரம் முடிக்கும் பொருட்டு தன் அத்தியந்த நண்பர் கருணாகரரிடம் ஒரு வரன் தேடும்படிச் சொன்னார். அவரும் இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு வந்து ஒரு வரன் தேடியிருப்பதாகவும், அவசியம் கல்யாணத்தை முடித்து விட வேண்டியதுதான் என்றும், கல்யாணம் ரகஸ்யமாய் நடத்தப் பட வேண்டுமென்றும் சொல்ல, மறுநாளே ஒரு தாடி வளர்த்த ஆசாமி ரத்னுவுக்கு கணவனாய் ஏற்பட்டான்.

* * *

மறுநாள் தாடி வளர்த்த ஆசாமி ராஜசேகரனே யென்று நிச்சயம் செய்த ரத்னும்பாள் தன் விதியை நினைத்து தன் அத்தான் போட்டோவை வைத்து அழுது கொண்டிருக்க, அச்சமயம், அவள் கணவன் திடீரென்று வந்து அந்தபோட்டோவைப் பிடிங்கிக்கொண்டு 'இது யார்?' என்றவுடன் ரத்னு விழித்தாள். உடனே கணவன் 'உன் அத்தான் துரைராஜ் அல்லவா?' என்றவுடன் 'ஆம்' என்றாள். ரத்னு நடுநடுங்கி பயப்படுவதைக் கண்டவுடன் தாடிமியா சாகிப் தன் பொய்த்தாடியை கழற்றிவிட்டு நிற்க, அசல் துரைராஜாவாக மாறவே ரத்னம்பாள் தான் காண்பது கனவோ நினவோ என்று சந்தேகித்து தன் கண்களை நன்றாகத் துடைத்தாள். உடனே துரைராஜ் அவளை அணைத்து முத்தமிட்டுவிட்டு நடந்த விஷயங்களை சாவகாசமாகக் கூறலானான்.



துரைராஜ்:—'நான் பர்மா சென்றபின் கடிதங்கள்மேல் கடிதங்கள் வந்ததாலும் என் நண்பர் கருணாகரர் மூலமும் உன் கடிதங்கள் மூலமும் மந்திரிவாதிகள் விஷயம் எல்லாம் எனக்குத் தெரியும். உன் கல்யாணத் தந்திக்கு நான் பதில் எழுதிவிட்டு வருலுக்காக இந்தியாவிற்குவந்தேன். என் நண்பன் கருணாகரனைமட்டும் பார்த்துவிட்டுப் போய்விடலாம் என்று வந்ததில் அவன் உன் தகப்பனார் அவனையே ஒருவரன் தேடும்படி சொன்னதாகவும், ராஜசேகரனின் துர் எண்ணத்தையும் வெளியிட்டான். பிறகு நான் இந்தமாதிரி வேஷம்போட்டு நடிப்பதாகச் சொல்லவே அவனும் ஒத்துக்கொண்டான். ராஜசேகரனுக்கு திடீரென்று நோய் உண்டாகவே அவன் எண்ணம் பலியாமல் போய்விட்டது. பத்மநாபன் காணாமல் போன விஷயமாய் ராஜசேகரனையே சந்தேகித்து மாறுவேஷத்துடன் அவன் வீட்டில் சென்று பார்த்தேன். அங்கு பத்மநாபன் ஒரு அறையில்போட்டு பூட்டப்பட்டிருந்தான். மந்திரவாதிகளும் அவன் கையாட்களே. என்மேல் உன் தகப்பனாருக்கும் உனக்கும் விரோதம் உண்டாக்கி உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளவே இவ்வளவு ஏற்பாடுகள் செய்தான். திடீரென்று வியாதியாய் விழவே, அவன் எண்ணம் கைகூடாமல் போயிற்று. இதோ பத்மநாபனை அழைத்துக்கொண்டு வருகிறேன்' என்று கூறிவிட்டு வெளியே சென்று பத்மநாபனை அழைத்துக்கொண்டு வந்தான். துரைராஜாவின் வளர்ப்புப் பெற்றோர்க்கும் ரத்னாவின் பெற்றோர்க்கும் ரத்னாவுக்கும் எப்படி இருக்குமென்பதை நீங்களே யோசித்துக்கொள்ளுங்கள்.



# இந்தியா கிராமத்தில் சாக்ரடீஸ்



மொழி பெயர்ப்பாளர்

சென்னை

கே. எஸ். நாதன்.

## 5. ஜலம், விறகு, எரு.

சாக்ரடீஸ் அடுத்தபடியாக ஒரு கிராமத்திற்குச் சென்றார். ஆங்கு அநேகம் பெண்கள் உட்கார்ந்துக் கொண்டு எரு தட்டிக்கொண்டிருந்தனர். கிராமம் முழுவதும் அழுக்குமயமாகவும் அசுசியாகவும் இருந்தது. தவிரவும் ஆண்கள் உட்கார்ந்து சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்தனர். மொத்தத்தில் வறுமை அக்கிராமத்தில் தாண்டவமாடிற்று.

சாக்ரடீஸ்:—வந்தனம்! நண்பர்களே சௌக்கியந்தானா?

கி-வாசி:—அறிஞரே! எங்களுடைய க்ஷேமத்தைக் குறித்து விசாரிக்கவும் வேண்டுமா? எங்களுடைய நிலமெல்லாம் புஞ்சையாகிவிட்டது. எங்களிடத்திலிருந்த சிறிது தானியத்தை பன்றிகளும், எலிகளும் சாப்பிட்டுவிட்டன. சென்ற பருவகாலத்திலிருந்து மழை இல்லாததால் நிலமெல்லாம் தீயும் பருவத்தை அடைந்து வருகின்றது. சென்ற மாதத்தில் எங்களைத் துன்புறுத்திய 'மலேரியா' விஷஜுரம் இன்னும் பூராவும் விட்டபாடில்லை. எங்களுடைய ஆடுமாடுகளுக்கு உட்கொள்ள உணவில்லை. நாங்களும் உணவுப் பொருள்களுக்கு மிகவும் கஷ்டப்படுகிறோம். இக் கொடூர நிலைமையில் எங்களுடைய க்ஷேமத்தைக் குறித்து என்ன கூறுவது?

அப்பொழுது திடீரென ஒரு புயற்காற்றடித்து, ஏராளமான தூசி கிளம்பி சாக்ரடீஸ் முகத்திலும், மற்றவர்கள் முகத்திலும் அடித்தது. கிராமவாசிகள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் சாக்ரடீஸை அது மிகவும் துன்புறுத்திற்று. அவருக்கு இருமலும், ஜலுப்பும் ஏற்பட்டுவிட்டது.

---

[அறிஞர் F. L. ப்ரெயினின் 'சாகரடீஸ் இன் அன் இண்டியன் வில்லேஜ்' என்ற ஆங்கில நூலை தழுவி எழுதப்பட்டது.]

சாக்ரடீஸ்:—இது மிகவும் மோசமான காற்று.

கி-வாசி:—அது ஒன்றுமில்லை புயற்காற்று அடிக்கும்போது இப்படி தூசி கிளம்புவது வழக்கம்தான். இவைகள் எங்களுக்கு புதியவைகளல்ல.

சாக்ரடீஸ்:—சரி. ஆனல் ஏன் நீங்கள் உங்களுடைய கிராமமெல்லாம் புஞ்சையாகிவிட்டதென குறை கூறுகின்றீர்கள்? அந்த குப்பைகளை யெல்லாம் கிராமத்திற்கு கொஞ்சத் தூரத்தில் பள்ளம் தோண்டி அதில் போட்டு, அவைகள் நன்கு உரமானபின் நிலங்களுக்குப்போட்டிருந்தால் நிலம் செழிப்புற்றிருக்காதா?



............பெண்கள் உட்கார்ந்துக்கொண்டு எரு...........

கி-வாசி:—ஆ! இவைகளை யெல்லாம் செய்வதற்கு எங்களுக்கு நேரமில்லை. நாங்களெல்லோரும் மிகவும் ஏழைகள். இவைகளெல்லாம் பணக்காரர்களுக்குரிய ஆடம்பரங்களாகும்.

சாக்ரடீஸ்:—அழுக்கடைந்த கிராமம் என்ருல் வறுமைதான் உங்களுடைய கிராமத்தில் அடைந்துள்ள குப்பைகளே உங்களை செல்வந்தர்களாகச் செய்யும். நீங்களெல்லோரும் ஏன் ஏழைகள் என்பது எனக்குப் புரியவில்லை. நான் கிராமத்திற்கு வரும் வழியில்

கணக்கற்ற மரங்கள் வதங்கி, உலர்ந்து கிடப்பதைக் கண்டேன். பணக்காரர்களைத் தவிர மற்றவர்கள் இப்படி தங்களுடைய மரங்களை அஜாக்கிரதையாக விட்டுவிட மாட்டார்கள்.

கி-வாசி:—நாங்கள் அம்மரங்களை வைத்து என்ன செய்வது? அவைகளை விற்பனைசெய்ய இக்கிராமத்தில் தகுந்த இடமில்லை.

சாக்ரடீஸ்:—உங்களுடைய உணவுப் பொருள்களை பக்குவப் படுத்த அதை உபயோகிக்கலாகாதா?

கி-வாசி:—இல்லை. நாங்கள் எருவை உபயோகிக்கிறோம்.

சாக்ரடீஸ் இதைக் கேட்டதும் அடக்க முடியா சிரிப்பை அடைந்தார்.

கி-வாசி:—தாங்கள் ஏன் சிரிக்கிறீர்கள்?

சாக்ரடீஸ்:—என்னுடைய சிரிப்பை அடக்க முடியவில்லை. நீங்களெல்லோரும் விசித்திரப்பிராணிகள். நீங்கள் உங்களுடைய வறுமையைக் குறித்தும், நிலத்தைக் குறித்தும் கவலைப்படுகின்றீர்கள். ஆனால் எருவை எரியவைக்கின்றீர்கள். எரு எவ்வளவுதூரம் நெருப்பிற்கு விறகாக உதவுகின்றதோ அதைவிட பதின்மடங்கு உரமாக உதவும் என்பது உங்களுக்குத் தெரியாதா? உங்களுடைய மரங்களையெல்லாம் வெள்ளை எறும்புகள் அரிக்கின்றன.

சாக்ரடீஸ்:—அந்த எரு மொத்தத்தில் எவ்வளவு விலைபெறும்?

கி-வாசி:—சுமார் ஐந்து ரூபாய் பெறும்.

சாக்ரடீஸ்:—அவைகளை உரமாக உபயோகித்தால் எவ்வளவு விலைபெறும்?

கி-வாசி:—அவைகளை நிலத்திலிட்டால் பத்து மரக்கால் நெல்லையும், அதற்குகந்த வைக்கோலும் தரும்.

சாக்ரடீஸ்:—குறைந்தது ஐம்பது ரூபாய் அல்லவா?

கி-வாசி:—ஆமாம். அதற்கு குறைவில்லை.

சாக்ரடீஸ்:—பார்த்தீர்களா? உங்களுடைய கிராமம் ஏன் மோசமாக இருக்கிறதென்பது தற்போது நன்கு புலனாகிறது.

சாக்ரடீஸ்:—உங்களுடைய பெண்களுக்கு ஒரு கூடை எருத் தட்ட எவ்வளவு நேரம் பிடிக்கும்?

கி-வாசி:—குறைந்தது மூன்றுமாதம்.

சாக்ரடீஸ்:—மூன்றுமாதம் வரையில் அவர்கள் செய்யும்படியான அழுக்கடைந்த வேலை ஐந்து ரூபாயை கொடுக்கும் அல்லவா?

சாக்ரடீஸ்:—உங்களுடைய சொக்காயை தைப்பதற்கு தையற்காரனுக்கு எவ்வளவு கொடுக்கின்றீர்கள்?

கி-வாசி:—நான்கு அல்லது ஆறணா கூலி கொடுக்கிறோம்.

சாக்ரடீஸ்:—அதை தைப்பதற்கு எவ்வளவு நேரம் செல்லும்?

கி-வாசி:—சில மணி நேரங்கள் செல்லும்.

சாக்ரடீஸ்:—ஆனால் உங்களுடைய பெண்களுக்கு நான்கணு பெறுமான எரு தட்டுவதற்கு எவ்வளவுநேரம் செல்லும்?

கி-வாசி:—குறைந்தது ஒரு வாரம்.

சாக்ரடீஸ்:—ஆனால் உங்களுடைய பெண்கள் இந்த எரு தட்டும் வேலையை நிறுத்தி தையல்வேலை செய்வது அறிவுடைமையாகாதா?

ஒரு கி-வாசி:—என்னுடைய மனைவிக்கு தையல்வேலை தெரியாது.

கி-வாசி:—ஆமாம். அவர்களுக்கு தெரியாமலிருக்கலாம். ஏனெனின் அவர்கள் பிறந்ததிலிருந்தே மாவுமில்லுக்கும், எருவுக்கும் அடிமைப்பட்டு விட்டனர். எது கௌரவமான வேலை? எருத்தட்டுவதா? அல்லது துணிதைப்பதா?

சாக்ரடீஸ்:—இதில் என்ன ஆட்சேபனை. தையல்வேலைதான்.

சாக்ரடீஸ்:—சரி, நீங்கள் கீழ்குலத்தினரென கருதப்படுகின்ற தையற்காரர்களை தையல்வேலை செய்யச் செய்கின்றீர்கள். உயர் குலத்தினரெனக் கருதும் உங்களுடைய பெண்களை எருதட்டச் செய்கின்றீர்கள். இது எவ்வளவு மோசமான நிலைமை?

கி-வாசி:—ஆமாம், தாங்கள் கூறுவது உண்மைதான்.

சாக்ரடீஸ்:—சரி. இனியாவது நீங்கள் உங்களுடைய பெண்களை தையல் வேலைசெய்யவும், கீழ்குலத்தினரென நீங்கள் கருதுபவர்களை எருத்தட்டவும் செய்கின்றீர்களா?

கி-வாசி:—முடியவே முடியாது தையற்காரர்கள் எருத்தட்ட மாட்டார்கள்.

சாக்ரடீஸ்:—ஆமாம், வாஸ்தவம்தான். அவர்கள் அவ்வளவு முட்டாள்களல்ல. ஆனால் இந்த எருத்தட்டும் வேலை எனக்குப் பிடிக்கவில்லை. உங்களுடைய வறுமைக்கெல்லாம் காரணம் எருத்தட்டுவதென்றே நான் கருதுகின்றேன்.

கி-வாசி:—எங்களுடைய உணவுப் பொருள்களை எப்படி பக்குவப் படுத்துவது?

சாக்ரடீஸ்:—என்ன வினோதமான கேள்வி! கணக்கற்ற மரங்கள் வெயிலின் வெப்பத்தால் பட்டை உலர்ந்து நிற்கின்றனவே. அவைகளையும் இதர உபயோகமற்ற பொருள்களையும் எரியவைத்து உணவைப் பக்குவப்படுத்தலாகாதா?

கி-வாசி:—ஆனல் பெண்கள் அடுப்பங்கரையிலேயே அவைகளை கவனித்துக்கொண் டிருத்தல்வேண்டும்.

சாக்ரடீஸ்:—ஏன் நேரத்தை வீணுக்கவேண்டும்? தற்போது எருத்தட்டுவதற்கு செலவழிக்கும் நேரத்தை இவ்வழியில் செலவழிக்கலாகாதா? அவர்கள் அப்படி கவனித்துக்கொண் டிருக்கையில் உங்களுடைய குடும்பத்திற்கு வேண்டிய தையல்வேலையையும் கவனிக்கலாமல்லவா? அப்படி செய்தால் தையற்காரனுக்கு பணம் கொடுக்கவேண்டியதில்லை அல்லவா?

சாக்ரடீஸ்:—நான் ஒரு பொருட்காட்சிக்குப் போயிருந்தேன். ஆங்கு ஒருவன் சொற்பவிறகின் உதவியைக்கொண்டு பரிசுத்தமான நெய்யை காய்ச்சினன். சரி, அதிருக்கட்டும்; நீங்கள் கொஞ்ச நேரத்திற்குமுன் ஆடு, மாடுகளுக்கு தழை இல்லை என்று சொன்னீர்களல்லவா?

கி-வாசி:—ஆமாம். எங்களுடைய ஆடுமாடுகளுக்கு போதுமான தழையில்லை.

சாக்ரடீஸ்:—அதற்கு காரணம் யாது? நீங்கள் உங்களுடைய குப்பைகளையும் பசுஞ் சாணத்தையும், இன்னும் இதர உதவாப் பொருள்களையும் சரியானவழியில் உரமாக்குவதில்லை. எருவின்றேல் நிலம் எப்படிச் செழிப்புறும்?

கி-வாசி:—நாங்கள் உரம்போட்ட போதிலும் போதுமான மழைபெய்வதில்லை.

சாக்ரடீஸ்:—சரி, நான் வந்துகொண் டிருக்கும்போது வழியில் பார்த்த ஏறியின்கதி என்ன?

கி-வாசி:—அந்த ஏறியினல் எங்களுக்குப் பிரயோசனமில்லை. அதன் கரை உடைந்துவிட்டால் நிலத்தையெல்லாம் அடித்துக் கொண்டு போய்விடும்.

சாக்ரடீஸ்:—ஏன், அந்த ஏறியின் ஜலத்தை நிலத்திற்கு உபயோகிக்கலாகாது.

சாக்ரடீஸ்:—ஏன் சிறு கால்வாய்கள் வெட்டி தண்ணீரை நிலத்திற்கு பாய்ச்சலாகாது?

கி-வாசி:—ஆ! நாங்கள் அப்படி செய்துபார்த்ததில்லை. அப்படி ஒரு பழக்கமுமில்லை. தவிரவும் எங்களிடத்தில் போதுமான பணமுமில்லை.

சாக்ரடீஸ்:—சரி, உங்களுடைய கிராமக் குட்டைகளின் கதி என்ன?

கி-வாசி:—அது பிரயோஜனமில்லை. மே மாதத்தில் தண்ணீர் வறண்டுவிடும்.

சாக்ரடீஸ்:—சரி, எப்படியானாலும் அது பயிரைக் காக்கும். நிற்க, உங்களுடைய நிலத்திற்கேற்றபடி 'கரும்புச் செடியை' நீங்கள் பயிரிடுவீர்களே யானால் இத்தொல்லை கொஞ்சமுமில்லை. ஒரு சிறு கிணற்றைத்தோண்டி அதினின்றும் தண்ணீரை பாய்ச்சினால் போதுமானது. பிறகு மழை தானாகவே காப்பாற்றிக்கொள்ளும்.

கி-வாசி:—சரி, ஆனாலும் எங்களுடைய தானியங்களையெல்லாம் பன்றிகளும் காட்டு எலிகளும் சாப்பிடுகின்றன.

சாக்ரடீஸ்:—அவைகள் எங்கிருந்து வருகின்றன?

கி-வாசி:—அடுத்தாற்போலுள்ள சிறு காடுகளினின்று வருகின்றன.

சாக்ரடீஸ்:—அவைகள் அங்கு எப்படி வசிக்கின்றன?

கி-வாசி:—சிறுகாட்டிலுள்ள புல், பூண்டுகளுக்கிடையில் வசிக்கின்றன.

சாக்ரடீஸ்:—சரி, உங்களுக்கு எலிகளும். பன்றிகளும் வேண்டுவதில்லையென்றால் என் இந்தப்புல், பூண்டுகளை முளைக்கச்செய்கிறீர்கள்?

கி-வாசி:—(சிரித்தபடி) நாங்கள் அவைகளை முளைக்கச்செய்வதில்லை. அவைகள் தானாகவே முளைக்கின்றன.

சாக்ரடீஸ்:—நீங்கள் அந்நிலத்தின் சொந்தக்காரர்களல்லவா?

கி-வாசி:—ஆமாம். வாஸ்தவம்தான்; நாங்கள் சொந்தக்காரர்கள்.

சாக்ரடீஸ்:—சரி, ஆனால் உங்களுக்கு இப்புல், பூண்டுகள் தேவையில்லையென்றால் என் அவைகள் அங்கே முளைத்து செழிக்கச் செய்கின்றீர்கள்?

கி-வாசி:— அவைகள் தானாகவே வளருகின்றன.

சாக்ரடீஸ்:—என்ன விநோதம்! நீங்கள் நிலச்சுவான்தார்களெனக் கூறினீர்கள். சரி, இந்தப் புல் பூண்டுகளை நீங்கள் உங்களுடைய வீடுகளில் முளைக்கச் செய்கின்றீர்களா?

கி-வாசி:—இல்லை, ஒருக்காலுமில்லை.

சாக்ரடீஸ்:—சரி, அப்படி ஒரு புல்—பூண்டு உங்களுடைய வீட்டில் முளைத்தால் என்ன செய்கின்றீர்கள்?

கி-வாசி:—உடனே வெட்டிப போடுகிறோம்.

சாக்ரடீஸ்:— என் அந்நிலங்களிலும் அவ்வாறு வெட்டிப் போடலாகாது. பிறகு பன்றிகள் வசிக்க இயலாதல்லவா?

சாக்ரடீஸ்:—என் அந்த நிலத்தை நீங்கள் வைத்திருக்கின்றீர்கள்?

கி-வாசி:—அந்த நிலத்தை எங்களுடைய பெரியோர்கள் ஆடு, மாடுகள் புல் மேய்வதற் கென்று ஒதுக்கி வைத்துவிட்டனர்.

சாக்ரடீஸ்:—சரி, ஆடுமாடுகள் அந்தக்கொடிய முள் முளைத்த புல்களை தின்கின்றனவா?

கி-வாசி:—இல்லை, அவைகளை சாப்பிடுவதில்லை.

சாக்ரடீஸ்:—ஆனால் அந்நிலம் முழுவதும் இக்கொடிய புல்மயமாக இருக்கின்றதே.

கி-வாசி:—ஆமாம்.

சாக்ரடீஸ்:—ஆனால் உங்களுடைய பெரியோர்கள் எந்த நல்லெண்ணத்துடன் அந்நிலத்தை ஒதுக்கி வைத்தார்களோ, அது முற்றிலும் முரணாகவே முடிந்துவிட்டது. தற்போது பன்றிகளும், எலிகளும் அதினால் நலமடைகின்றன.

சாக்ரடீஸ்:—ஓ! கிராமவாசிகளே! நீங்கள் மிகவும் முட்டாள்கள். அந்நிலத்திலுள்ள புல்—பூண்டுகளை வெட்டி சுத்தப்படுத்தி நல்ல பயிரை விதைப்பதற்குப் பதிலாக உங்களுடைய பெரியோர்களால் ஒதுக்கப்பட்ட அந்நிலத்தை குட்டிச் சுவராக்குகின்றீர்கள். ஆகையினால்தான் உங்களுடைய ஆடு, மாடுகளுக்குப் போதுமான தழையில்லை. அவைகளை பன்றிகளும், எலிகளும் தங்களது 'சாணலய'மாகக் கொண்டுவிட்டன. இதன்பயனாக அவைகள் உங்களுடைய தானியம் முழுவதையும் உட்கொள்ளுகின்றன. நீங்கள் அடுப்பெரிய வைப்பதற்கு மரங்களை உபயோகிப்பதில்லை. ஒரு சில மரங்கள் தானாக முளைப்பதை வெண் எறும்புகள் சாப்பிட்டுவிடுகின்றன. ஆகையினால் நீங்கள் எருவை எரியவைக்கின்றீர்கள். எருவை எரிந்துவிட்டால் நிலத்திற்குப் போதுமான உரமில்லை என்று அர்த்தம். உங்களுடைய கிராமம் முழுவதும் நிறைந்துள்ள அழுக்கும், குப்பையும் உங்களுடையவும்—குழந்தைகளுடையவும் ஆரோக்யத்தை கெடுக்கின்றது. அவைகளை பெரிய பள்ளந்தோண்டிப் புதைத்து உரமாக்கி நிலத்திற்கு உரமாகப் போடவேண்டும். அக்குட்டைகளிலுள்ள ஜலத்தை நீங்கள் நிலத்திற்கு பாய்ச்ச உபயோகிக்கவேண்டும். உங்களுக்கு ஜலம், எரு, விறகு இம்மூன்றும் அமைந்திருந்தும், அதை வீணாக்குகின்றீர்கள். இம்மூன்றையும் ஒரு ஜமீன்தார் நல்வழியில் உபயோகப்படுத்தவேண்டும். இவைகளை நீங்கள் பயன்படுத்தாமல், நாங்கள் ஏழைகளெனக் கூறுவதில் எவ்வித அர்தமுமில்லை.

(உடல் நலிவினால் 'சாக்ரடீசை' சென்ற நான்கு இதழ்களில் தொடர்ந்து எழுத இயலவில்லை. ஆயினும் இவ்விதழிலிருந்து தொடர்ந்து எழுதப்படும். அடுத்த இதழில் 'கிராமப் புனருத்தாரணம்' அல்லது 'தன் கையே தனக்கு உதவி' என்னும் தர்க்கம் வெளிவரும். —கே. எஸ். நா.)

---




வேலைக்காரன்:—தங்களை எப்பொழுது எழுப்பவேண்டும்?

எஜமான்:—நானே சரியானவேளைக்கு எழுந்திருந்து விடுவேன். ஒரு வேளை தூங்கிவிட்டால் ஐந்து நிமிஷத்துக்கு முன்னால்வந்து எழுப்பு.

—தி. ஜெயராம்

வீரப்பன் ஒரு குளத்தில் கழுத்தளவு தண்ணீருக்குள் நின்று கொண்டு கூக்குரலிட்டுக் கொண்டிருந்தான். அவ்வழிச் சென்ற அவன் நண்பன் சங்கரன், வீரப்பன் நீந்தத் தெரியாது தத்தளிக்கிறானென வெண்ணி, விரைந்து சென்று வீரப்பனைக் கரைக்கு கொண்டு வந்து சேர்த்தான். அப்பொழுது வீரப்பன், 'என்னடா இது! பயித்தியமா! எங்கள் உபாத்தியாயர் இனிய குரல் பெறவேண்டுமானால் தண்ணீருக்குள் நின்று கத்தச் சொன்னார். அதுபோல நான் செய்து கொண்டிருக்கிறேன்' என்று சொன்னதைக்கேட்ட சங்கரன் வந்த வழி நடந்தான்.



—கோழும்பு எஸ். முத்துராமன்

ஒருவர்:—(மற்றொருவரைப் பார்த்து) ஏனையா! உன் பெண் சாதி, எல்லா ஆம்பிளைகளிடத்திலும் கூசாமல் பேசிக்கொண்டேயிருக்கிறாளே! இது உனக்கு கேவலமில்லையா? என்றுகேட்டார்.

மற்றொருவர்:-(சிரித்துக்கொண்டே) அட முட்டாளே! அவளுக்கில்லாத கேவலம் எனக்கென்ன? என்றார். —எஸ். சுப்பிரமணியன்

புரோகிதன்:—ஐயா! தங்களுடைய தகப்பனர் 'மோக்ஷ' இன்பத்தை அனுபவிக்கவேண்டுமானல் பிராமணர்களை வரவழைத்து அன்னதானம், கோதானம், பொன்தானம் செய்யவேண்டும்.

பையன்:—சரி, புரோகிதரே! தாங்கள் இறந்துவிட்டால் யாரை வரவழைத்து இந்த தானங்கள் பண்ணுவது?

—சென்னை கே. எஸ். நாதன்

கணவனுக்கும், மனைவிக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட அவனுடைய மாமி தன் மருமகனைப் பார்த்து, 'தம்பி! உன்னிடத்தில் சிறிதேனும் பாசமென்பதே இடையாது' என்ருள்.

மருமகன்:—அடடா! மாமீ, முன்னமே என்னிடம் சொல்லக் கூடாதா! நேற்றுத்தானே கிணற்றிலிருந்த பாசியை சிறிதும் விடாமல் எடுத்துவிட்டேன். —பூ. கோ. வாசுதேவபிள்ளை



டாக்டர்:—உனது கணவனுக்கு இப்பொழுது உடம்பு குணமடைந்து வருகிறது. ஆனல் அவர் மனம் நோகாமலும் அதைரியப்படாமலும் இருக்கும்படி ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ளவேண்டும்.

மனைவி:— அப்படியானல் தயவு செய்து உங்களுடைய பில்லை இப்பொழுதே அனுப்பி விடாதீர்கள். —எஸ். வி. அய்யன்

குடியானவன் வேலைக்காரனைப் பார்த்து மாட்டை ஓட்டிக் கொண்டுபோய் தண்ணீர் காட்டி ஓட்டிவா என்ருன்.

வேலைக்காரன் மாட்டை ஓட்டிப்போய் குளத்திற்கு ஒரு பர்லாங்கு தூரத்திலிருந்து 'அதோ தண்ணீர்' என்று காட்டி ஓட்டி வந்தான்.

குடியானவன்:—மாடு தண்ணீர் குடித்துவிட்டதா?

வேலைக்காரன்:—தாங்கள் காட்டத்தானே சொன்னீர்கள். காட்டினேன். அது பார்த்துவிட்டது. குடிக்கவில்லையே?

—ஏ. கே. மனவாளன்

# மதம் மாற்றம் நன்மை தருமா?

[டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்]

நண்பர் அம்பேத்கார் அவர்களுக்கு, வந்தனம். தாங்கள் மதம்மாறும் விஷயத்தில் கொண்டுள்ள உறுதி போற்றக் கூடியதே. மதம் மாறினால் தாழ்த்தப்பட்டவர்களின் குறை நீங்கி விடுமா? கல்வி வளருமா? பொருள் நிலை உயருமா? நாகரிகம் ஓங்குமா? தாழ்த்தப்பட்ட மக்களின் பரிதாப நிலையன்றோ, தங்களைப்போலொத்த அறிவாளிகளை பலர் அறியச் செய்திருக்கின்றது. அதற்குக் காரணம் தாழ்த்தப்பட்ட வகுப்பில் படித்தவர்களே இல்லாமையல்லவா? தாங்கள் வட்டமேஜை மகாநாடுகளுக்குச் சென்றதும், தங்களை எல்லா மதத்தினர்களும் எல்லா மக்களும் அறியச் செய்ததும் ஏழு கோடி மக்கள் தாழ்த்தப்பட்ட நிலையிலிருப்பதே யல்லவா? தங்களைப் போலொத்த அறிவாளிகளின் முயற்சியால் ஏழு கோடி மக்களும் முன்னேற்றமடைய வேண்டியிருப்பதால் தாங்கள் எந்தக் காரியத்தையும் நன்றாய் ஆலோசித்து முடிவு கட்டவேண்டியதாகும். தாங்கள் வேறு மதம் மாறிவிட்டால் இப்போது இருக்கும் செல்வாக்கு நீங்கிவிடும். ஏனெனில் தாங்கள் எந்த மதத்தில் சேர்ந்தாலும் அம்மதத்தில் அறிவாளிகள் மலிந்திருப்பார்களாதலால் உங்களை சமத்துவமாய் நடத்துவார்கள் என்ற எண்ணத்தை அறவே விட்டுவிடல் வேண்டும்.

அபிசீனியா—இதாலி சண்டைக்குக் கூறப்பட்ட காரணம் தாங்கள் அறியாததல்ல. இரு நாட்டவர்களும் கிருஸ்துமதத்தைச் சேர்ந்தவர்களே யாயினும், இதாலியர் தனது சகோதர கிருஸ்து மதத்தினரை நிறபேதத்தால் வெறுத்து டம் டம் குண்டுகளால் சுடுவதை பார்க்கிறீர்கள். இந்துக்கள் செய்துவரும் இன்னல்கள் காரணமாய் இன்னும் ஆயிரம் ஆண்டுகளானாலும் அடிமை வாழ்க்கையினின்றும் வெளிப்பட முடியாது. உலகில் எல்லா மதங்களும் எல்லா மதக்கொள்கைகளும் அறிவிற் குறைந்த பெருமக்களை அடிமையாக்கி ஒரு சில அறிவாளிகள் சுகமாக உயிர்வாழவே ஏற்படுத்தியிருக்கின்றன. எனவே மக்களை அடிமைப் படுத்தும் எம்மதத்திலும் நீங்களும் உங்களை நம்பிய சகோதரர்களும் சேருவது பொருத்தமற்றதாகும். உலகில் பிறமதஸ்தர்களின் தொகைக்கு சமமாய்க்

காணப்படும் பெருமக்களாகிய உங்களை சேர்த்து தம்தம் மதத்திற்கு செல்வாக்கை (ஜாதிப்பெருக்கை) உண்டுபண்ண உங்களை உபயோகப் படுத்திக்கொள்ள பல மதஸ்தர்கள் காத்துக்கொண்டிருக் கின்றனர். ஆதலால் நீங்கள் இனி இந்துமதத்திலும் இருக்க வேண்டாம், பிறமதத்திலும் சேரவேண்டாம். உங்களைத் தனிமத மாகப் பிரிக்கும்படி அரசாங்கத்தோடு போராடி தனிப்பட்ட மத மாக இருந்துகொண்டு எல்லா உரிமையும் வேண்டும் என மன்று டுங்கள். எழுகோடி மக்களையும் கல்வியிலும் பொருள் நிலையிலும் முன்னேறச் செய்வதெப்படி என்பதில் அறிவைச் செலுத்துங்கள். உங்களைப்போ லொத்த அறிவாளிகள் எப்போதும் தலைவாகவே இருந்து ஏழை மக்களுக்காக உழைக்கவேண்டும் என்பதை பன் முறையும் வற்புறுத்துகிறேன். எனவே தாங்கள் எம்மதத்திலும் சேரவேண்டாம். இந்துமதத்திலும் சேராமல் தனிமதமாய் சுதந்தர மக்களாய் வாழ உறுதிசெய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சுய மரியாதையுடன் சட்டம் அமைத்து தனித்து வாழ முன்வர வேண்டும்.

## ஏன் தனித்து வாழவேண்டும்?

உங்களைக் கொடுமைக்குள்ளாக்கி வைத்திருக்கும் இந்துமதம் 17 கோடி என்று கூறிக்கொள்வது, தாழ்த்தப்பட்ட 7 கோடி மக்களைச் சேர்த்து என்பதை அறிய வேண்டும். தாழ்த்தப்பட்ட 7 கோடி மக்களைச் சேர்த்துக்கொள்ள முயற்சிக்கும் எம்மதமும் உங்கள் சேர்க்கையால் பெருந்தொகையினராய் விடுவர். அதன் மதக் குருக்களும் பணக்காரராயும் பலம் பொருந்தியவராயும் ஆய்விடுவர். தங்கள் சமூகம் எவ்விதத்திலும் விருத்தி யடையாது. சம போஜனத் தால் ஒரு பயனும் உண்டாகாது. அதை சமத்துவம் என்று எந்த அறிவாளியும் நினைக்க மாட்டான். நீங்கள் எக்காலத்தில் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேற்ற மடைகின்றீர்களோ அக் காலத்தில் உங்கள் காலடியில் எல்லா மதத்தினர்களும் வந்து சேருவர்.

எல்லா மதத்தையும் ஒழிக்க வேண்டும். மக்கள் மதமின்றி சுயமரியாதையோடு வாழவேண்டும், மதக்கொடுமை ஒழியவேண்டும் எனக் கூறிவரும் சுயமரியாதை இயக்கத் தலைவர் பத்து லக்ஷம் போவது இஸ்லாம் மதத்தைத் தழுவுங்கள் எனக் கூறியதின் அறியாமையை உணருங்கள். மதம் கொடுமை என்றும், மதக் குருக் கள் என்பது சாமியின் பேரால் மக்களை அடிமைப்படுத்தி வாழ்வது கொடுமை என்றும்; ஆதலால் எல்லா மதமும் ஒழியவேண்டும் என்றும் கூறிக்கொண்டு வருபவர் உங்களை முல்லாக்கள் வலையில் சிக்க வைப்பது யாது காரணம் பற்றியோ?

இது,—ஒருவன் அதிக கவலையால் மனம்நொந்து குளத் திலாவது விழுந்து உயிர் விடுவது நலம் என்று சொல்லும்

போது, அவனுக்கு உண்டான துன்பத்தை விசாரித்து அதைத் தீர்க்க வழிதேடுவதை விட்டுவிட்டு இத்தக் குளம் நல்லது, இதில் விழுந்தால் நன்றாய் இருக்கும் மற்றக் குளங்கள் பாசிபடிந்தது என்று சொல்லுவது போலொத்த கதையே யாகும்.

எனவே ஏழுகோடி மக்கள் தனியாய் சுயமரியாதை இயக் கத்தைக் கைகொள்ளின் உங்களோடு ஏழை முகம்மதியர்களும் ஏழை கிருஸ்தவர்களும் சுயமரியாதை உணர்ச்சியுள்ள இந்துக்களும் சேர ஆசைப்படுவர். ஆதலால் பெருந் தொகையையுடைய சமூக மாகிய நீங்கள் எந்த மைனாரிட்டியான மதத்திலும் சேரவேண்டிய அவசியம் கிடையாது.

தாழ்ந்த வகுப்பார்கள் பி. ஏ. பட்டம் பெற்றால் அதை ஐ. சி. எஸ் பட்டம்போல் மதித்து, அவர்கள் ஜில்லா கலெக்டர் உத்தியோகத்திற்கு லாயக்கானவர்கள் என்ற உத்திரவை அரசாங்கம் பிறப்பிக்குமானால் எல்லா உயர்ஜாதியினரும் ஆதிதிராவிடராய் மாறி விடுவர் என்பது நிச்சயம். உதாரணமாக இதுசமயம் தாழ்ந்த வகுப்பார்களுக்கு ஏற்பட்டுள்ள சில அனுகூலங்களைப் பெற கிருஸ் தவனாக கன்வர்ட்டான ஆதிதிராவிடன் ஆதலால் எனக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கவேண்டும் எனவும்; உயர்ஜாதி வேளாளர், நான் அகம்படையான் என்ற பிற்போக்கான ஜாதி, என் மகனுக்கு பள் ளிக்கூட சம்பளத்தை நீக்கவேண்டும் என்று சொல்லியும், பாடசாலை களில் படித்து வருவதையும்; நாங்கள் க்ஷத்திரியர், ராஜாபட்டம் எங்களுக்குண்டு எனக் கூறி பூணூல் போட்டுக்கொண்டுள்ள வன்னி யர்களும் தங்கள் பிள்ளைகளை பாடசாலையில் படிக்க 'நாங்கள் பள்ளி ஜாதிகள்' என்று எழுதி யனுப்பி உபகாரச் சம்பளம் பெரு வதையும் (அரசாங்கத்தில் பிற்போக்கான ஆதிதிராவிடர், பள்ளி, அகம்படையான், குறவர், சக்கிலி, தோட்டி என்ற வாதி ஜாதி களுக்கு மாத்திரம் உபகாரச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்திருப் பதால்) மற்ற முதலியார் அகம்படையான் என்று கூறிக் கொள் வதையும் நோக்கினால், ஏன் மற்ற ஜாதியினர் உத்தியோக ஆசையி னால் ஆதிதிராவிடராக மதம் மாறமாட்டார்கள் என்பதை நோக்குங்கள்.

மிலேச்சர் என்று ஒரு காலத்தில் கூறின வகுப்பை பின் பற்றாத, மைலார்ட் என்று சொல்லாத, சலாம் போடாத மற்றும் பல கேவலத் தொழிலிலும் ஈடுபடாத உயர்ஜாதியினர் இந்நாட்டில் இருக்கின்றனரா? வேண்டுமானால் மைனாரிட்டி மதங்க ளாகிய பல மதஸ்தர்களையும உங்கள் சமத்துவம் நிறைந்த மதத்தில் வந்துசேரும்படி கேட்பது அறிவுடைமையாகும். எனவே மெஜாரிட்டி

# அப்பாஜியின் அபார தேச சேவை

[எ. துரைசாமி பீ. ஏ.]

காரைவனம் என்பது நீல சைலத்துக்குப் பக்கத்திலுள்ள ஓர் அழகிய கிராமம். ஊர் நடுவில் காரைவன நாதனின் பெரிய கோவிலும், அதைச்சுற்றி விசாலமான ரதவீதியும் உண்டு. அங்கே எல்லாவகை மதஸ்தரும் ஜாதியரும் இருந்தாலும் ஜனங்களுக்குள் ஒற்றுமை உண்டு. ஊருக்கு இரண்டு பர்லாங் தூரத்தில் ஆதிதிராவிடர் சேரி உண்டு.

அவ்வூரில் கவுண்டர் வீடுகள் சுமார் 300-ம் முதலியார் வீடுகள் 200-க்கு அதிகமாயும் உண்டு. அவ்வூரில் பஞ்சாயத்து போர்டு ஏற்பாடாயிற்று. முதல் தடவையில் A. R. கவுண்டர் அப்போர்டின் பிரசிடெண்டாக இருந்தார். அதற்கடுத்த டர்னில் A. S. முதலியார் பிரசிடென்டானார். அந்த இருவர் காலமும் பஞ்சாயத்து போர்டு என்பது என்ன என்று ஜனங்களுக்குத் தெரியாமலே நடந்து விட்டது. தவிரவும் அந்த இரண்டு ஜாதியாரும் ஒற்றுமையுடன் உழைத்து வந்தனர்.

மூன்றாம் தடவை K. R. கவுண்டர் போட்டியின்றி பிரசிடென்ட் ஆனார். அவர் காலத்தில் ஊர் செழிப்புற்றது. முதலில் எல்லாரும் ஒன்று சேர்ந்தே பாடுபட்டனர். ஆனால் முக்கியமாக பிரசிடென்டின் பெரும் முயற்சியால் அந்த போர்டால் ஊரில் நான்கு பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அவைகளில் ஆணும் பெண்ணும் பல ஜாதி பிள்ளைகளும் (ஆதி திராவிடர்கள் உள்பட) பல மதஸ்தர்களும் ஒன்றுபட்டே வாசித்து வந்தனர். ஊர் பூராவும் தேவலோகம்போல் மின்சார விளக்குகள் போடப்

---

யாக இருக்கும் நீங்கள் எந்த* மைனாரிட்டியில் சேர்ந்தாலும் உங்களை அந்த மைனாரிட்டி மதம் விழுங்கிவிடும். ஆதலால் வீரத்துடன் தனி மதமாக்க போராட முற்படல் வேண்டும். அதற்கு சட்ட திட்டங்கள் வகுக்க, கமிட்டியை ஏற்படுத்த, மகாநாடு கூட்டுங்கள். இது ஒன்றே நன்மை தரும். இதைவிட உங்கள் மதம் மாற்றம் நன்மை தருமா?

பட்டன. மண் ரோடுகளெல்லாம் மெட்டல் ரோடுகளாயின. வீதிக்கு வீதி கிணறுகள் வெட்டப்பட்டன. ஒரு சிறு டிஸ்பென்சரியும் ஏற்பாடாயிற்று.

இவ்வாறாக நாலாவகையிலும் கிராமம் முன்னேற்றமடைந்தது. அப்போது பிரசிடென்டின் புகழும் பரவியது. அது அவ்வாருக, அவ்வூருக்குப் புதிதாகக் குடியேறி இருந்த ஒரு டம்டும் முதலியார் ருக்ஷிகள் செய்ய ஆரம்பித்தார். அவர் பெயர் அப்புக்குட்டி என்பது. 'அவர் வரி கொடுப்போர் சங்கம்' என்று ஒன்று ஏற்படுத்தினர். அதற்கவர் காரியதரிசி. அந்தச் சங்கத்தின் மெம்பர்களெல்லாம் வரி கொடுப்போரே. ஆனல் அக் காரியதரிசிமட்டும் பஞ்சாயத்துக்கு எந்தவிதமான வரியும்செலுத்துவதில்லை. இதென்னையா இது! இவ்வளவு பெரிய மனிதர்க்கு வரி இல்லையென்ருல் இது எட்டாவது அதிசயமாகத்தான் இருக்கிறது. உண்மை என்னவென்ருல், அவருடைய பேருக்கு எந்த விதமான சொத்தும் வைத்துக்கொள்ளப் படாதென்று சர்க்கார் கண்டிப்பான உத்தரவு போட்டிருக்கிருர்கள்.

அது அப்படியிருக்க, அச்சங்கத்தின் நோக்கம், பஞ்சாயத்து போர்டு, பஞ்சாயத்துக் கோர்ட் இவைகளின் ஸ்தானங்களைக் கைப் பற்றுதலாகும். அதற்காக அக்காரியதரிசி அச் சங்கத்தின் மெம்பர் களிடமிருந்து அதிகபணம் திரட்டினர். அநேக மீட்டிங்குகள் கூட்டினர். ஒவ்வொரு மீட்டிங்கிலும், தற்சமயம் இருக்கும் மெம்பர்கள் சரிவரக் காரியங்களைக் கவனிப்பதில்லை யென்றும் தாங்கள் மெம்பர்களானவுடன் அநேக வரிகளை நீக்குவதென்றும், பிரசங்கம் செய்து கொண்டே வந்தனர். இதையொட்டி சங்கத்தின் மூலம் அநேக துண்டுப்பிரசுரங்கள் அப்புக்குட்டி முதலியார் வெளியே விடுத்துள் ளார். அதனடியில், அப்புக்குட்டி முதலி பொதுஜன ஊழியன், வரிகொடுப்போர் சங்கக்காரியதரிசி என்றுதான் கையெழுத்துப் போடுவது. அந்தச் சங்கத்தின் மெம்பர்களில் அநேகர் பி. ஏ., படித்தவர்களும் பெரும் பணக்காரர்களும் இருந்தும் அப்புக்குட்டி முதலியின் சொல்லே செலாவணி ஆய்விட்டது. அவர் நின்ருல் எல்லா மெம்பர்களும் நிற்பார்கள். அவர் உட்கார்ந்தால் மற்றவர் களும் உட்காருவார்கள்.

கடைசியாக பஞ்சாயத்துபோர்டின் எலக்ஷனும் வந்தது. அச் சங்கத்தின் மெம்பர்களில் 7 பேரும் கவுண்டர் கக்ஷியில் 5 பேரும் போர்டின் மெம்பர்களானர்கள். ஓர் பணக்கார முதலியார் பிரசிடெண்ட் ஆனர். ஆனல் போர்டை நடத்துவது அந்த போர்டுக்குச் சம்பந்தமில்லாத அப்பாக்குட்டி முதலிதான், மற்ெருரு முதலியார் —சங்கத்தைச் சேர்ந்தவர்—பி. ஏ., படித்தவர்—பஞ்சாயத்துக் கோர்டின் பிரடெண்ட் ஆனர். என்ருலும் என்ன? அங்கேயும் காரியங்கள் அப்புக்குட்டி முதலி இல்லாமல் நடைபெருது. ஆகையால்

அவருடைய புகழ் காட்டுத்தீப்போல் பரவியது. அதற்காக வரி கொடுப்போர் சங்கம் அவருக்கு 'ஜி' என்ற பட்டம் அளித்தது. அதுமுதற்கொண்டு அப்புக்குட்டி முதலி யென்பதுபோய் அப்பாஜி என்ற பெயர் வழங்கிற்று.

அந்தச் சங்கம் ஜெயித்தவுடன் தனது சத்தியவாக்கின்படி ஜனங்களுக்கு அநேக நன்மைகள் செய்யத் தொடங்கின. முதலாவதாக யானைவரி, சிங்கவரி, எலிவரி, பன்றிவரி, அங்கணவரி முதலியவைகள் நீக்கப்பட்டன. இரண்டாவதாக ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு பள்ளிக்கூடமாயிற்று. அதாவது ஆதிதிராவிட ஸ்கூலென்றும், முகம்மதியர் ஸ்கூலென்றும் ஏற்படுத்தப்பட்டன. முதலில் ஜனங்கள் இது அந்தந்த ஜாதிக்கு நன்மையைத்தரும் என்று நம்பினார்கள். அவர்களுக்கு இது சூதென்று தெரியவில்லை. தனிப் பள்ளிக்கூடங்களினா லேற்படும் கஷ்ட நஷ்டங்களும் ஒற்றுமையில்லாத் தன்மையும் வாசகர்கள் அறிந்ததே. மெட்டல்ரோடுகளெல்லாம் மண் இட்டேரிகளாயின. அந்தக்காலத்தில் பில்கலெக்டர், கிளார்க், டாக்டர், உபாத்தியாயர் முதலியவர்களெல்லாம் அப்பாஜியின் சொந்தக்காரர்கள் தான். முதலில் வேலைபார்த்து வந்தவர்களெல்லாம் நீக்கப்பட்டார்கள். சுருங்கக்கூறின் எல்லாம் நெப்போலியன் இராஜியமாதிரி ஆயிற்று. மாதாமாதம் சட்டப்படி நடக்க வேண்டிய மீட்டிங்குகளும் நடைபெறுவதில்லை!

இம்மாதிரி முதலியார்களுடைய பொதுஜன சேவை ஏழெட்டு வருஷகாலம் நடந்துவந்தது. ஒவ்வொரு எலக்ஷன் காலத்திலும் இரு கக்ஷிக்காரர்களுக்கும் பணம் நஷ்டம் அதிகம். சண்டைகளும் அதிகம். எலக்ஷன் முடிந்ததும் கோர்ட்டில் கேசுகளும் நடக்கும். என்றாலும் அப்பாஜியின் சகாக்களே ஜெயமடைந்து வந்தனர். மேலும் மேலும் ஜெயமுண்டாகவே அவர்களுக்குத் தலைகால் தெரியாமல் போயிற்று.

ஆதிதிராவிடர்களுக்குத் தனிப் பள்ளிக்கூடமும், கிணறுகளும், கோவில்களும் ஏற்படுத்தப்பட்டன. அவர்களுக்கு முதலில் இது சூட்சிகொன்று தெரியவில்லை. பிறகு நாளுக்குநாள் தாங்கள் மனித வர்க்கத்தினின்றும் ஒதுக்கப்பட்டவர்களாக நடத்தப்படுகிறோம் என்பது அவர்களுக்குத் தெரிந்தது. மற்றும் முதலியார் தோட்டங்களிலும், தொழிற்சாலைகளிலும் ஏழைகளுக்குக் கண்டிப்பான வேலை கொடுப்பதாயும், வேலைக்கு வராவிட்டால் அடிப்பதாயும் வதந்திகள் பரவின. எனவே அப்பாஜி—அதாவது முதலியார்கள்—உடைய ஆதிக்கம் குறைய ஆரம்பித்தது. ஆதிதிராவிடர் சங்கம் என்றும் பால்காரர் சங்கம் என்றும், கவுண்டர் சங்கமென்றும், இளைஞர் சங்கம் என்றும் பல சங்கங்கள் ஏற்பாடாயின. பிறகு சொல்லவேண்டுமா சண்டைகளுக்கு!

பார்த்தார் அப்பாஜி; எப்படி தனக்கு மதிப்புச் சம்பாதிப்ப தென்று யோசித்தார்; முதலியார்கள் எல்லாம் ஒரு முயற்சியும் செய்யாமல் வாளாயிருப்பதை நோக்கினர்; இதுதான் சமயம் என்று நினைத்து விடுத்தார் ஒரு துண்டுப் பிரசுரம். அது என்னவென்றால் 'தோழர்களே! நான் பொதுஜன சேவையிலிருந்து 2 மாதத்திற்கு விலகிக்கொள்ளவேண்டி யிருக்கிறது. ஏனென்றால் எனக்கு உடம் புக்குச் சௌக்கியமில்லை. மேலும் என் வியாபாரத்தையும் கொஞ் சங் கவனிக்க வேண்டும்' என்று எழுதியிருந்தது. அப்படி விளம்பரஞ் செய்தால்தான் ஜனங்களெல்லாம் தன்னை வந்து கூப்பிடுவார்கள் என்றும் யோசனை கேட்பார்களென்றும் நினைத்தார் அப்பாஜி.

ஆனால் அவருடைய காரியம் பலிக்கவில்லை. இரண்டு வருஷ காலமாக எலக்ஷன் கேஸ் ஒன்று கோர்ட்டில் நடக்கிறது. அது தவிர பல அடிதடிக் கேசுகளும் நடந்துகொண்டே யிருக்கின்றன. முதலியார்களுடைய வியாபாரமும் குறைந்துகொண்டே வந்தன. அவர்களுடைய சுண்ணாம்புக் காளவாயும், நெல் மிஷன்களும் பருத் திச் சாலையும் அச்சாபீசும் வேலையின்றிப் பூட்டப்பட்டிருக்கின்றன. இவைகளோடு வைகோ ஜில்லாவிலுள்ள (இக்கிராமம் இருக்கும் ஜில்லாவின் பெயர்) எல்லா பஞ்சாயத்து போர்டுகளையும் சர்க்கார் எடுத்து விடுவதாக ஒரு வதந்தியும் உலாவிற்று. எனவே முதலி யார்கள் அப்பாஜியைக் கைவிட்டனர். கடவுள்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு வாளாயிருந்தனர்.

இதற்கிடையில் எதிர்க்கக்ஷிக்காரர்கள் லோகல் போர்டு இன்ஸ் பெக்டருக்கும் டிஸ்டிரிக்ட் போர்டுக்கும் செக்ரடரிக்கும் காரைவன போர்டின் நடத்தையைப்பற்றி தினம் ஒரு கடிதமாவது எழுதிக் கொண்டே இருந்தனர். சற்றேறக்குறைய இதே மாதிரி ரிப்போர்ட் கள் வைகோ ஜில்லாவிலுள்ள அநேக பஞ்சாயத்து போர்டுகளி லிருந்தும் வந்து இன்ஸ்பெக்டர் ஆபீசில் குவிந்துகொண்டே இருந்தன.

எனவே நமது இராஜதானியிலுள்ள ஜில்லாக்களில் வைகோஜில் லாவிலுள்ள பஞ்சாயத்துபோர்டுகளைப்பற்றியரிப்போர்டே அதிகமா யிருந்தது. முடிவில் சர்க்கார் மேற்படி ஜில்லாவிலுள்ள பஞ்சாயத்து போர்டுகளை எல்லாம் எடுத்து விட்டார்கள்.

அப்பாடா என்று பெருமூச்சு விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார் அப்பாஜி. தான் நினைத்த காரியம் இப்பொழுதுதான் முடிந்தது என்று பெருமை பேசினர். அதாவது பஞ்சாயத்துப் போனால் போகட்

டும், கவுண்டர்கள் மெம்பர்களாகப் படாது என்பதுதான் எனது கோரிக்கை' என்ருர். பேஷ்! இப்பேற்பட்ட பொதுஜன ஊழியர்கள் இந்தியாவில் இருக்கும் வரைக்கும் இந்தியர்களின் முற்போக்குக்கு என்ன குறைவு? இப்பொழுதுதான் நினைவுக்கு வருகிறது. யாரோ ஒருவர் சொன்னரே 'மகன் செத்தாலும் சாகட்டும் மருமகள் கைம் பெண்ணுக வேண்டும்' என்று, அது நம் அப்பாஜியா யிருக்கலாமோ என்னமோ.

அப்பாஜியின் சமாச்சாரம் இப்படி யிருக்க, ஊரிலுள்ளவர்கள், 'அப்பாக்குட்டி வந்த பிறகுதான் நம் ஊரில் இரண்டு கக்ஷிகள் உண்டாயின. அவன் தலையெடுத்த பிறகுதான் தாலுகா போர்டு மெம்பரும் விசனமுற்றிருக்கிருர். முடிவில் அவனுலேதான் நமது ஜில்லாவுக்கே ஒரு மானக்கேடு உண்டாயிற்று' என்று பலவாறாகப் பேசத் தொடங்கவே, பழைய அப்புக்குட்டி இந்த ஊரைவிட்டுக் கம்பி நீட்டினர். வாசகர்களே அப்புக்குட்டி முதலியார் தற்சமயம் எங்கே இருக்கிருர் என்று உங்களுக்குத் தெரியுமா?


## காஞ்சீபுரம் பட்டு சேலைகள்

பிரபுக்கள், வியாபாரிகள், எளியவர்கள் முதல் எங்களிடம் நம்பிக்கையாய் வாங்குகிருர்கள்.

உண்மை நம்பிக்கை! நாகரீகம்!!
கெட்டிச்சாயம்!!! விலை சகாயம்!!!!

சொந்தத் தறியில் தயாரிப்பது.

$2\frac{3}{4}$, $2\frac{1}{2}$, $2\frac{1}{4}$, அகலம் 20, 19, 18, 16, 12, முழத்தில் ஜரிகை பெரிய பேட்டு, சின்ன பேட்டு, பலவிதமான பேட்டு, சாதா டிக்கட்டு கரை, கார்டு கரை சேலைகளும், ஷீட்டித் தாடை, பாவாடை ரவிக்கைகளும், இதல்லாமல் இன்னும் பலவூர் ஜவுளி தினுசுகளும் நம்மிடம் கிடைக்கும். நம்மிடத்தில் ஒரு தரம் வாங்குகிறவர்கள் எக்காலத்திலும் நம்மிடமே தான் வாங்குவார்கள். இவையல்லாமல் அவரவர் இஷ்டப்படி தேவையான ரகங்களை தயார் செய்து குறிப்பிட்ட காலத்தில் சப்ளை செய்யப்படும்.

பெ. மு. கிருஷ்ணசாமி முதலியார்,
பட்டு ஜரிகை ஜவுளி வியாபாரம்,
459, ஆடிசன் பேட்டை, காஞ்சீபுரம்.

# கோமளசேகரன்

[S. A. சிதம்பரம்]

## 1-வது அத்தியாயம்



தில்லையம்பதியின் புறத்தே சிறந்த உத்தியானவனம் ஒன்றுண்டு. ஆங்கு நறுமணம் தருகின்றவையும் அழகியதுமான ரோஜா, முல்லை, மாதவி, நந்தியாவட்டை, இருவாட்சி, செண்பகம், முதலிய மலர்கள் நிறைந்த செடிகள் ஒழுங்காகவும் பத்திபத்தியாகவும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் ஊடே ஆங்காங்கு ஓங்கிச் செழித்த கோங்கு, வேங்கை, புன்னை, பாடலம், கொய்யா, மாதுளை, மா, பலா, அசோகு ஆகிய மரங்கள் தீங்கனிகளையும் நறுமலர்களையும் தந்து நிற்கின்றன. அப் பூங்காவிற்குள் கல் துறையால் சூழப்பட்ட குளிர்ந்த தடாகம் ஒன்றுண்டு. அத்தடாகத்தில் தாமரை தளிர்த்து செழித்துப் பூத்திருக்கும். அத்தடாகத்தில் அன்னங்கள் ஒய்யாரமாய் அமர்ந்திருக்கும் அச்சோலையில் மணங்கமழ மலர்ந்திருக்கும் புஷ்பங்களிலுள்ள தேனைப்பருகிய வண்டினங்கள் மது உண்டதனால் ஏற்பட்ட மயக்கத்தால் ரீங்காரமிடுதல் சுதிபோலவும், மாமரக் குயில்கள் பாடுவது தேர்ச்சி பெற்ற வித்வான்கள் சுதியோடு கலந்து பாடுவதுபோலவும், மரங்கொத்தி என்னும் பக்ஷிகள் மாக்கிளைகளில் கொத்துவதால் உண்டாகும் சப்தம் பாட்டுக்கிசைய தாளம் போடுவதுபோலவும், நீர்த்துறைகள்தோறும் மோதும் அலைகளின் அதிர்ச்சி மிருதங்கம் வாசிப்பதுபோலவும், அருகே மயில் ஆடுவது பாட்டு, மிருதங்கம், தாளம் முதலியவற்றிற் கேற்ப தாசி நடனம் புரிவதுபோலவும் இருந்தன. இவ்விதம் அமைந்த இயல் இசையோடு நன்னிய நாடகம் நடப்பதைக்கண்டு தேவர்கள் பொன்மாறி பொழிவது ஒப்ப புன்னை மரங்கள் மஞ்சள் நிறம் பொருந்திய அம்மலர்களை உதிர்க்கும். கற்றுறைகளில் அலைகள் மோதுவதால் சிதறும் நீர்த்துளிகள் இயல் இசை நாடகவல்லுனரைக்களிக்கும் சேதுகாவலர் திலகங்கள்போல விளங்கிய இந்நந்தவனத்தில், ஓர் வாலிபன் கீழ்த்திசையை நோக்கியவண்ணமாய்ச் சுற்றி வரலாயினன். அவன் ஏதோ ஒரு பொருளைத் தேடித் திரிபவனைப்போல பலவிடங்களிலும் கவனத்தைச் செலுத்துவதாயினன்.

அவ்வாறு சுற்றும் ஆடவன் திடீரென நின்று வடதிசையில் கவனிக்கலாயினன். 'அந்தோ! என்னை இவ்வேளை காப்பாற்றுப

வர் ஒருவரும் இல்லையா' என்ற சப்தம் கேட்க, 'இங்கு மனுஷ சஞ்சாரமே கிடையாது. ஏதோ பெண்ணின் குரல் கேட்கின்றதே, என்னவென்று பார்ப்போம்' என்று சொல்லிக்கொண்டு சத்தம் உண்டாகும் திக்கை நோக்கி நடக்கலாயினன். அவன் மனதில் ஒன்றன்பின் ஒன்ருக பல எண்ணங்கள் உதித்து ஓடி மறைந்தன. ஆடவனும் சீக்கிரத்தில் சத்தம் உண்டான இடத்தை அடைந்து அங்கு பலவாறு புலம்பும் காரிகையைக் கண்டனன். அவள் நிலைமையை அறிந்த அவன் திடீரென்று நேரில் வராமல் 'என்ன நடக்கிறது என்று பார்ப்போம்' என்று எண்ணியவனுய் பக்கத்தில் ஓங்கி வளர்ந்திருந்த புன்னைமரத்தின்பின் மறைந்து நின்று அக்காரிகை புலம்புவதைக் கேட்கலாயினன்.



'எனக்கு இந்த உலகம் அந்தகாரமாகத் தோன்றுகிறது. கணவரைவிட்டு நீங்கிய பெண்கள் கலியுகத்தில் உயிர் வாழ்வது எதற்காக? காதலனைப் பிரிந்து உயிர்வாழும் காரிகைகள் கண்களை இழந்த, பைத்தியம் பிடித்தவர்களுக்குச் சமானமாவார்கள். ஆ! அந்தோ கெட்டேன். இன்பமாக தங்களோடு துன்பம் என்பதே அறியாமல் இருந்தேனே. கண்ணை இமை காப்பதுபோல காத்து வந்தீர்களே. நீங்கள் எங்குச் சென்றீர்கள்? தங்களைப் பிரிந்து நான் எப்படி உயிர் வாழ்வேன்?

'கொடியே னிவைகாண கிலேனுயர் கோள்
முடியா நமனே முறையோ முறையோ
அடியா விருள்வா யெனை வீசினையோ
அடியே னுயிரே அருள்நாயகனே'

என்று பலவாருக வருந்தும் காரிகையின் பக்கம் சென்று அவளை நோக்கி,

வாலிபன்:—பெண்ணே நீ யார்? நீ ஏன் இவ்விதம் வருந்துகின்றனை? உன்னை நோக்கின் துக்கம் என்ற அலையில் தாக்கி அதனல் உடல் சோர்ந்து மெய்தளர்ந்து காண்கின்றனை. உனக்கு உற்ற துயரமென்? அவைகளைச் சொல்லின் என்னுலியன்றவரை உனக்கு உதவிபுரிகின்றேன்.

மாது (திடுக்கிட்டவளாய்) சற்றுநேரம் மௌனமுற்று பின்னர் ஒருவாறு மனதை தைரியப்படுத்திக்கொண்டு 'நான் யாராக இருந்தால்தான் தங்களுக்கென்ன? நீங்கள் என்னைப்பற்றி கவலைப்படவேண்டிய அவசியம் ஒன்றுமில்லையே. ஒருவருமில்லாத வனத்தில் என்னுடன் வார்த்தையாடுவது தகுதியல்ல தயவுசெய்து தாங்கள் தங்கள் வேலையை கவனித்துச் செல்லுங்கள்' எனப் புகன்றனள்.

வாலி:—மாதே என்ன கூறுகின்றனை? விஷயம் ஆச்சரியமாக இருக்கின்றதே! மானிடராகப் பிறந்த நமக்கு சுகம், துக்கம் இவை இரண்டும் மாறிமாறி வருவது சகஜமே. இதைநம்போன்றவர்கள் அனுபவிப்பது எளிதுதானே. நீ வருந்துவதைக் கேட்க கல்லும் கரையுமே. புல்லும் உருகுமே. நான் உன் நிலைமையை கண்ணால் கண்டும், நீ கலங்கி வருந்தியதைக் காதால் கேட்டும் உனக்குற்ற குறையை விசாரித்து அதற்கு வேண்டிய உதவி செய்யாமற் போனால் கேவலம் புல்பூண்டு இவைகட்கும் கீழ்ப்பட்டவனாவேன். நான் உனக்குற்ற குறையை நீக்கி உபகாரம் செய்வேனென்ற நம்பிக்கை என் பேரில் உனக்கேற்படவில்லையா? நான் இவ்வளவு சொல்லியும் உன் மனம் இணங்கவில்லையா? ஈசா உனக்கும் கண்ணில்லையா? ஒருவருக்கும் ஓர் உதவிகூட செய்யாத இந்த நாறற உடலை இனி விரும்பேன் நீ தான் துணை' என்று சொல்லி பூமியில் விழுந்து மூர்ச்சை அடைந்தவனைப் போலாயினன்.

மாது:—ஏதடா இது. 'காசிக்குச்சென்றாலும் கர்மம் தொலையாது' என்பதுபோல் காதலனைப் பிரிந்து கலங்கிய மனதை ஒருவாறு சமாதானம் செய்து கொள்ளும்பொருட்டு இங்குவந்த நமக்கு, இந்த இடையூறுகளுமா வரவேண்டும்? ஜெகதீசா! இதுவும் உன் திருவிளையாடலோ' என்று சொல்லிக்கொண்டு, சற்று மௌனமுற்று வேறு ஒருவருமில்லாமையால் தானே நேரில் சென்று தடாகத்திலுள்ள தண்ணீரைத் தன் புடவையின் தலைப்பில் நனைத்துக் கொண்டுவந்து முகத்தில் தெளித்து மூர்ச்சை தெளியும்படிச் செய்தனள்.

